ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ க்ருஷ்ணத்வைபாயநாய நம:

# ஸ்ரீ மஹாபாரதம்

## ஸௌப்திகபர்வம்.

---

### முதலாவது அத்யாயம்.

### ஸௌப்திகபர்வம்.

*நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம் |
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ||

(அஸ்வத்தாமாமுதலியோர் கானகத்தில் ஓர் ஆலமரத்தினடியில் உட்கார்ந்ததும், அங்கே ஒருகோட்டான் பலகாக்கைகளைக் கொல்லக்கண்டு அஸ்வத்தாமா தானும் பாண்டவர்களை அவ்விதம் கொல்ல நிச்சயித்துக் கிருபரையும் கிருத வர்மாவையும் எழுப்பித் தாம்செய்ய விரும்பி னதைச்சொல்லி ஆலோசித்ததும்.)

பிறகு, (அஸ்வத்தாமா கிருபர் க்ருதவர்மாஆகிய) அவர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து தெற்குத்திக்கைநோக்கிச் சென்றார்கள். ஸூர்யாஸ்தமனவேளைக்கு ஸமீபகாலத்தில் பாண்டவர்களுடைய பாசறைக்குச் சமீபத்தில் வந்தார்கள். அவர்கள் குதிரைகளை விட்டு விட்டு விரைவுடன் பாண்டவஸேனாவீரர்கள் தங்களை அறிந்துவிடுவார்களோவென்று பயந்து, பிரவேசிக்கமுடியாத ஒருவனப்ரதேசத்தையணுகி மறைவாக அதனுள் நுழைந்தார்கள். கூர்மையான சஸ்திரங்களால் அறுக்கப்பட்டவர்களும் எல்லாப்பக்கங்களிலும் காயப்படுத்தப்பட்டவர்களுமான அவர்கள் பெருமூச்செறிந்துகொண்டும் பாண்டவர்களை நினைத்துக்கொண்டும் பாண்டவஸேனாவீரர்களுடைய பாசறைக்குச் சிறிது தூரத்தில் தங்கியிருந்தார்கள். ஜயத்தில் விருப்பமுள்ளவர்களான பாண்டவர்களுடைய கோரமான

---

* இதன் உரைவிசேஷங்களை முன்பர்வங்களின் தொடக்கத்தில் காண்க

சப்தத்தைக்கேட்டு, பின் தொடர்ந்துவருவார்களோ என்கிற பயத்தி னால் மீண்டும் கீழ்த்திசையை நோக்கி ஓடினார்கள். கோபத்துக்கும் பொறாமைக்கும் வசப்பட்டவர்களான அந்தச் சிறந்த வில்லாளிகள் அவ்விடத்தினின்று ஒருமுகூர்த்தகாலம் நடந்துசென்று, களைத்த குதிரைகளையுடையவர்களும் தாகமுள்ளவர்களும் அரசனுடைய வதத்தினால் ஸந்தாபத்தை அடைந்தவர்களும் ஸஹிக்காதவர்களு மாகி, ஒருமுகூர்த்தகாலம் பேசாமலிருந்தார்கள்'' என்றான்.

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! பதினாயிரம் யானைகளுக்கு ஸம மான பலத்தையுடைய என் புத்திரன் கொல்லப்பட்டதாகிய பீமனால் செய்யப்பட்ட இந்தக்காரியம் நம்பத்தகாதது. ஸஞ்சய! எல்லாப் பிராணிகளாலும் கொல்லத்தகாதவனும் வஜ்ரம்போன்ற தேகத்தை யுடையவனும் யௌவனமுள்ளவனுமான என்னுடைய புத்திரன் யுத்தத்தில் பாண்டவர்களால் கொல்லப்பட்டான். கவல்கணகுமார! யுத்தத்தில் ஒன்றுகூடிப் பார்த்தர்களால் என்னுடைய புத்திரன் கொல்லப்பட்ட காரணத்தினால் மனிதர்களால் தெய்வமானது தாண்ட முடியாதது. ஸஞ்சய! நூறு புத்திரர்களும் கொல்லப்பட்டார்க ளென்பதைக்கேட்டும் ஆயிரம் துண்டாகச் சிதறாமலிருப்பதினால் என் உள்ளம் உருக்குமயமானது; இது நிச்சயம். புத்திரர்களைச் சாகக் கொடுத்துப் பிராயமுதிர்ந்த நாய் நங்கையர் இருவரும் எவ்வாறு இருப் பார்? பாண்டு புத்திரனுடைய தேசத்தில் வஸிப்பதற்கு நான்பிரியப் படவில்லை. ஸஞ்சய! நான் அரசனுக்குப் பிதாவாகவும் நானே அர சனாகவுமிருந்துவிட்டு, எவ்வாறு பாண்டுபுத்திரனுடைய கட்டளைப் படி கிங்கரனாக நடந்துகொள்வேன்? ஸஞ்சய! பூமி முழுதையும் அனுபவித்து (அரசர்களுடைய) முடியில் நிலைபெற்று நின்றவனான நான் கெட்ட முடிவை உண்டு பண்ணிக்கொண்டு இப்பொழுது எவ்வாறு (யுதிஷ்டிரனுக்கு) அடிமை செய்கிறவனாவேன்? ஸஞ்சய! எவன் ஒருவனால் என்னுடைய நூறு பிள்ளைகளும் மிகுதியின்றிக் கொல்லப்பட்டார்களோ அப்படிப்பட்ட பீமனுடைய வாக்கியங்களை நான் எவ்வாறு கேட்கச் சக்தியுள்ளவனாவேன்? ஸஞ்சய! மஹாத் மாவான அந்த விதுரனுடைய வசனத்தை அனுஷ்டிக்காதவனான என்னுடைய புத்திரனால் அவனுடைய வசனம் ஸத்யமாகச் செய்யப் பட்டது. ஐயனே! ஸஞ்சய! என்னுடைய புத்திரனான துர்யோத னன் அதர்மத்தினால் கொல்லப்பட்ட பிறகு, கிருதவர்மாவும் கிரு பரும் அஸ்வத்தாமாவும் யாது செய்தனர்?'' என்றுவினவ,ஸஞ்சயன் சொல்லத்தொடங்கினான்.

"அரசரே! மனஉறுதியுள்ளவர்களான உம்மைச்சார்ந்த வீரர்கள், சிறிதுதூரம் சென்று பற்பலவிருக்ஷங்களோடும் கொடிகளோடுங் கூடின கோரமான கானகத்தைக் கண்டார்கள். அவர்கள் தண்ணீர் குடித்த சிறந்த குதிரைகளுடன்கூட ஒரு முகூர்த்தகாலம் இளைப்பாறித் துர்யோதனனுடைய கட்டளைப்படி ஸூர்யாஸ்தமன வேளையில் பற்பலமிருகக் கூட்டங்களால் அடையப்பட்டதும் பற்பலபக்ஷிகளால் நிரம்பியதும் பற்பலவிருக்ஷங்களாலும் கொடிகளாலும் மூடப்பட்டதும் பற்பலகொடியபாம்புகளால் அடையப்பட்டதும் நீர் நிரம்பிய பற்பலதடாகங்களால் விளங்குகின்றதும் அநேகந்தாமரைஓடைகளால் நன்றாகமூடப்பட்டதும் கருநெய்தல்களுடன்கூடினதும் கோரமாயிருப்பதுமான அப்படிப்பட்டகாட்டில் நுழைந்து நான்கு பக்கங்களிலும்பார்த்து, பிறகு, அனேகம்கிளைகளால் சூழப்பட்ட ஓர் ஆலமரத்தைக் கண்டார்கள். அரசரே! அப்பொழுது புருஷஶ்ரேஷ்டர்களான அந்தமஹாரதர்கள் அந்த ஆலமரத்தின் அருகிற்சென்று, சிறந்த அந்த *வனஸ்பதியைப்பார்த்தார்கள். பிரபுவே! அவர்கள் ரதங்களினின்று இறங்கிக் குதிரைகளை அவிழ்த்துவிட்டு விதிப்படி ஆசமனம்செய்து ஸந்தியை உபாஸித்தார்கள். பிறகு, ஸூர்யன் பர்வதங்களுள் சிறந்தஅஸ்தகிரியை அடையவே, எல்லாஉலகத்தையும் வளர்ப்பதானஇரவு வந்துவிட்டது. பரவியிருக்கின்ற கிரகங்களாலும் மற்ற அஶ்வினிமுதலிய நக்ஷத்ரங்களாலும் நான்குபக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டஆகாயமானது (ராத்திரியாகிறபெண்ணுக்கு)அழகியவஸ்திரம்போல் விளங்கியது. இரவில் ஸஞ்சரிப்பவைகளான பிராணிகளெல்லாம் இஷ்டப்படி கூத்தாடின. பகலில்ஸஞ்சரிக்கின்ற பிராணிகள் நித்திரைக்கு வசப்பட்டன. இரவில்ஸஞ்சரிக்கின்ற பிராணிகளுடைய பயங்கரமான சப்தமானது தோன்றியது. மாம்ஸத்தில் விருப்பமுள்ளவர்களான ராக்ஷஸர்களும் மிக்கஸந்தோஷத்தை அடைந்தார்கள். கோரமானஇரவும் வந்தது. பயங்கரமான அந்தராத்திரியின் தொடக்கத்தில் கிருதவர்மாவும் கிருபரும் அஶ்வத்தாமாவும் துக்கத்தோடும்சோகத்தோடும்கூடியவர்களாகச் சேர்ந்து நெருங்கி உட்கார்ந்தார்கள். ஆலமரத்துக்குஅருகில் நெருங்கியிருந்து, நடந்த குருபாண்டவவீரர்களுடைய அப்படிப்பட்டநாசத்தையே (நினைத்து) துக்கித்து அதிகசிரமத்துடன் பற்பலபாணங்களால் காயப்படுத்தப்பட்டவர்களான அம்மூவரும், நித்திரையினால் வியாபிக்கப்பட்ட அங்கங்களையுடையவர்களாகப் பூமியில்உட்கார்ந்தார்கள். பிறகு,

பூவாமற்காய்க்கும் மரம்; ஆதிபர்வம், 244-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

ஸுகத்துக்கே தகுந்தவர்களும் துக்கத்தை அனுபவிக்கத் தகாதவர்களும் மஹாபலசாலிகளுமான கிருபரும் கிருதவர்மாவும் பூமியில் உட்கார்ந்து நித்திரைக்குவசப்பட்டார்கள். மகாராஜரே! ஸர்வோத்தமமான சயனத்தில் படுப்பவர்களான அந்தமகாரதர்களிருவரும் அந்தஇடத்தில் பூமியிலேயே அநாதர்கள்போல் உறங்கினார்கள். பாரதரே! அந்தத்துரோணபுத்திரரோ மிக்கசினமும் பொறாமையும் மேலிட்டு ஸர்ப்பம்போலச்சீறிக்கொண்டு தூங்கவேயில்லை. அவர் அடங்காதகோபத்தினால் எரிக்கப்பட்டு நித்திரையை அடையவே இல்லை. மிக்கபுஜபலமுள்ள அஸ்வத்தாமா கோரமானகாட்சியையுடைய அந்தக்காட்டைப்பார்த்தார். மிகுந்தபுஜபலமுள்ள அஸ்வத்தாமா பற்பலமிருகங்களாலடையப்பட்ட வனத்தைப்பார்த்து வாயஸங்களால் சூழப்பட்ட ஆலமரத்தைப்பார்த்தார். கௌரவரே! அந்தமரத்தில் ஆயிரக்கணக்கானகாகங்கள் தனித்தனியாகக் கூடுகளை ஆதாரமாகக்கொண்டு ஸுகமாகஉறங்கி அந்தஇரவைப் போக்கிக்கொண்டிருந்தன. அந்தக்காகங்கள் கவலையற்று ஸுகமாக நான்கு பக்கத்திலும் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது, திடீரென்றுவந்ததும் பயங்கரமான காட்சியுள்ளதும் பெரியசத்தமும் பெரியதேகமும் மரகதப்பச்சைபோன்றகண்களும் கீரிபோல்பிங்களவர்ணமும் மிக்க கூர்மையுள்ளமூக்கும் நகங்களுமுடையதும் கருடன்போல்வேகமுள்ளதுமான ஒருகோட்டானை அஸ்வத்தாமாகண்டார். பாரதரே! பிறகு, அந்தப்பக்ஷியானது மெதுவாகச் சப்தித்துக்கொண்டு பதுங்குவதுபோல அந்தஆலமரத்தின்கிளையில் பிரவேசித்தது. வாயஸங்களுக்குப் பகையான அந்தப்பக்ஷியானது ஆலமரத்தின்கிளையில்உட்கார்ந்து, நிர்ப்பயமாகத்தூங்கிக்கொண்டிருந்த காக்கைகளைக்கொல்லத் தொடங்கியது. கால்களைஆயுதமாகக்கொண்டஅந்தக்கோட்டானானது சிலகாக்கைகளுடைய சிறகுகளைமுறித்தது; தலைகளை அறுத்தது; சிலகாக்கைகளின்கால்களை ஒடித்தது. பலசாலியான அந்தக்கோட்டான் எந்தப்பக்ஷிகள் தன்னுடையகண்ணுக்கு எதிர்ப்பட்டனவோ அவைகளை க்ஷணத்திற்குள்கொன்றது. அரசரே! அவைகளுடைய சரீரத்தின்உறுப்புக்களாலும் சரீரங்களாலும் மலைபோன்றதும் வட்டமாயிருப்பதுமான ஆலமரமுழுவதும் மூடப்பட்டுவிட்டது. பிறகு, பகைவர்களை அழிக்குந்திறமைபொருந்தியதான அந்தக்கோட்டானானது அந்தக்காக்கைகளைக்கொன்று பகையாளிகளுக்குத் தன்னிஷ்டப்படி பிரதிஅபகாரத்தைச்செய்து ஸந்தோஷமுள்ளதாயிற்று. இரவில் கோட்டானால்செய்யப்பட்ட அப்படிப்பட்ட அந்தச்செய்கை

யைக்கண்டு துரோணபுத்திரர் தாமும் அவ்விதகபடகார்யத்தில் எண்ணங்கொண்டவராக ஒருவராகஆலோசித்தார். 'இந்தப்பக்ஷியினால் யுத்தவிஷயத்தில் எனக்கு உபதேசஞ்செய்யப்பட்டது. பகைவர்களை நாசஞ்செய்வது யுக்தம். (அதற்குக்) காலமும்வந்துவிட்டதென்பது என்னுடையஎண்ணம். ஜயத்தினால்பிரகாசிப்பவர்களும் பலசாலிகளும் ஊக்கமுள்ளவர்களும் அஸ்திரசஸ்திரங்களில் நல்லகைப்பழக்கமுள்ளவர்களும் அடிக்குந்திறமையுள்ளவர்களுமான பாண்டவர்கள் என்றால் இப்பொழுது கொல்வதற்கு ஸாத்தியப்படாதவர்கள். எரிகிற நெருப்பின்ஜ்வாலையில்விழுந்து விட்டில் உயிரை இழப்பதுபோலத் தன்னை அழியச்செய்வதான செய்கையைப்பின்பற்றி அரசன்முன்னிலையில் அவர்களுடையவ்தம் என்றால்பிரதிஜ்ஞைசெய்யப்பட்டது. நியாயம்தவறாமல் யுத்தஞ்செய்வதனால் உயிர்போவது நிச்சயம். கபடத்தினாலோ ஸித்தியானது உண்டாகும். சத்துருக்களுக்கும் பெரிதான க்ஷயம்உண்டாகும். அவ்விரண்டினுள் ஸந்தேகத்துக்கிடமானபயனைக்காட்டிலும் ஸந்தேகமில்லாதபயனே சிறந்ததாகும். அர்த்தசாஸ்திரத்தில் ஸமர்த்தர்களான அந்தஜனங்கள் அதனைக் கொண்டாடுகிறார்கள். இந்தப்பலஸித்திவிஷயத்தில் எந்தக்கார்யம் இகழப்பட்டதாகவும் உலகத்தோரால் நிந்திக்கப்பட்டதாகவுமிருக்குமோ அந்தக்கார்யமும் க்ஷத்திரியதர்மத்தில் நிற்கின்றமனிதனால்செய்யத்தக்கது. சீரிடப்படாதபுத்தியுள்ளவர்களான பாண்டவர்களால் அடிக்கடி நிந்திக்கப்பட்டவைகளும் இகழத்தக்கவைகளும் கபடத்துடன் கூடியவைகளுமான கார்யங்கள் செய்யப்பட்டேயிருக்கின்றன. இந்த விஷயத்தில் முற்காலத்தில் தர்மத்தை நன்றாகஅறிந்தவர்களும் நியாயத்தைப்பார்க்கின்றவர்களும், தத்வத்தைக்கண்டறிகிறவர்களுமான மஹான்களால் தத்வார்த்தங்களுடன்கூடின சுலோகங்கள் கூறப்பட்டிருப்பதாகக்கேட்கப்படுகின்றன. அவற்றின்பொருள், 'சத்துருக்களின்படையானது, களைத்திருக்கும் ஸமயத்திலோ பிளக்கப்பட்டிருக்குந்தருணத்திலோ சாப்பிடும்பொழுதோ பிரயாணஸமயத்திலோ பிரவேசிக்கும்பொழுதோ சத்துருக்களால் அடிக்கத்தக்கது. எந்தச் சேனையானது நடுநிசியில் நித்திரையினால் பீடிக்கப்பட்டதாகவாவது அவ்வாறே தலைவர்கள் அற்றதாகவாவது யுத்தவீரர்கள் பிரிந்து போனதாகவாவது இரண்டாகப் பிரிந்து எதிர்த்ததாகவாவது இருக்குமோ அது அடிக்கத்தக்கது' என்பது' என்று துரோணபுத்திரர் இவ்வாறு ஆலோசித்து, இரவில் தூங்கிக்கொண்டிருக்கிற பாஞ்சாலர்களுடன்கூடின பாண்டவர்களைக் கொல்வதில்

நிச்சயம் செய்தார். அவர் குரூரமான எண்ணத்தைக்கொண்டு அடிக்கடி நன்ருக நிச்சயித்து, தூங்கிக்கொண்டிருக்கிற அந்த மாதுலரையும் கிருதவர்மாவையும் எழுப்பினுர். விழித்துக்கொண்டவர்களும் மஹாத்மாக்களும் மஹாபலசாலிகளுமான கிருபர் கிருதவர்மா இருவரும் வெட்கத்திஞல் மூடப்பட்டவர்களாகி அந்தச்சமயத்தில் தகுந்த உத்தரம் சொல்லவில்லை. அவர் ஒருமுகூர்த்தகாலம் ஆலோசித்து அவ்விருவர்களையும் பார்த்து, 'யாருக்காக நமக்குப் பாண்டவர்களோடு தொடர்ச்சியான வைரம் ஏற்பட்டதோ அந்த மஹாபலசாலியும் நிகரற்றவீரனும் ராஜாவுமான துரியோதனன் கொல்லப்பட்டான். யுத்தத்தில் சுத்தவீரனும் பதிஞேர் அக்ஷௌஹிணீ ஸேனைகளுக்குத்தலைவனும் ஒருவனுமாயிருந்த துர்யோதனன், அல்பர்களான அனேகர்களால் சூழப்பட்டுப் பீமஸேனஞல் நாசம் பண்ணப்பட்டான். ஸாம்ராஜ்யாபிஷேகஞ் செய்யப்பட்ட முடியுள்ள துர்யோதனனுடைய தலையைக் காலால் மிதித்த அல்பஞன பீமஸேனஞல் மிக்க கொடுமையான இந்தக்கார்யம் செய்யப்பட்டது. பாஞ்சாலர்கள் மிகுதியாகக் கர்ஜிக்கின்றார்கள்; ஸிம்மநாதம் செய்கின்றார்கள்; சிரிக்கின்றார்கள்; சங்கங்களை ஊதுகின்றார்கள்; நூறுநூருகஸந்துஷ்டர்களாகத் துந்துபிகளை அடிக்கின்றார்கள். சங்கத்வனிகளோடு கலந்ததும் நெருங்கினதும் கோரமாயுள்ளதுமான வாத்தியகோஷமானது காற்றினுல் பரவும்படி செய்யப்பட்டுத் திசைகளைநிரப்புவதுபோலிருக்கின்றது. இதோ கனைக்கின்ற குதிரைகளின் சப்தமும் கர்ஜிக்கின்ற யானைகளுடைய கர்ஜனமும் சூரர்களுடைய ஸிம்மநாதமும் மிக்க பெரிதாகக் கேட்கப்படுகின்றன. கீழ்த்திசையை ஆஸ்ரயித்து மிக்க ஸந்தோஷத்துடன் செல்லுகின்ற (பாண்டவ ஸேனுவீரர்களுடைய) மயிர்க்கூச்சத்தை உண்டுபண்ணுகிற தேருருளைகளின் நேமியொலிகள் கேட்கப்படுகின்றன. பாண்டவர்களால் கௌரவர்களுடைய வதமானது இவ்வாறுசெய்யப்பட்டுவிட்டது. இந்த மஹாஆபத்தில் நாம் மூன்றுபேர்கள்தாம் மிகுந்தோம். அந்த வதத்தில், நூறு யானை பலமுள்ளவர் சிலரும் எல்லா அஸ்திரங்களையுமறிந்தவர் சிலரும் பாண்டவர்களால் கொல்லப்பட்டார்கள். காலத்தின்மாறுபாடென்று எண்ணுகிறேன். செய்யமுடியாத முயற்சி செய்யப்பட்டிருந்தபோதிலும், இந்தக்கார்யத்துக்கு இவ்விதமாக முடிவுஏற்பட்ட காரணத்திஞல், நிச்சயமாக இந்தக்கார்யம் உண்மையில் இவ்வாறு ஆகத்தக்கதே. உங்களிருவருக்கும் மோகத்திஞல் அறிவுகுறையாமலிருக்குமேயாகில், இந்தமஹாவியஸனத்தில் எது நமக்கு நன்மையை விளைவிக்குமோ அப்படிப்பட்டகார்யத்தைச் சொல்லவேண்டும்' என்றுகூறினுர்.

## இரண்டாவது அத்யாயம்.

## ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(கிருபர் செய்யவேண்டியவிஷயத்தை அச்வத்தாமாவுக்கு உபதேசித்தது.)

கிருபர், 'பிரபுவே! காரணங்களுடன்கூடின உன்னுடையவசனம் முழுவதையும் நான் கேட்டேன். மிக்கபுஜபலமுள்ளவனே! இப்பொழுது என்னுடையவசனத்தையும் சிறிதுகேள். எல்லாமனிதர்களும் தெய்வத்தினிடத்தில் நான்குபக்கத்திலும் கட்டப்பட்டிருக்கிறார்கள். மனிதமுயற்சியிலும் (சிறிது) கட்டப்பட்டிருக்கிறார்கள். தெய்வம் *புருஷகாரம் என்னும் இரண்டிலும் எல்லாம் கட்டப்பட்டுள்ளன. அவ்விரண்டைக்காட்டிலும் மேலானதில்லை. உத்தமனே! தெய்வமொன்றினாலேயே கார்யங்கள் ஸித்திக்கிறதில்லை. கேவலம் புருஷகாரத்தினாலும் கார்யஸித்தி உண்டாகிறதில்லை. இரண்டும் சேர்ந்தால் ஸித்தி உண்டாகின்றது. அதமமும் உத்தமமுமாயிருக்கின்ற எல்லாப்பதார்த்தங்களும் அவ்விரண்டினாலும் கட்டப்பட்டவைகளாயிருந்துகொண்டு ஸர்வவிதத்தினாலும் பிரவிர்த்திக்கின்றவைகளாகவும் நிவிர்த்திக்கின்றவைகளாகவும் காணப்படுகின்றன. மேகமானது மலையில் மழையைப்பொழிந்து என்னபயனைப் பயக்கிறது? அவ்வாறே, உழப்பட்ட நிலத்தில் பொழிந்தால் பலனை உண்டுபண்ணுகிறதில்லையா? தவிர்த்த மனிதமுயற்சியும் முயற்சியில்லாததெய்வமும் எல்லாவிடத்திலும் பயனற்றனவாகின்றன. அவ்விரண்டினுள் முந்தின பக்ஷமானது சிறந்தது என்பது நிச்சயம். மழையும் நன்றாகப் பெய்து நிலமும் நன்றாகஉழப்பட்டிருந்தால் வித்து எவ்வாறு பெரும் பயனைத்தருமோ அவ்வாறு மனிதர்களுடையகார்யஸித்தி உண்டாகிறது. அவ்விரண்டினுள் தெய்வம் சிந்திக்கமுடியாதது; ஸ்வதந்திரமாகவேஇருக்கிறது. கற்றறிந்தவர்கள் தெய்வத்தைஉறுதியாகப்பற்றி மனிதமுயற்சியில் நிற்கின்றார்கள். புருஷச்ரேஷ்டனே! மனிதர்களுக்கு அவ்விரண்டினாலும் எல்லாக்கார்யார்த்தங்களும் ஸித்திக்கின்றன. மனிதர்கள் அவ்விரண்டுகளாலும்பிரவிர்த்திக்கின்றவர்களாகவும் அவ்வாறே நிவிர்த்திக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள். செய்யப்பட்டிருக்கிற அந்தப்புருஷகாரமும் தெய்வத்தினால் ஸித்திக்கிறது. அவ்வண்ணமிருந்தால்தான் கார்யத்தைச்செய்கின்றவனுக்கு (அது)

---

* மனிதமுயற்சி.

பலத்தை உண்டுபண்ணுகிறது. மனிதர்கள் ஸமர்த்தர்களாக இருந்தாலும் தெய்வமின்றித்தொடங்கப்பட்டிருக்கிற அவர்களுடையமுயற்சியானது, நன்றாகச் செய்யப்பட்டிருந்தாலும், உலகத்தில் பயனற்றதாகக்காணப்படுகிறது. மனிதர்களுள் எவர்கள் சோம்பேறிகளாகவும் மனோதைர்யமற்றவர்களாகவும் இருக்கிறார்களோ அவர்கள் புருஷகாரத்தை நிந்திக்கின்றார்கள். அது கற்றறிந்தவர்களுடைய மனத்திற்கு ருசியாது. பூமியில் பெரும்பான்மையாகச் செய்யப்பட்ட கார்யமானது பயனற்றதாகக் காணப்படுகிறதில்லை. பெரும்பயனுள்ளகார்யத்தைச் செய்யாமலிருப்பவனே துக்கத்தைக்காண்கிறான். காரியத்தைச்செய்யாமல் தற்செயலாக ஸித்திபெறுபவன் முயற்சி செய்து ஸித்திபெறாமலிருப்பவன் இவ்விருவரும் காண்பதற்கரியர். ஸமர்த்தன் ஜீவிப்பதற்குச்சக்தியுள்ளவனாகிறான். சோம்பேறி ஸுகமாக முன்னேற்றமடைவதில்லை. இந்தஜீவலோகத்தில் ஸமர்த்தர்கள் பெரும்பான்மையாக நன்மையை விரும்புகிறவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஸமர்த்தன் தொடங்கப்பட்டிருக்கிற கார்யத்தினுடைய பயனை அடையாமல்போவானாகில் இவனுக்கு ஒருவிதமான இகழ்ச்சியும் உண்டாகாது. அடையத்தக்கதைச் சிறிதாவது அடைவான். உலகத்தில் தொழிலைச்செய்யாமல் ஒருஸமயத்திலும் மனிதன் பயனை அடைகிறதில்லை. அவன் நிந்தையையே அடைகிறான். பெரும்பான்மையாக அவன் வெறுக்கத்தக்கவனாகிறான். எவன் இவ்வண்ணம் இதை அநாதரவுசெய்து இதைக்காட்டிலும் வேறாகஇருக்கிறானோ அவன் தனக்கு அனர்த்தங்களை அடைகிறான். இது புத்திமான்களுடையநீதி. தெய்வம் புருஷகாரத்தினாலாவது புருஷகாரம் தெய்வத்தினாலாவது விடுபட்டிருக்குமேயாகில் இந்தஇரண்டுகாரணங்களாலும் முயற்சியானது பயனற்றதாகிவிடும். இவ்வுலகில் புருஷகாரத்தினால் கார்யமானது ஸித்திபெறாது. எவன் தேவதைகளுக்கு நமஸ்காரம்செய்து கார்யஸித்திகளை நன்றாகவிரும்புகிறானோ தாக்ஷிண்யத்துடன்கூடின அந்த ஸமர்த்தனைமனிதன் வீண்செய்கையுள்ளவர்களால் கெடுக்கப்படுகிறதில்லை. பெரியோர்களை அடுத்து நன்மையைக் கேட்டுத்தெரிந்துகொண்டு அதனைச்செய்பவனுடையபுத்திதான் சிறப்புடையது. மனிதன் பெரியோரால்மதிக்கப்பட்டவர்களை எப்பொழுதும் முயன்றுமுயன்று கேட்கவேண்டும். அவர்கள், அடையாததை அடைவதில் சிறந்தமூலகாரணம். ஸித்தியானது விருத்தர்களை மூலமாகக்கொண்டதென்று சொல்லப்படுகிறது. மூத்தோர்களுடைய வசனத்தைக்கேட்டு எவன்முயற்சியைச்செய்வனோ அவன் அப்பொழுது

முயற்சியினுடைய சிறந்தபலத்தைச் சீக்கிரத்தில் அடைகின்றான். எந்தமனிதன் காமத்தினாலும் குரோதத்தினாலும் பயத்தினாலும் லோபத்தினாலும் கார்யஸித்திகளை விரும்புவனோ அவன் நாதனற்றவனும் அவமானமுள்ளவனுமாகிஐஶ்வர்யத்தினின்று சீக்கிரமாகத்தவறிவிழுகிறான். பேராவாவுள்ளவனும் தீர்க்கதர்சியுமல்லாத துர்யோதனனால் மூடத்தனத்தினால் ஆலோசிக்கப்படாத அப்படிப்பட்ட இந்த ஸாமர்த்தியமற்ற கார்யம்தொடங்கப்பட்டது. நன்மையில் புத்தியுள்ளவர்களை அநாதரம் செய்து அயோக்யர்களோடு ஆலோசனைசெய்து தடுக்கப்பட்டும் சிறந்தகுணமுள்ளபாண்டவர்களோடு பகைமையைத்தேடிக்கொண்டான். முந்தியே அவன் அதிகெட்டஸ்வபாவமுள்ளவன். தைர்யத்தைப்பாராட்டுவதற்கு அவன் தகுதியுள்ளவனல்லன். கார்யம் முழுதும் அழிந்துபோனபிறகு தவிக்கிறான். மித்திரர்களுடைய வசனம் இவனால்அனுஷ்டிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட பாவியான மனிதனை நாம்அனுஸரிக்கிறோமாதலால் நம்மையும்உக்கிரமாயும்பெரிதாயுமிருக்கிற இந்தஅநீதி வந்தணுகிவிட்டது. தாபத்தைஉண்டுபண்ணுகின்ற இந்தவ்யஸனத்தினால் இப்பொழுது என்னுடையபுத்தியும் ஏதோஒன்றைநினைக்கிறது; தனக்குஉரியநன்மையைத் தெரிந்துகொள்ளவில்லை. புத்திமயக்கங்கொண்டமனிதன் நட்பினர்களைக் கேட்கவேண்டும். அப்பொழுதுதான் இவனுக்குப் புத்தியும் விநயமும்ஏற்படுகின்றன. அப்பொழுதுதான் நன்மையைத்தெரிந்துகொள்ளுகிறான். ஆதலால், இவனுடைய கார்யங்களுடையமூலத்தைப் புத்தியினால்நிச்சயம்செய்து கற்றறிந்தவர்களைக் கேட்கவேண்டும். அவர்களைக்கேட்டால்அவர்கள் இந்தவிஷயத்தில் என்னசொல்லுகிறார்களோ அதனைச்செய்யவேண்டும். நாம்சென்று திருதராஷ்டிரனையும் புகழுள்ள காந்தாரியையும் மகாபுத்திமானான விதுரரையும் கேட்போம். கேட்கப்பட்ட அவர்கள் நமக்கு உறுதியான எந்த விஷயத்தைச்சொல்லுவார்களோ அது நம்மால் விளம்பமின்றிச்செய்யத்தக்கதென்பது என்னுடைய நிச்சயமான எண்ணம். கார்யங்களைத்தொடங்காததினால் ஒருபொழுதும் அர்த்தம் ஸித்தியாது. புருஷகாரம் செய்யப்பட்டிருந்தும் எவர்களுக்குக் கார்யம்ஸித்திக்கிறதில்லையோ அவர்கள் தெய்வத்தினால்கெடுக்கப்பட்டவர்கள். இந்தவிஷயத்தில் ஆலோசிக்கவேண்டாம்' என்றுகூறினார்.

## மூன்றாவது அத்யாயம்.

## ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(அஶ்வத்தாமா க்ருபருடையவசனத்தைக்கேளாமல் க்ருபர் க்ருதவர்மாஇருவர்முன்னிலையிலும் பாண்டவர்களையும் பாஞ்சாலர்களையும் கொல்வதாகச் சபதம்செய்தது.)

மஹாராஜரே! துக்கத்துடனும்சோகத்துடனும்கூடின அஶ்வத்தாமா தர்மத்துடனும்அர்த்தத்துடனும்கூடினதும் மங்களகரமுமான கிருபருடையவசனத்தைக்கேட்டு, ஜ்வலிக்கின்றஅக்னிபோன்ற சோகத்தினால் எரிக்கப்படுகின்றவராயிருத்தலால், பிறகு, மனத்தைக் குரூரமாகச்செய்துகொண்டு அவ்விருவரையும் பார்த்து மறுமொழி கூறலானார். 'ஒவ்வொருமனிதனிடத்திலும் எந்த எந்தப்புத்தியானது நல்லதாகத்தோன்றுகிறதோ அந்த அந்தஸ்வபுத்தியினால் அவர்களனைவர்களும் தனித்தனியாக ஸந்தோஷிக்கின்றார்கள். உலகத்தில் எல்லாரும் தம்மைச் சிறந்தபுத்திசாலியென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். எல்லாரும் தம்தம்மையே நன்குமதிக்கிறார்கள். எல்லாரும் தம்மைப் புகழ்ந்துகொள்ளுகிறார்கள். எல்லாருக்கும் தம்முடைய அறிவானது சிறந்ததென்கிற வாதத்தில் நிச்சயமிருக்கிறது; பிறனுடைய புத்தியை நிந்திக்கின்றார்கள். அடிக்கடி தம் புத்தியைப் புகழ்ந்துகொள்ளுகின்றார்கள். எவர்களுடைய புத்தியானது வேறு காரணங்களுடன் பொருந்திக் காட்டுவதனால் ஏற்றதென்றாகிறதோ அவர்கள் ஒருவரைப்பற்றி யொருவர் ஸந்தோஷிக்கின்றார்கள். அடிக்கடி ஒருவரையொருவர் புகழ்கிறார்கள். அந்த மனுஷ்யனுடைய அந்த அந்தப் புத்தியே அப்பொழுது அப்பொழுது காலத்தின் சேர்க்கையினால் மாறுபட்டத்தை அடைந்து ஒன்றுமொன்று அழிகிறது. பெரும்பாலும் மனிதர்களுடையசித்தங்கள் நிலையற்றிருப்பதனால்அவற்றிற்கு மெலிவுண்டாகவே, அந்த அந்தப்புத்தி உண்டாகின்றது. பிரபுவே! எவ்வாறு ஸமர்த்தனான வைத்யன் வியாதியை அறிந்து அது தணிவதின்பொருட்டு உபாயத்தினால் முறைப்படி மருந்து செய்கிறானோ அவ்வாறு மனிதர்கள் காரியஸித்தியின்பொருட்டுப் புத்தியைச் செலுத்துகின்றார்கள். பண்டிதர்கள் அறிவினாலும் தம்முடைய யுக்தியினாலும் அதை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். மனிதன் பால்யத்திலும் யௌவனத்திலும் மத்யகாலத்திலும் வெவ்வேறு புத்தியினால் மோகமடைகிறான். முதுமையிலோ அவன் வேறு புத்தி

யை அடையவிருப்பமுள்ளவனாகிறான். போஜகுலத்தவனே! புருஷன் மஹாகோரமானவ்யஸனத்தையோ அப்படியே மிக்கசெல்வப் பெருக்கையோ அடைந்து புத்திவேறுபாட்டை அடைகிறான். ஒரு மனிதனிடத்திலேயே அப்போதைக்கப்போது அந்த அந்தப் புத்தி உண்டாகிறது. பிரஜ்ஞையானது அநித்யமன்றோ. அது அவனுக்கே ருசிக்கிறதில்லை. தன்னுடைய அறிவு எட்டினவரையில் நிச்சயித்து எந்தப் புத்தியை நல்லதாகப் பார்க்கிறானோ அந்தப்புத்தியினால் செய்ய வேண்டியகார்யத்தை நன்றாகச் செய்கிறான். அது அவனுக்கு முயற்சியை உண்டுபண்ணுகிறது. போஜனே! எல்லாமனிதர்களும் இது நல்லதென்று நிச்சயமுள்ளவராகவே மரணமுதலான கார்யங்களில் பிரீதியைப் பண்ணத் தொடங்குகிறார்கள். எல்லா மனிதர்களும் தம்முடைய அறிவு ஸரியானதென்று அறிந்தே பற்பல கார்யங்களைச் செய்கின்றார்கள்; நன்மையென்றே எண்ணுகிறார்கள். இப்பொழுது எனக்கு இந்த வ்யஸனத்தினாலுண்டாயிருக்கிறதும், எல்லாருடைய சோகத்தையும் நாசம் செய்கின்றதுமான புத்தியை உங்களிருவருக்கும் உரைக்கப்போகிறேன். பிரம்மதேவர் பிரஜைகளைப்படைத்து அவைகளுக்குத் தொழிலையும் ஏற்படுத்தி ஒவ்வொருவர்ணத்திலும் மிகச்சிறந்ததான ஒவ்வொருதொழிலையும் நன்றாக நிலைநாட்டினார். பிராமணனிடத்தில் உத்தமமானவேதத்தையும் க்ஷத்திரியனிடத்தில் உத்தமமானபலத்தையும் வைஸ்யனிடத்தில் ஸாமர்த்தியத்தையும் சூத்திரனிடத்தில் எல்லாஜாதிக்கும் அனுகூலமாயிருத்தலையும் ஏற்படுத்தினார். மனவடக்கமில்லாதபிராம்மணன் சிறந்தவனாகான். பலமற்றவனான க்ஷத்திரியன் மரித்தவனுக்குஸமானன். சாதுர்யமில்லாத வைஸ்யன் நிந்திக்கப்படுகிறான். பிரதிகூல ஸ்வபாவமுள்ள சூத்திரனும் இகழப்படுகிறான். பிராம்மணர்களால் எங்கும் புகழப்பட்ட சிறந்தபிராமணகுலத்தில் அப்படிப்பட்ட நான் பிறந்தேன். பாக்கியக்குறைவினால் இந்தக்ஷத்திரியதர்மத்தை அனுஷ்டிக்கிறவனானேன். நான் க்ஷத்திரியதர்மத்தை அடைந்தபின், பிராம்மண்யத்தை ஆச்ரயித்து மகிமையுடைய கார்யத்தைச்செய்வேனேயாகில் 'அந்தஎன்னுடையகார்யமானது ஸாதுக்களுக்கு ஸம்மதமாகாது. யுத்தத்தில் திவ்யமான தனுஸையும் திவ்யாஸ்திரங்களையும் தரித்து, பிதாகொல்லப்பட்டதையும்கண்டு ஸபையில்எதைச்சொல்வேன்? அப்படிப்பட்ட நான் இப்பொழுது இஷ்டப்படி க்ஷத்திரியதர்மத்தைக் கைமேற்கொண்டு அரசன்விஷயத்திலும் மஹாத்மாவான பிதாவின் விஷயத்திலும் கடனில்லாமையை அடையப்போகிறேன்.

இப்பொழுது ஜயத்தினால்பிரகாசிக்கின்றவர்களான பாஞ்சாலர்கள் பயமற்றவர்களாகவும் குதிரைகளை அவிழ்த்துவிட்டவர்களாகவும் கவசத்தைக்கழற்றியவர்களாகவும் ஸந்தோஷத்தையுடையவர்களாகவும் உறங்கப்போகின்றார்கள். யுத்தம்செய்ததினால் பீடிக்கப்பட்டவர்களும் களைத்திருப்பவர்களுமான நாம் ஜயிக்கப்பட்டுவிட்டோம் என்பது இவர்களுடையஎண்ணம். இரவில் தங்களுடைய பாசறையில் ஸுகமாகத்தூங்கிக்கொண்டிருக்கின்ற அவர்களுடையபாசறைக்குச் செய்யமுடியாத தாக்குதலைச்செய்யப்போகிறேன். பாசறையில் உறக்கத்தினால் அறிவைஇழந்து மரித்தவர்கள்போலாயிருக்கின்ற அவர்களைக் கவர்ந்துகொண்டு இந்திரன் அஸுரர்களைக்கொன்றதுபோல் வல்லமையினால் நாசஞ்செய்யப்போகிறேன். இப்பொழுது நான் வல்லமையைவெளியிட்டு, ஒன்றுசேர்ந்தவர்களும் திருஷ்டத்யும்னனை முதன்மையாகக் கொண்டவர்களுமான அந்தப்பாஞ்சாலர்களனைவர்களையும் ஜ்வலிக்கின்றநெருப்பானது உலர்ந்தகாட்டைஎரிப்பதுபோல் நாசஞ்செய்யப்போகிறேன். உத்தமனே! பாஞ்சாலர்களைக்கொன்று சாந்தியை அடையப்போகிறேன். அதிககோபம்கொண்டவரும் பினாகம்என்கிறவில்லைக் கையில்கொண்டவருமான ருத்திரர் தாம் பசுக்கள் (=பிராணிகள்)விஷயத்தில்ஸஞ்சரிப்பதுபோலஇப்பொழுது யுத்தத்தில் பாஞ்சாலர்கள்விஷயத்தில் நாசஞ்செய்துகொண்டு ஸஞ்சரிக்கப்போகிறேன். இப்பொழுது, நான் அதிக உத்ஸாஹத்தோடு எல்லாப்பாஞ்சாலர்களையும் வஞ்சனையினால்வதம்செய்யப்போகிறேன். அவ்வாறே, அதிககோபங்கொண்ட பினாகபாணியானவர் பசுக்களைக் கொல்வதுபோலப் பாண்டவர்களை யுத்தத்தில் கொல்லப்போகிறேன். இப்பொழுது நான் ஒரு கஸ்திரத்தினால் அடித்து எல்லாப்பாஞ்சாலர்களாலும் பூமியைச் சரீரங்களுடன் கூடியதாகச் செய்து, பிதாவின் விஷயத்தில் கடனில்லாதவனாகப்போகிறேன். இன்றுஇரவு எவ்விதத்தினாலும் அடையமுடியாததான துர்யோதனன், கர்ணன், பீஷ்மர், ஜயத்ரதன் இவர்கள்விஷயமான கடன் தீர்த்தலை நான் அடையப்போகிறேன். இன்றுஇரவில் ஆட்டினுடைய தலையைப்போலப் பாஞ்சாலராஜனை த்ருஷ்டத்யும்னனுடைய தலையைப் பலத்தினால் முறிக்கப்போகிறேன். கௌதமரே! இன்றிரவில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் பாஞ்சாலர்கள் பாண்டவர்கள் இவர்களுடைய தலையை யுத்தத்தில் கூர்மையுள்ள கத்தியினால்வெட்டப்போகிறேன். சிறந்த புத்தியுள்ளவரே! இன்றிரவில் தூங்கிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் அந்தப் பாஞ்சால ஸேனையைக்கொன்று க்ருதக்ருத்யனும் ஸுகியும் ஆகப்போகிறேன்' என்று கூறினார்.

## நான்காவது அத்யாயம்.

## ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(அஸ்வத்தாமாவுக்கும் க்ருபருக்கும் ஸம்வாதம்.)

கிருபர், 'தவறுதலில்லாதவனே! பாக்கியத்தினால் செய்ததற்குப் பிரதிசெய்வதில் உனக்கு இந்தப்புத்தி உண்டாகிவிட்டது. வஜ்ரபாணியான இந்திரனும் உன்னைத் தடுப்பதற்குச் சக்தியுள்ளவனாகான். நாளைக்காலையில் நாங்கள் இருவரும் சேர்ந்து உன்னை அநுஸரித்து வருவோம். கவசத்தையும் த்வஜத்தையும் கழற்றிவைத்து இன்றுஇரவு இளைப்பாறுவாயாக. சத்துருக்களை நோக்கிச் செல்லுகின்ற உன்னை நானும் ஸாத்வதனான கிருதவர்மாவும் கவசத்தை அணிந்து ரதத்தின் மீது ஏறிக்கொண்டு பின்தொடர்ந்து வருவோம். ரதிகர்களுள் சிறந்தவனே! நீ எங்கள் இருவர்களுடனுங்கூடி யுத்தத்தில் விக்கிரமத்தை வெளியிட்டுக் காலாட்களுடன் கூடின பகைவர்களான பாஞ்சாலர்களை நாளைத்தினம் கொல்வாய். நீ பராக்கிரமத்தை வெளியிட்டு, (சத்துருக்களை ஸம்ஹரிப்பதில்) சக்தியுள்ளவன். இன்றுஇரவுமுழுவதும் இளைப்பாறுவாயாக. ஐயனே! நீ நெடுநேரமாக விழித்துக்கொண்டிருக்கிறாய். இந்தஇரவுநித்திரைசெய். பகைவர்மானத்தைக்கெடுப்பவனே! இளைப்பாறிநித்திரைசெய்து எழுந்திருந்து தன்னிலைமையிலிருக்கின்றசித்தத்துடன் யுத்தத்தில் சத்துருக்களைஎதிர்த்து நாசஞ்செய்வாய்; ஸம்சயமில்லை. ரதிகர்களுள்சிறந்தவனும் சிறந்தஆயுதத்தைப்பிடித்தவனுமானஉன்னை சுப்பிரம்மணியராயிருந்தாலும் தேவர்களுள்யாரும்ஜயிப்பதற்குச் சக்தியுள்ளவனாகான். கிருபரோடுகூடினவனும் கிருதவர்மாவினால் ரக்ஷிக்கப்பட்டவனும் ரோஷமுள்ளவனுமாகச்செல்லுகின்ற துரோணபுத்திரனைத் தேவராஜாவானாலும் யுத்தத்தில் எவன் எதிர்த்துப்போர்புரிவான்? அப்படிப்பட்டநாம்இரவில் இளைப்பாறினவர்களாகவும்நித்திரையினாலுமயக்கத்தையும்மனக்கவலையையும் போக்கினவர்களாகவும் இந்தஇரவுவிடிந்தவுடனே பகைவர்களைக்கொல்வோம். உன்னுடையஅஸ்திரங்களும் என்னுடையஅஸ்திரங்களும் அத்புதமானவைகள்; ஸம்சயமில்லை. மகாவில்லாளியானஸாத்வதனும் எப்பொழுதும் யுத்தங்களில் ஸாமர்த்தியமுள்ளவன். அப்பனே! அப்படிப்பட்ட நாம் ஒன்றுசேர்ந்து எதிர்த்துவருகின்ற எல்லாச்சத்துருக்களையும் பலாத்காரமாக யுத்தத்தில் கொன்று நிறைந்தபிரீதியை அடைவோம். நீ கவலையற்றவனாக இளைப்பாறுவாயாக. இன்றிரவு ஸுகமாகநித்திரை

செய்வாயாக. பகைவர்களைத் தவிக்கச்செய்கின்றவர்களான நானும் கிருதவர்மாவுமாகிய இருவர்களும் ஒன்றுசேர்ந்து விற்பிடித்தவர்களும் கவசம் பூண்டவர்களும் ரதத்துடன் கூடினவர்களுமாகி, விரைவாகச்செல்லுகின்றவனும் புருஷசிரேஷ்டனும் ரதிகனுமான உன்னைக் காலையில் பின்தொடர்வோம். அப்படிப்பட்ட நீ அவர்களுடைய பாசறையை அடைந்து உன்னுடைய நாமதேயத்தை அவர்களைக்கேட்கும்படிசெய்து, பிறகு, யுத்தத்தில் போர்புரிகின்ற சத்துருக்களுக்கு மிக்க துன்பத்தைச்செய்வாய். பொழுதுவிடிந்து வெளிச்சமானபிறகு, அவர்களுடைய வதத்தைச்செய்து இந்திரன் மகாஸுரர்களைக் கொன்று விளையாடியதுபோல விளையாடுவாயாக. எல்லா அஸுரர்களையும் அழிப்பவனானமகேந்திரன் கோபத்தினால் அஸுரசேனையை வென்றதுபோல யுத்தத்தில் பாஞ்சாலர்களுடையசேனையை ஜயிப்பதில் நீ வல்லமையுள்ளவனன்றோ? யுத்தத்தில் என்னோடு சேர்ந்தவனும் க்ருதவர்மாவினால் ரக்ஷிக்கப்பட்டவனுமான உன்னை ஸுரபுவும் வஜ்ரத்தைக் கையில் கொண்டவனுமான ஸாக்ஷாத் இந்திரனே நேரில்வந்தாலும் ஸஹிக்கச்சக்தியுள்ளவனாவான். அப்பனே! யுத்தத்தில் நானும் கிருதவர்மாவும் பாண்டவர்களை ஜயிக்காமல் ஒருபொழுதும் விலகமாட்டோம். நாம் அனைவரும் யுத்தத்தில் பாண்டவர்களோடுகூடின அல்பர்களான பாஞ்சாலர்களைக்கொன்று திரும்புவோம்; அல்லது, அவர்களால் கொல்லப்பட்டு ஸ்வர்க்கத்தை அடைவோம். நாங்கள் காலையில் எல்லாஉபாயங்களாலும் உனக்கு யுத்தத்தில் ஸகாயர்களாயிருப்போம். மிக்கதோள்வலியமைந்தவனே! தோஷமற்றவனே! இஃது உண்மைஎன்று உனக்குச் சொல்லுகிறேன்' என்று கூறினார்.

அரசரே! துரோணபுத்திரர், மாதுலரானகிருபர் இவ்வாறு நன்மையானவசனத்தை உரைக்கக்கேட்டு, பிறகு, மாதுலரைப்பார்த்து, குரோதத்தினால் இருகண்களையும் மேலேபுரட்டிவிழித்துக்கொண்டு, 'வியாதியுள்ளவனுக்கும் பொறாமையுள்ளவனுக்கும் தனங்களைச்சிந்திப்பவனுக்கும் (ஸ்த்ரீயினிடத்தில்) ஆசையுள்ளவனுக்கும் நித்திரைஏது? அந்த நான்குகளில் ஒன்று இப்பொழுது எனக்கு நேர்ந்துவிட்டது. அப்படிப்பட்ட இந்தநான்குகளுள் ஒன்றான பொறாமை என்னுடையதூக்கத்தைச் சீக்கிரமாக நாசம்செய்துவிட்டது. பாரும்! இதுஎன்ன துக்கம்! இவ்வுலகத்தில் பிதாவினுடைய வதத்தை நினைக்கின்ற என்னுடையஉள்ளத்தைப் பொறாமையானது இப்பொழுது இரவும்பகலும் எரித்துக்கொண்டு தணியாமலிருக்கின்

றது. என்னுடையபிதா பாவிகளால் எவ்வாறு கொல்லப்பட்டாரென்பதுமுழுதும்உமக்கும்வெளிப்படையாகத்தெரியும்.அதுஎன்னுடைய மர்மஸ்தானங்களை மிக அறுக்கின்றது. 'துரோணரைக்கொன்றவன்' என்கிற பாஞ்சாலர்களுடையசொற்களைக் கேட்டுக்கொண்டு என்னைப் போன்றவன் எவ்வாறு உலகத்தில் ஒரு முகூர்த்தகாலம் ஜீவித்திருப்பான்? த்ருஷ்டத்யும்னனைக்கொல்லாமல் நான் உயிரோடிருக்கவிரும்பவில்லை. பிதாவைக்கொன்றதினால் அவன் என்னால்கொல்லப்படத்தக்கவன். ஒன்றுசேர்ந்திருக்கின்ற பாஞ்சாலர்களும் கொல்லப்படத்தக்கவர்கள். தொடைகள்முறிக்கப்பட்டஅரசனான துர்யோதனனுடைய எந்தப்புலம்பல் என்னால்கேட்கப்பட்டதோ அது க்ரூரனாயிருந்தாலும் எவனுடையஉள்ளத்தைத்தான் எரிக்காது? தொடைகள்முறிக்கப்பட்ட அரசனுடைய அப்படிப்பட்டவசனத்தைக் கேட்டுத் தயையற்றவனாகஇருந்தாலும் எவனுடையகண்களினின்றுதான் கண்ணீர்பெருகாது? நான் உயிரோடிருக்கும்பொழுதே என்னுடைய மித்திரர்களுடைய கக்ஷியானது ஜயிக்கப்பட்டதென்பது, ஜலவேகமானது ஸமுத்திரத்தைப்பெருக்குவதுபோல என்னுடையசோகத்தை விருத்தியடையச்செய்கிறது. சத்துருஸம்ஹாரத்திலேயே நோக்கமுள்ள மனத்தையுடையவனான எனக்கு இப்பொழுது உறக்கமேது? ஸுகமேது? புருஷஶ்ரேஷ்டரே! வாஸுதேவனாலும் அர்ஜுனனாலும் ரக்ஷிக்கப்பட்டிருக்கின்ற அவர்களை மஹேந்திரனாலும் சிறிதும் ஸஹிக்கத்தகாதவர்களென்று நான் நினைக்கிறேன். இந்தக் கார்யத்தினின்று எவ்விதத்தினாலும்(என்னை) நிறுத்த ஒருவனும் சக்தியுள்ளவனல்லன். எந்தமனிதன் என்னைக் கோபத்தினின்று நிவர்த்தி அடையும்படிசெய்வானோ அவனை இவ்வுலகத்தில் நான் காணவில்லை. இவ்விதமாக நிச்சயங்கொண்டிருக்கிறஎன்னுடைய இந்தப்புத்தியானது பெரியோர்களுக்கு ஸம்மதமானது. சாரர்களால் சொல்லப்படுகின்ற என்னுடைய மித்திரர்களுடைய தோல்வியும் பாண்டவர்களுடைய வெற்றியும் என்னுடையஉள்ளத்தை எரிக்கின்றன. இன்று தூங்கிக்கொண்டிருக்கும் தருணத்தில் சத்துருக்களை வதம்செய்துவிட்டு, பிறகு, நான் இளைப்பாறப்போகிறேன்; மனக்கவலையற்றவனாக உறங்கவும்போகிறேன்' என்று கூறினார்.

## ஐந்தாவது அத்யாயம்.

## ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(கிருபர் தூங்குகிறவர்களைக்கொல்வது தகாதென்று தடுத்தும் அச்வத்தாமா கொல்லவேகருதிச் சென்றதும், கிருபரும் கிருதவர்மாவும் அவரைத் தொடர்ந்து சென்றதும்.)

கிருபர், 'இந்திரியங்களை அடக்காதவனும் துர்ப்புத்தியுள்ளவனுமான மனிதன் கேட்கவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனாயிருந்தாலும் எல்லாத்தர்மங்களையும் அர்த்தங்களையும் தெரிந்துகொள்ளும்படி செய்வதற்குத் தகுதியுள்ளவனாகானென்பது என்னுடைய எண்ணம். அவ்வாறே, எந்த மேதாவியானவன் விநயத்தை முழுதும் கற்றுக்கொள்ளவில்லையோ அவனும் தர்மார்த்த நிச்சயத்தைச் சிறிதேனும் அறியான். ஜடனானசூரன் நெடுங்காலம் பண்டிதனை உபாஸித்தாலும் கரண்டி எவ்வாறு பருப்பினுடைய சுவையை அறியாதோ அவ்வாறு தர்மங்களை அறியான். அந்தப்பண்டிதனையே அறிவிற்சிறந்தவன் முகூர்த்தகாலம்உபாஸிப்பனாகில் நாவானது பருப்பின் சுவையை அறிவதுபோலத் தர்மங்களை விரைவாக அறிகிறான். மேதாவியானமனிதன் கேட்பதில்விருப்பமுள்ளவனாகவும்இந்திரியங்களை அடக்கினவனாகவும் எல்லாஆகமங்களையும் அறிந்துகொள்ள வேண்டும்; க்ரஹிக்கத்தக்க விஷயத்தை விரோதிக்கவும் கூடாது. துராத்மாவான எந்தப்பாவியானமனிதன் உபதேசிக்கப்பட்ட மங்களகரமானகார்யத்தைவிட்டு அதிகபாதகத்தைச்செய்கிறானோ மானத்தைஇழந்தஅந்தமனிதன் நல்வழியை அடையும்படிசெய்வதற்கே ஸாத்தியப்படமாட்டான். நாதனுள்ளவனை நண்பர்கள் பாதகத்தினின்று தடுக்கிறார்கள். அதிருஷ்டமுள்ளவன் திரும்புகிறான். துரதிருஷ்டமுள்ளவன் திரும்பமாட்டான். விஷயங்களில் மண்டியிருக்கின்றமனத்தையுடையவன் எவ்வாறு பற்பலவிதமானவாக்கியங்களால் கட்டப்படுவனோ அவ்வாறு ஸுஹ்ருத்தினாலும் கட்டுப்படுத்தத்தக்கவனாகிறான். (எவன் அவ்வண்ணம்) கட்டுப்படுத்துவதற்கு ஸாத்தியப்படாதவனோ அவன் கஷ்டத்துக்கு உட்படுகிறான். அவ்வண்ணமே புத்தியில்லாதவர்களும் பாவமானகார்யத்தைச்செய்பவர்களுமான மனிதர்களை பேரறிவாளர்களானஸுஹ்ருத்துக்கள் அடிக்கடி தம்சக்தியுள்ளவரையில் தடுக்கிறார்கள். ஐயா! அப்படிப்பட்ட நீ உன்மனத்தை உன்மனத்தினாலேயேஅடக்கிக்கொண்டு

மங்களகரமானகார்யத்தில் மனத்தைச்செலுத்திஎன்னுடையவசனத்தைக்(கேட்டு அதன்படி) நடப்பாயாக. அதனால், நீ பச்சாத்தாபத்தை அடையமாட்டாய். இவ்வுலகத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறவர்களைக் கொல்வதென்பது தர்மமென்றுகொண்டாடப்படவில்லை. அவ்வாறே, ஆயுதங்களை வைத்தவர்களையும் ரதங்களையும் குதிரைகளையும் விட்டிருப்பவர்களையும், 'நான் உன்னுடையமனிதன்' என்று சொல்லுகிறவர்களையும் அடைக்கலமாக வந்திருக்கிறவர்களையும் தலைமயிரவிழ்ந்திருப்பவர்களையும் வாகனங்கள்கொல்லப்பட்டவர்களையும் கொல்லுவது தர்மமாகாது. பிரபுவே! பாஞ்சாலர்களெல்லாரும் கவசத்தைக்கழற்றினவர்களாகவும்பயமற்றவர்களாகவும்மரித்தவர்கள்போலப்பிரஜ்ஞை இல்லாதவர்களாக இன்றிரவில் உறங்கப்போகின்றார்கள். அந்த நிலைமையிலிருக்கின்ற அவர்களுக்குக் கபடியான எந்தமனிதன் துரோகம்செய்வனோ அவன் ஆழ்ந்ததும் பெரிதும் தெப்பமில்லாததுமானநரகத்தில் மூழ்குவான். இது வெளிப்படையானது. உலகத்தில் எல்லா அஸ்திரங்களையும்அறிந்தவர்களுள் நீ சிறப்புள்ளவனாகவும் பிரஸித்திபெற்றவனாகவும் இருக்கிறாய். இந்தஉலகத்தில் உனக்கு ஒருபொழுதும் சிறிதும்பாவம்நேர்ந்ததில்லை. நாளைத்தினம் சூரியன் உதித்தவுடன்,சூரியனுக்குஸமானனானநீஎல்லாப்பிராணிகளும் அறிய யுத்தத்தில் பகைவர்களைவெல்லப்போகிறாய். உன்னிடத்தில் இகழப்பட்டசெய்கையென்பது சிறிதும்நேரக்கூடாதன்றோ? அது வெள்ளையில் ரத்தம்தெறித்தாற்போல ஆகுமென்பது என்னுடைய எண்ணம்' என்று சொன்னார்.

அஸ்வத்தாமா கூறலானார், 'மாதுலரே! எவ்வாறு நீர் சொல்லுகிறீரோ அது அவ்விதம்தான். நீர் நன்குஉபதேசிக்கிறீர். அவர்களாலேயே இந்தத் தர்மஅணையானது அரசர்களுக்கு முன்னிலையிலும் உங்களுடைய ஸந்நிதியிலும் முந்தியே நான்குபக்கங்களிலும் உடைத்துவிடப்பட்டது. ஆயுதங்களைக் கீழேவைத்தவரான என்னுடையபிதா த்ருஷ்டத்யும்னனால் கொல்லப்பட்டார். ரதசக்ரம் பூமியில் அமிழவே அதைத்தூக்கிவிடப்போனவனும் மிகுந்தவியஸனத்தில் மூழ்கினவனும் ரதிகஸ்ரேஷ்டனுமான கர்ணனும் அர்ஜுனனால் கொல்லப்பட்டான். அவ்வண்ணமே, சஸ்திரங்களைக் கீழேவைத்தவரும் ஆயுதங்களில்லாதவரும் சந்தனுகுமாரருமான பீஷ்மரும் அர்ஜுனனால் சிகண்டியைமுன்னிட்டுக்கொண்டுகொல்லப்பட்டார். அவ்வாறே, சிறந்தவில்லாளியும் யுத்தத்தில் பிராயோபவேசம் செய்தவனுமான பூரிஸ்ரவஸும் அரசர்கள் அலறும்பொழுதே யுயுதானனால் கொல்லப்பட்

டான். துர்யோதனனும் பீமனோடு எதிர்த்து யுத்தத்தில் அரசர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பீமனால் அதர்மத்தினால் கதையினால்கொல்லப்பட்டான். அந்தயுத்தத்தில்தனித்தவனாயிருந்த புருஷசிரேஷ்டனான துர்யோதனன் அனேக மகாரதர்களால் நாற்பக்கங்களிலும் சூழ்ந்துகொள்ளப்பட்டுப் பீமஸேனனால் அதர்மத்தினால் விழும்படி செய்யப்பட்டான். சொல்லுகின்ற சாரர்களிடமிருந்து, தொடைகள் பிளக்கப்பட்ட அரசனுடைய எந்தப் புலம்பலானது என்னால் கேட்கப்பட்டதோ அது என்னுடைய மர்மஸ்தானங்களை அறுக்கிறது. இவ்விதம் தர்மத்தின் அணையை உடைத்தவர்களான பாஞ்சாலர்கள் தர்மத்தை அறியாதவர்கள்; பாபிகள்; வரம்புகடந்தவர்களான அந்தப்பாஞ்சாலர்களை நீர் ஏன் நிந்தியாமலிருக்கிறீர்? நான் பிதாவைக் கொன்றவர்களான பாஞ்சாலர்களை இரவில் தூங்கும் பொழுது கொன்று புழுவாகவோ பக்ஷியாகவோ வேண்டியபடி ஜன்மத்தை எடுத்துப் பிறக்கிறேன். எனக்கிருக்கிற எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு இப்பொழுதே நான் விரைவுபடுகிறேன். அவ்வாறு விரைவுள்ளவனான எனக்கு நித்திரை ஏது? ஸுகம்ஏது? அவர்களைக்கொல்வதில் நிச்சயம்கொண்ட இந்த என்னுடைய புத்தியைத் திருப்பக்கூடிய மனிதன் ஒருவன் உலகத்தில் உண்டாகவுமில்லை; உண்டாகப்போவதுமில்லை' என்றுசொன்னார். மஹாராஜரே! பிரதாபமுள்ள துரோணபுத்திரர் இவ்வாறு உரைத்துவிட்டு ஏகாந்தத்தில் குதிரைகளைப் பூட்டிக்கொண்டு சத்துருக்களைநோக்கிச்சென்றார். அவரைப்பார்த்து மஹாத்மாக்களான கிருபர், கிருதவர்மா இருவரும், 'ஏன் இந்த ரதத்தைக் குதிரைகளுடன்சேர்த்துப் பூட்டினாய்? என்ன கார்யம்செய்ய விரும்புகிறாய்? புருஷஶ்ரேஷ்டனே! உன்னோடு கூட ஒரு கூட்டமாகப் புறப்பட்டவர்களாயிருக்கிறோம். துக்கத்திலும் ஸுகத்திலும் ஸமமானபாகமுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால், சொல்லக்கடவாய்' என்றுவினவ, அஶ்வத்தாமா பிதாவினுடையவதத்தை நினைத்து அதிககோபங்கொண்டு தம் உள்ளத்தில் செய்யவிரும்பியதை உண்மையாக அவ்விருவருக்கும் சொல்லலானார்.

'கூர்மையான அம்புகளால் லக்ஷக்கணக்கான யுத்தவீரர்களைக் கொன்று சஸ்திரங்களைக்கீழேவைத்தவரான என்னுடையபிதா திருஷ்டத்யும்னனால் கொல்லப்பட்டார். இப்பொழுது கவசத்தைக் கழற்றிவைத்த பாவியான அந்தப் பாஞ்சாலராஜகுமாரனைப் பாவமானசெய்கையினால் அவ்வண்ணமே கொல்லப்போகிறேன். அவ்வாறு என்னால் பசுப்போலக்கொல்லப்பட்ட பாவியான பாஞ்சால

ராஜகுமாரன், சஸ்திரங்களால் ஜயிக்கப்பட்டிருக்கிற உலகங்களை அடையாமலிருக்கவேண்டுமென்பது என்னுடைய எண்ணம். சிறந்த ரதிகர்களும் சத்துருக்களைத் தவிக்கச் செய்பவர்களுமான நீங்களிருவரும் சீக்கிரமாகக் கவசமணிந்தவர்களும் கத்தியைத்தரித்தவர்களும் விற்பிடித்தவர்களுமாக என்னையே இப்பொழுது எதிர்பார்த்திருங்கள்' என்றுசொன்னார். இவ்வாறுசொல்லிவிட்டு, அஸ்வத்தாமா ரதத்திலேறிக்கொண்டு சத்துருக்களைநோக்கிச்சென்றார். அரசரே! அவரைக் கிருபரும் ஸாத்வதனானகிருதவர்மாவும் பின்தொடர்ந்தார்கள். பகைவர்களை எதிர்த்துச்செல்பவர்களான அவர்கள் மூவரும் யஜ்ஞத்தில் ஹோமஞ்செய்யப்பட்டு நன்றாகஜ்வலிக்கின்ற அக்னிகள்போல் விளங்கினார்கள். பிரபுவே! நன்கு உறங்குகின்ற ஜனங்களையுடைய அந்தப்பாஞ்சாலர்களுடைய ப்ரசறையைக்குறித்துச் சென்றார்கள். மஹாரதரான த்ரோணபுத்திரர் வாயிலேஅடைந்து நின்றார்' என்றுகூறினான்.

---

## ஆறுவது அத்யாயம்.

## ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(அஸ்வத்தாமா பாசறைவாயிலில் பூதத்தைக்கண்டு பல ஆயுதங்களை விட்டதும், அவற்றை அதுவிழுங்கிவிட அவர் மனம்வருந்தி மஹாதேவரை உபாஸிக்க முயன்றதும்.)

திருதராஷ்டிரன், "ஸஞ்சய! வாயிலில்நிற்கின்ற துரோணபுத்திரரைப்பார்த்து அந்தக்கிருதவர்மாவும்கிருபரும் என்னசெய்தார்கள்? எனக்குஉரைப்பாயாக" என்றுவினவ, ஸஞ்சயன், சொல்லலானான்.

"மஹாரதரான துரோணபுத்திரர் கிருதவர்மாவிடத்திலும்கிருபரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு கோபத்தினால்மூடப்பட்ட மனத்தையுடையவராகப் பாசறையின்வாயிலேஅடைந்தார். அவர், அவ்விடத்தில் பருத்ததேகத்தையுடையதும், சந்திரசூரியர்களுக்கு ஒப்பான காந்தியையுடையதும், பாசறையின்வாயிலே மறித்துக்கொண்டு நிற்கின்றதும், புளகத்தைஉண்டுபண்ணுகின்றதும், பெருகிக்கொண்டிருக்கிற ஊனிரோடும் ரக்தத்தோடும்கூடிய புலித்தோலை உடுத்ததும், மான்தோலை மேலாடையாகத்தரித்ததும், ஸர்ப்பத்தைப் பூணூலாகக்கொண்டதும், மிகநீண்டவையும் பயங்கரமானவையும் பற்

பலஆயுதங்களை எடுத்துக்கொண்டிருப்பவையுமான கைகளோடு கூடியதும், பெரும் பாம்பைத் தோள்வளையாக அணிந்ததும், அக்னிஜ்வாலையின் கூட்டங்களால் நிறைந்ததும் கோரப்பற்களால் பயங்கரமானதும் திறக்கப்பட்டதுமான வாயுள்ளதும், பயங்கரமாயிருப்பதும், விசித்திரமான ஆயிரம்கண்களால் நாற்பக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டதுமான ஒருபூதத்தைக் கண்டார். அந்தப்பூதத்தினுடையசரீரமும் வேஷமும் சொல்லவேமுடியாதவை. எவ்விதத்தினாலும் அதைக்கண்டு மலைகள்கூட வெடித்துவிடும். அதினுடைய வாயினின்றும் மூக்கினின்றும் இரண்டுகாதுகளினின்றும் அந்தஆயிரம்கண்களினின்றும் பெரிய அக்னிஜ்வாலைகள்தோன்றின. அவ்வாறே, தேஜஸுகளின் கிரணங்களினின்றும் சங்கசக்ரகதைகளைத்தரித்தவர்களான ஸ்ரீஹ்ருஷீகேசர்கள் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவும்தோன்றினார்கள். உலகங்களுக்குப்பயங்கரமும் அதிகஆச்சர்யகரமுமான அந்தப்பூதத்தைக்கண்டு துரோணபுத்திரர் பயமில்லாதவராகத் திவ்யாஸ்திரங்களை இறைத்தார். அந்தமகாபூதமானது துரோணபுத்திரரால்விடப்பட்ட அந்தப்பாணங்களை வடவைத்தீயானது ஸமுத்திரத்தினுடையஜலப்பிரவாஹங்களை உட்கொள்வதுபோல உட்கொண்டுவிட்டது. அஸ்வத்தாமாவோ அந்தஅம்புத்திரள்கள் பயனில்லாமற்போனதைக்கண்டு ஜ்வலிக்கின்றஅக்னிஜ்வாலைபோன்ற ரதசக்தியை அந்தப்பூதத்தின்மீதுபிரயோகித்தார். ஜ்வலிக்கின்ற நுனியுடன்கூடின அந்தச்சக்தியானது, அந்தப்பூதத்தைஅடித்து,யுகாந்தகாலத்தில் ஆகாயத்தினின்றுநழுவிவிழுகின்ற பெரிதான உற்கையானது சூரியனைத்தாக்கிச் சிதறுவதுபோலச் சிதறியது. பிறகு, பொற்பிடியுள்ளதும் திவ்யமானதும் ஆகாசத்துக்குஒப்பான காந்தியுள்ளதுமான ஒருகத்தியை ஜ்வலிக்கின்றஸர்ப்பத்தைப் புற்றினின்று இழுப்பதுபோல உறையினின்று வெளியில் விரைவாகஇழுத்தார். பிறகு,புத்தியுள்ளஅஸ்வத்தாமா உத்தமமானகத்தியை அப்பொழுது பூதத்தின்மீது பிரயோகித்தார்.அது அந்தப்பூதத்தைஅணுகிப்பஞ்சுபோல்நாசமடைந்தது.பிறகு, அந்தத்துரோணபுத்திரர் கோபங்கொண்டவராக இந்திரத்வஜம்போன்றதும் ஜ்வலிக்கின்றதுமான ஒருகதாயுதத்தை அந்தப்பூதத்தின்மீது பிரயோகித்தார். அதையும் பூதம் விழுங்கிவிட்டது. பிறகு, எல்லா ஆயுதங்களும்இல்லாமல்போகவே, அங்குமிங்கும்பார்த்து, ஆகாசத்தை ஜனார்த்தனர்களால் இடைவெளிஇல்லாமற்செய்யப்பட்டதாகக் கண்டார். ஆயுதங்களை இழந்தவரான துரோணபுத்திரர் அந்த அதிக ஆச்சரியத்தைக்கண்டு மிகப்பயந்தவராகக் கிருபர் கிருதவர்மா இவர்க

ளுடையவசனத்தையும்நினைத்துக்கொண்டு ஆலோசிக்கலானார். 'அப்ரியமாயும் ஹிதமாயுமிருக்கிற ஸுஹ்ருத்துக்களுடைய வசனத்தைக் கேளாதவன், நான் எவ்வாறு அவ்விருவர்களையும்அவமதித்துச் சோகத்தைஅடைகிறேனோ அவ்வாறேஆபத்தைஅடைந்துதுக்கிக்கிறான். கற்றறியாதவனான எவன் சாஸ்திரங்களால் காணப்பட்டிருக்கிறவிஷயங்களைத் தாண்டித் துன்பம்செய்ய விரும்புகிறானோ அவன் தர்மமார்க்கத்தினின்றுதவறி அதர்மமார்க்கத்தில் பீடிக்கப்படுகிறான். பசுக்கள், பிராம்மணர்கள், ராஜஸ்திரீகள், ஸ்நேகிதன், தாய், குரு, பிராயமுதிர்ந்தவன், சிறுவன், ஜடன், குருடன், தூங்குகிறவன், பயந்தவன், எழுந்திருப்பவன், மதங்கொண்டவன், பித்தன், அஜாக்ரதையாயிருப்பவன், இவர்களின்மீது சஸ்திரங்களைப்போடக்கூடாதென்று இவ்விதம்பெரியோர்களால் முந்தியே மனிதர்களுக்கு எப்பொழுதுமே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டநான் சாஸ்திரத்தினால்சொல்லப்பட்ட சாஸ்வதமானவழியை மீறிச்சென்று தீயவழியினால் இவ்விதமானகார்யம்செய்யத்தொடங்கிக் கோரமானஆபத்தைஅடைந்தேன். பெரிய கார்யத்தைஆரம்பித்துப் பயத்தினால்விடுவதென்பது மிக்ககோரமானஆபத்தென்று வித்வான்கள் சொல்லுகிறார்கள். செய்யஇயலாத கார்யத்தை எந்தமனிதன் தன்சக்திபலத்தினால் இவ்வுலகில் செய்யச் சக்தியுள்ளவன்? தெய்வத்தைக்காட்டிலும் மனுஷ்யபலமானதுபெரிதென்று சிறிதேனும் (கற்றறிந்தவர்களால்) கருதப்படவில்லை. மனிதன் செய்யக்கூடியமுயற்சியைச்செய்து தெய்வத்தினால் ஸித்திக்காமல்போமாகில் அவன் தர்மமானவழியினின்றுநழுவி விபரீதமான வழியை அடைகிறான். ஒருவன் ஒருகார்யத்தைஆரம்பித்துப் பயத்தினால் இவ்வுலகில் நிவிர்த்தியடைவனாகில் கற்றறிந்தவர்கள் அவனுடையகார்யபிரதிஜ்ஞையை அறியாமையின்செயலென்று கூறுகிறார்கள். கெட்டசெய்கையினால் அப்படிப்பட்டஇந்தப்பயம் என்னை வந்து அடைந்துவிட்டது. துரோணபுத்திரன் யுத்தத்தில் எவ்விதத்தினாலும் நிவிர்த்திஅடையமாட்டானன்றோ? இந்த மிகப்பெரிய பூதமானது தெய்வதண்டம்போல (ஸம்ஹாரத்தில்) முயற்சியுள்ளதாக இருக்கிறது. ஆலோசித்துங்கூட எவ்விதத்தினாலும் இதை நான் அறியவில்லை. அதர்மத்தினால்தூண்டப்பட்ட இந்தக்கலக்கமானஎண்ணத்தினுடைய இந்தக்கோரமானபலமானது அனர்த்தத்தைத்தரவல்லதாகிறது; இதுநிச்சயம். எனக்குநேர்ந்திருக்கின்ற அப்படிப்பட்ட இந்த யுத்தநிவிர்த்தியானது தெய்வத்தினாலேயே ஏற்படுத்தப்பட்டது. இச்சமயத்தில் தெய்வபலமின்றி வேறுவிதத்தினால் முயல்வதென்பது

எவ்விதத்தினாலும் ஸாத்யமன்று. அப்படிப்பட்ட நான் இப்பொழுது பிரபுவான மஹாதேவரைச் சரணம் அடைகிறேன். அவர் எனக்கு நேர்ந்திருக்கின்ற இந்தக்கோரமான தெய்வதண்டத்தை நாசஞ்செய்வார். நான் ஜடாதாரியும் தேவதேவரும் உமையவளுக்குப்பதியும்கபாலங்களை மாலையாகஅணிந்தவரும் ருத்ரரும் பகனுடையநேத்திரத்தை அபஹரித்தவருமானசிவபிரானைச் சரணம்அடைகிறேன். அந்தத் தேவரன்றோ தவத்தினாலும் விக்கிரமத்தினாலும் தேவர்களை அதிக்ரமித்திருக்கிறார். ஆதலால்,சூலபாணியான கிரிசரை நான் சரணமடையப்போகிறேன்' என்றுகூறினார்.

## ஏழாவது அத்யாயம்.

## ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(அஶ்வத்தாமா ஈஶ்வரரைத் துதித்ததும், அவருக்கெதிரில் பொன் வேதியில் அக்னி உண்டானதும், அவரருகில் பல பூதங்கள் வந்ததும், அவர் தம்மையே அக்னியில் ஹோமஞ்செய்ய ஈஶ்வரர் ஒரு கத்தியைக் கொடுத்துத் தாமும் அவர் தேகத்திற் பிரவேசித்ததும், அவர் திரும்பிப் பாசறைக்கு வந்ததும்.)

அரசரே! இவ்வாறு ஆலோசித்து அந்தத் துரோணபுத்திரர் ரதமத்தியிலிருந்து இறங்கிப் பரிசுத்தராக நின்றுகொண்டு தியானம் செய்தார். 'உக்கிரஸ்வரூபியும் ஸ்திரமாயிருப்பவரும் மங்களஸ்வரூபியும் அழும்படி செய்கின்றவரும் பிராணிகளை ஹிம்ஸிப்பவரும்ஈசானரும் ஈசுவரரும் கைலாஸமலையில் வஸிப்பவரும் வரன்களைக் கொடுப்பவரும் (ஸம்ஹாரக்ருத்யத்தினால்) விளையாடுபவரும் ஸம்ஸாரத்தை விருத்தி செய்பவரும்அழிவில்லாதவரும் கறுத்தகண்டத்தையுடையவரும் பிறப்பில்லாதவரும்ரோதனஞ்செய்தவரும் தக்ஷருடையயாகத்தை அழித்தவரும் (பாபத்தை) அபஹரிப்பவரும் உலகத்தைத் தம்முருவமாகக் கொண்டவரும் பற்பல ரூபமுள்ளகண்களையுடையவரும் அனேக ரூபமுள்ளவரும் உமைக்குப் பதியாயிருப்பவரும் இடுகாட்டில் வஸிப்பவரும் கர்வமுள்ளவரும் பெரிய கணங்களுக்குப் பதியாயிருப்பவரும் பிரபுவும் கட்வாங்கத்தைத் தரித்தவரும் முண்டிதரும் ஜடையுள்ளவரும் பிரம்மசாரியும் திரிபுரத்தை ஸம்ஹரித்தவருமான இந்த ருத்திரரை, அல்பபுத்தியுள்ளவனால் செய்யமுடியாத

*ஸர்வபூதோபஹாரத்தினால் இப்பொழுது ஆராதிக்கப்போகிறேன். ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவரும் ஸ்தோத்திரம் செய்யுத்தக்கவரும் ஸ்தோத்திரம் செய்யப்படுகின்றவரும் ஸபலமான தர்சனத்துடன் கூடினவரும் தோலைஆடையாக உடுத்தவரும் மிக்க சிவப்புநிறமுள்ளவரும் கறுத்தகண்டத்தையுடையவரும் ஸஹிக்கத்தகாதவரும் தடுக்க முடியாதவரும் சுக்கிரரூபியும் உலகங்களை ஸ்ருஷ்டிப்பவரும் பிரம்மஸ்வரூபியும் பிரம்மசாரியும் சிறந்த விரதமுள்ளவரும் தவத்தில் நிலைபெற்றவரும் முடிவில்லாதவரும் தபஸ்விகளுக்குக் கதியாயிருப்பவரும் அனேகரூபமுள்ளவரும் கணங்களுக்கு அத்யக்ஷரும் மூன்று கண்களையுடையவரும் பிரியமான பாரிஷதர்களையுடையவரும் தனபதியானகுபேரனுக்கு இனியகண்பரும் கௌரீதேவியின்மனத்துக்கு இனியவரும் ஸுப்ரம்மணியருக்குப்பிதாவும் மஞ்சள்நிறமுள்ளவரும் உத்தமமானகாளையை வாகனமாகக்கொண்டவரும் தோலாடையுடுத்தவரும் அதிக உக்கிரரூபியாயிருப்பவரும் உமையை மகிழ்விப்பதிலேயே பற்றுள்ளவரும் உத்தமர்களைக்காட்டிலும் உத்தமரும் எவரைவிட உத்தம வஸ்து இல்லையோ அப்படிப்பட்ட ஸர்வோத்தம வஸ்துவாயிருப்பவரும் உத்தமமான பாணங்களையும் அஸ்திரங்களையும் தரித்தவரும் திசையின் ஓரத்திலிருப்பவரும் தேசங்களை ரக்ஷிப்பவரும் பொற்கவசமணிந்தவரும் விளையாடுபவரும் சந்திரனைத் தலையில் அணிந்தவரும் சரண்யரும் தேவருமான ருத்திரரை உத்தமமான ஸமாதியினால் சரணமடைகிறேன். எவ்விதத்தினாலும் தாண்ட முடியாத இந்தக் கோரமான ஆபத்தை இப்பொழுது நான் தாண்டுவேனாகில் பரிசுத்தமான ஸர்வபூதோபஹாரத்தினால் பரிசுத்தரான ஈஸ்வரரைப் பூஜிப்பேன்' என்று பிரார்த்தித்தார். நல்ல செய்கையையுடைய மஹாத்மாவான அந்த அஸ்வத்தாமாவினுடைய இவ்விதமான முயற்சியை யோகமகிமையினால் அறிந்து அவருடைய முன்னிலையில் ஸ்வர்ணமயமான ஒருவேதி தோன்றியது. அரசரே! அந்த வேதியில் அப்பொழுது அக்னி தோன்றிற்று. அது ஜ்வாலைகளால் திக்குக்களையும் திக்கோணங்களையும் ஆகாயத்தையும் நிரப்புகிறதுபோலிருந்தது. அவ்விடத்தில் ஜ்வலிக்கின்ற முகங்களையும் கண்களையுமுடையவைகளும் அனேக கால்களையும் கழுத்துக்களையுமுடையவைகளும் ரத்தினங்களாலான விசித்திரமான தோள்வளைகளைத் தரித்தவைகளும் அவ்வாறே மேலே தூக்கப்பட்ட கைகளையுடையவைகளும் யானைவடிவமுள்ளவைகளும் மலைபோன்றவைகளு

* பஞ்சபூதங்களாலாகிய தம்சரீரத்தையே பலியாகக் கொடுப்பது.

மான மகாகணங்கள் தோன்றின. பாரதரே! நாய், பன்றி, ஒட்டகம் இவைகளின் வடிவம்போன்ற வடிவமுள்ளவர்களும் குதிரை, நரி, பசு இவைகளின் முகம்போன்ற முகமுள்ளவர்களும் கரடி, பூனை, சிறுத்தை, வேங்கைப்புலி, காக்கை, தவளை, கிளி, பெரியமலைப் பாம்பு, அன்னப்பறவை இவைகளின் முகம்போன்ற முகமுள்ளவர்களும் வெண்ணிறமுள்ளவர்களும் மரங்கொத்திப் பறவை, காடை, ஆமை, முதலை, *சிம்சுமாரம், பெரியசுறுமீன், திமி, குதிரை, அன்றில், புறு, மாடப்புறு, நீர்க்காக்கை இவைகளின் முகம்போன்ற முகமுள்ளவர்களும் உள்ளங்கை போன்ற காதுள்ளவர்களும் ஆயிரம் கண்ணுள்ளவர்களும் பருத்தவயிறுள்ளவர்களும் சதையில்லாதவர்களும் காக்கை, கழுகு இவைகளின் முகமுள்ளவர்களும் அவ்வாறே தலையில்லாதவர்களும் கரடியின் முகமுள்ளவர்களும் பயங்கரமானவர்களும் மிகஜ்வலிக்கின்ற கண்களையும்நாக்குக்களையுமுடையவர்களும் ஜ்வாலையின் வர்ணம்போன்ற வர்ணமுள்ளவர்களும் ஜ்வாலைபோன்ற மயிருள்ளவர்களும் ஜ்வலிக்கின்ற ரோமங்களுள்ளவர்களும் நான்கு கைகளுள்ளவர்களும் செம்மறியாடு, வெள்ளாடு இவைகளின் முகம்போன்றமுகமுள்ளவர்களும் சங்குபோலப் பிரகாசிக்கின்றவர்களும் சங்குபோன்ற முகமுள்ளவர்களும் சங்கின்நிறம்போன்ற நிறமுள்ளவர்களும் சங்கமாலைகளை அணிந்தவர்களும் சங்கின் ஒலிக்குச் சமமான ஒலியுள்ளவர்களும் ஜடைகளைத் தரித்தவர்களும் ஐந்து குடுமியுள்ளவர்களும் முண்டிதர்களும் இளைத்த வயிறுள்ளவர்களும் நான்குகோரப்பற்களையுடையவர்களும் நான்கு நாவுள்ளவர்களும் முளைபோன்றகாதுகளையுடையவர்களும் கிரீடமுள்ளவர்களும் மௌஞ்சியைத்தரித்தவர்களும் சுருண்டமயிருள்ளவர்களும் தலைப்பாகையுள்ளவர்களும் கடுக்கன்களை அணிந்தவர்களும் அழகியமுகமுள்ளவர்களும் நன்றாக அலங்கரிக்கப்பட்டவர்களும் தாமரைமலரையும் கருநெய்தல்மலரையும் தலையிலணிந்தவர்களும் மகுடத்தைத்தரித்தவர்களும் மகிமைபொருந்தியவர்களும் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவுமிருப்பவர்களும் சதக்கினிகளையும்சக்ரத்தையும்உலக்கையையும்கையில் பிடித்திருப்பவர்களும் புசுண்டி பாசம் தண்டம் இவைகளைக்கையில் பிடித்தவர்களும்பின்பக்கங்களில்அம்பறாத்தூணிகளைக்கட்டிக்கொண்டிருப்பவர்களும் ஆச்சரியகரமான பாணங்களால் அதிகரித்தவர்களும் துவஜம், பதாகை, கண்டை, கோடாலி, இவைகளுள்ளவர்களும் பெரியபாசம், உருட்டுத்தடி, தூண்கள், கத்திகள் இவைகளைக்

---

* ஒருவகை முதலை.

கையில்பிடித்தவர்களும் ஸர்ப்பங்களால் உயரச்சுற்றப்பட்ட கிரீடங்களையுடையவர்களும் பருத்தஸர்ப்பங்களைத்தோள்வளைகளாகத் தரிக்கின்றவர்களும், விசித்திரமான ஆபரணங்களைத் தரிக்கின்றவர்களும் புழுதிபடிந்தவர்களும் சேற்றினால் பூசப்பட்டவர்களும் பற்பலவிதமான வஸ்திரங்களையும் மாலைகளையும் அணிந்தவர்களும் கறுத்தஅங்கங்களுள்ளவர்களும் மஞ்சள்நிறமுள்ள அங்கங்களுள்ளவர்களும் வபனஞ்செய்யப்பட்டிருக்கிற முகமுள்ளவர்களும் களிப்புள்ளவர்களும் ஸ்வர்ணவர்ணமுள்ளவர்களுமான பாரிஷதர்கள் அனைவர்களும் பேரிகளையும் சங்கங்களையும் மிருதங்கங்களையும் ஜர்ஜரங்களையும் ஆனகங்களையும் கோமுகங்களையும் வாசித்தார்கள். அவ்வாறே, புருஷசிரேஷ்டர்களான இன்னும் மற்றமஹாரதர்கள் ஸந்தோஷத்துடன் பாடினார்கள்; தாண்டினார்கள்; பாய்ந்தார்கள்; கூத்தாடினார்கள். உக்கிரஸ்வபாவமுள்ளவர்களும், அக்னிஜ்வாலைபோன்றநிலைமயிருள்ளவர்களுமாக வேகத்துடன் ஓடினார்கள். மதங்கொண்ட பெரியயானைகள்போல அடிக்கடி கர்ஜித்தார்கள்; சூரர்களும் பலாத்கரித்துச்சத்ருக்களைக்கொல்லுகின்றவர்களும் ஸஹிக்கமுடியாதவல்லமையுள்ளவர்களுமான அந்தப்பாரிஷதர்கள் அதிகபயங்கரர்களாகவும் கோரரூபமுள்ளவர்களாகவும் சூலங்களையும்பட்டஸங்களையும் கையில்கொண்டவர்களாகவும் பற்பலநிறமான வஸ்திரமுடுத்தவர்களாகவும் சித்திரமானமாலைகளையும் சந்தனங்களையுந்தரித்தவர்களாகவும் ரத்தினங்களால் சித்திரமான தோள்வளைகளைத் தரித்தவர்களாகவும் உயரவெடுக்கப்பட்டகைகளையுடையவர்களாகவும் இருந்தார்கள். சிலர் ரத்தத்தையும் வஸாநீரையும் நெய்யையும் குடிக்கின்றவர்களாகவும் மாம்ஸங்களையும் நரம்புகளையும் தின்கின்றவர்களாகவும் குடுமியுள்ளவர்களாகவும் கோங்கிலவமலர்களைத் தரித்தவர்களாகவும் அதிகஸந்தோஷமுள்ளவர்களாகவும் சட்டிபோன்றவயிறுள்ளவர்களாகவும் மிகக்குறுகியிருப்பவர்களாகவும் மிகநீண்டவர்களாகவும் மிகத்தொங்குகின்ற (அங்கங்களையுடைய)வர்களாகவும் அதிபயங்கரர்களாகவும் விகாரமான ரூபமுள்ளவர்களாகவும் கறுத்தும் தொங்கிக்கொண்டுமிருக்கும் உதடுகளுள்ளவர்களாகவும் பெரிய ஆண்குறியும் கண்டைக்காலும் பீஜமுமுள்ளவர்களாகவும் உத்தமர்களாகவும் பற்பலவகுப்புடையவர்களாகவும் விகாரமானரூபமுள்ளவர்களாகவும் மொட்டைத்தலையுள்ளவர்களாகவும் சடையுள்ளவர்களாகவுமிருந்தார்கள். அவர்கள், ஸூர்யனோடும் சந்திரனோடும் (மற்ற) கிரஹங்களோடும் நக்ஷத்திரங்களோடுங்கூடின ஆகாயத்தைப் பூமியில் உண்டுபண்ணுவார்கள். அவர்கள்

நான்குவிதமான பூதஸமூகத்தை நாசம்செய்வதற்குச் சாமர்த்திய முள்ளவர்கள். அவர்கள் பயமற்றவர்கள்; நித்தியம் ஹரருடையபுருவ நெறித்தலை ஸஹிப்பவர்கள்; நித்தியம் இஷ்டப்படி காரியத்தைச்செய் பவர்கள்; மூவுலகங்களிலுமுள்ள ஈசுவரர்களுக்கு ஈசுவரர்கள்; நித்திய மான ஆனந்தத்தினால் மிகுந்த மனக்களிப்புள்ளவர்கள்; வாக்குக்கு அதிபதிகள்; மாத்ஸர்யமில்லாதவர்கள்; எட்டுவிதஐசுவரியத்தையும் அடைந்தும் அவர்கள் கர்வத்தைஅடையாதவர்கள். பகவானான சங்க ரர் அவர்களுடையகர்மங்களால் நித்தியம் ஆச்சரியத்தைஅடைகிறார். அந்தப்பாரிஷதர்களால் சேர்க்கப்பட்டிருக்கிற மனம்வாக்குச்செய்கை களால் நித்தியம் ஆராதிக்கப்பட்ட அந்த ஈசர், மனத்தினாலும் வாக்கி னாலும் செய்கைகளாலும் பஜிப்பவர்களைத் தாம்பெற்றபுத்ரர்களைப் போல ரக்ஷிக்கிறார். மற்றவர்கள் ரக்தத்தையும் ஊனீரையும் குடிக் கின்றவர்கள்; எப்பொழுதும் பிரம்மத்வேஷிகளிடங்களில் குரோத முள்ளவர்கள். (அத்யாத்ம, அதியஜ்ஞ, அதிதைவ, அதிலோகங்களி லுள்ளதேவதாரூபிகளான அவர்கள் அன்னம், கொடிரஸம், அம்ரு தம், சந்திரமண்டலமென ) நான்குவித ஸ்வரூபத்துடன் கூடின ஸோமரஸத்தை எப்பொழுதும் பானம்செய்பவர்கள். அவர்கள் சாஸ் திரப்பயிற்சியினாலும் பிரம்மசர்யத்தினாலும் தவத்தினாலும் மன அடக்கத்தினாலும் சூலாயுதத்தை அடையாளமாகக்கொண்ட ஈசு வரரை நன்குஆராதித்து ருத்திரஸாயுஜ்யத்தை அடைந்தவர்கள். சென்றது நிகழ்கின்றது வருவது இவைகளுக்குப் பிரபுவாயும் ஷாட்குண்யபரிபூர்ணராயுமிருக்கின்ற மஹேசுவரர் பார்வதியுடன் தம்முடைய ஸாயுஜ்யம்பெற்ற மகாபூதகணங்களோடு ஸுகானுப வம்செய்கிறார். அவர்கள் பற்பலவாத்யங்களாலும் அட்டஹாஸத் தாலும் ஸிம்மநாதத்தாலும் சிறந்தகர்ஜனத்தாலும் உலகத்தை நடுங் கச்செய்துகொண்டு அஸ்வத்தாமாவுக்கு எதிர்முகமாக வந்தார்கள். மஹாதேவரை ஸ்தோத்திரஞ்செய்கின்றவைகளும் ஒளிகளைப் பரப்பு கின்றவைகளும் நல்லகாந்தியையுடையவைகளும் மஹாத்மாவான துரோணபுத்திரருடைய மகிமையை விருத்திசெய்யக்கருதியவை களும் அவருடைய அந்தத்தேஜஸைஅறிய எண்ணங்கொண்டவை களும் ஸௌப்திகவதத்தைப் பார்க்கவிரும்பினவைகளும் பயங் கரமும்உக்ரமுமானபரிகம், கொள்ளி, சூலம், பட்டஸம் இவைகளைக் கையில்பிடித்தவைகளும் கோரரூபமுள்ளவைகளுமான பூதஸங்கங் கள் ஆயிரம்ஆயிரமாக எதிர்முகமாகவந்தன. எந்தப்பூதகணங்கள்

* ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் ஆகிய பிராணிக்கூட்டம்.

பார்த்தமாத்திரத்திலேயேமூவுலகங்களுக்கும் பயத்தை உண்டுபண்ணுகின்றவைகளோ அப்படிப்பட்ட பூதகணங்களைத் துரோணபுத்திரர் பார்த்தும் (பயத்தினால்) வருத்தத்தை அடையவில்லை. பிறகு, துரோணபுத்திரர் •வில்லைக் கையில்கொண்டவராகவும் உடும்புத்தோலால் செய்த விரலுறைகட்டிக்கொண்டவராகவும் தாமாகவே தம்மனத்தினால் தம்மைப்பலியாக ஏற்படுத்தினார். பாரதரே! மனோதைர்யமுள்ள துரோணபுத்திரருடைய அந்தக்கர்மாவில் விற்களே ஸமித்துக்களும் கூர்மையுள்ளபாணங்களே பவித்திரங்களும் ஆத்மாவே ஹவிஸ்ஸுமாக இருந்தன. பிறகு, பிரதாபசாலியும் அதிககோபமுள்ளவருமான துரோணபுத்திரர் ஸோமனைத் தேவதையாகக்கொண்ட மந்திரத்தினால் தம்மைப் பலியாக ஏற்படுத்தினார். பயங்கரமானசெய்கையுள்ளவரும் ரௌத்ரமான கர்மாக்களால் (சத்துருஸம்ஹார விரதத்தினின்று) தவறாதவரும் மஹாத்மாவுமான அந்த ருத்திரரை ஸ்தோத்திரஞ்செய்து கைகளைக் குவித்துக்கொண்டு இவ்வாறு கூறினார்.

'பகவானே! அங்கிரஸினுடையகுலத்திலுதித்த இந்தஆத்மாவை இப்பொழுது நான் நல்லஅக்னியில் ஹோமஞ்செய்கிறேன். என்னைப் பலியாகஏற்றுக்கொள்ளும். மகாதேவரே! உலகத்தையே ஸ்வரூபமாகக்கொண்டவரே! தேவரீரிடத்திலுள்ள பக்தியினால் உத்தமமானஸமாதியினால் இந்தஆபத்தில் உம்முடையஸந்நிதியில் செய்யத்தொடங்குகிறேன். உம்மிடத்தில் எல்லாப்பிராணிகளும் நிலைபெற்றிருக்கின்றன. எல்லாப்பூதங்களிலும் நீர் நிலைபெற்றிருக்கிறீர். பிரதானமான குணங்கள்மாத்திரம் உம்மிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன. எல்லாப்பிராணிகளுக்கும் ஆதாரமாகஇருப்பவரே! விபுவே! தேவரே! என்னால் பகைவர்கள் வெல்லக்கூடாதவர்களாகிவிட்டால் ஹவிஸாயிருக்கின்ற என்னை ஏற்றுக்கொள்ளும்' என்றார். துரோணபுத்திரர் இவ்வாறு சொல்லிவிட்டு ஜ்வலிக்கின்ற அக்னியுடன்கூடின அந்தவேதியின்மீதேறித் தம்முயிரை இழக்கத்துணிந்து அக்னியில் உட்கார்ந்தார். கைகளைஉயரத்தூக்கியவரும் அசைவற்றவரும் ஹவிஸாகஅநுகிவந்தவருமான அவரைக்கண்டு, ஷாட்குண்யபரிபூர்ணரான ஸாக்ஷாத் மகாதேவர் சிரித்துக்கொண்டு கூறலானார்.

'உத்தமமான செய்கைகளையுடைய கிருஷ்ணனால் மெய்மை, தூய்மை, நேர்மை, தவம், நியமம், பொறுமை, பக்தி, தைர்யம், செய்கை, மனம், வாக்கு இவைகளால் உள்ளபடி நான் ஆராதிக்கப்பட்டேன். ஆதலால், கிருஷ்ணனைக்காட்டிலும் அதிகஇஷ்டமானவன் எனக்கு வேறுஒருவன் இல்லை. அப்பா! நன்குமதிப்பைச்செய்

கின்றவனும் உன்னை அறிய எண்ணங்கொண்டவனுமான என்னால் எப்பொழுதும் பாஞ்சாலர்கள் காக்கப்பட்டார்கள். மாயைகளும் பல வாறாக உண்டுபண்ணப்பட்டன. பாஞ்சாலர்களை ரக்ஷிக்கின்றஎன்னால் அந்தக்கிருஷ்ணனுக்கே நன்மதிப்புச்செய்யப்பட்டது. அவர்களோ காலத்தினால் அவமதிக்கப்பட்டுவிட்டார்கள். இனி அவர்களுக்கு உயிர் இல்லை' என்றார். பகவான் இவ்வாறுசொல்லிவிட்டுத் தம் முடையசரீரமாகஇருக்கிற மஹாத்துமாவான அஸ்வத்தாமாவினிடம் ஆவேசித்தார். அவருக்கு மாசற்றதாயும் உத்தமமாயுமிருக்கிற ஒரு கத்தியையும் கொடுத்தார். பிறகு, பகவானால் அனுப்பிரவேசிக்கப் பட்ட அஸ்வத்தாமா மீண்டும் தேஜஸினால் ஜ்வலித்தார். தேவரால் கொடுக்கப்பட்ட தேஜஸினால் யுத்தத்தில் வேகமுள்ளவருமானார். பாசறைக்கு நாற்பக்கங்களிலும் செல்லுகின்றவரும் மஹாரதரு மான அந்தத் துரோணபுத்திரரை, செல்லுகின்றவரும் தேவதேவ ரும் (பாவத்தை) அபஹரிப்பவரும் ஸ்திரமாக இருப்பவருமான ஸாக்ஷாத் ஈசுவரரைப்போலக்கண்டு அந்தப்பூதங்களும் ராக்ஷஸர் ...ட்டனர்'' என்றான்.

## எட்டாவது அத்யாயம்.

### ஸௌப்திகபர்வம். (தொடர்ச்சி.)

(அஸ்வத்தாமா பாசறைவாயிலில் கிருபரையும் கிருதவர்மாவை யும் வைத்து உள்ளேசென்று திருஷ்டத்யும்னன் த்ரௌ பதீபுத்திரர்கள் முதலானவர்களைக் கொன்றதும், பயந்து வெளியில் ஓடினவர்களைக் கிருபரும் கிருதவர்மாவும் கொன்றதும்.)

திருதராஷ்டிரன், "மஹாரதரான துரோணபுத்திரர் அவ்வாறு பாசறையைக்குறித்துச் சென்றவுடன், கிருபரும் கிருதவர்மாவும் பயத்தினால் பீடிக்கப்பட்டுத் திரும்பாமலிருந்தார்களா? (அவ்விரு வரும்) அல்பர்களானகாவலாட்களால் தடுக்கப்படாமலிருந்தார்களா? ரக்ஷகர்களால் காணப்படாமலிருந்தார்களா? மஹாரதர்களான அவ் விருவரும் பொறுக்கமுடியாதகாரியமென்று எண்ணித் திரும்பா மலிருந்தார்களா? ஸஞ்சய! பாசறையை நாசஞ்செய்து ஸோமகர் களையும் பாண்டவர்களையும் கொன்று இரவில் அந்தப்பிரதிஜ்ஞை யானது ஸபலமாகச்செய்யப்பட்டதா? அந்தத்துரோணபுத்திரர் எவ் விதத்தினாலும் செய்யமுடியாதகாரியத்தைச்செய்து யுத்தத்தில் உத்

தமமான துர்யோதனனுடையவழியை அடைந்து நின்றாரா? தூங்கிக்கொண்டிருந்த திருஷ்டத்யும்னனையும் சிகண்டியையும் த்ரௌபதியின் புத்திரர்களையும் (மற்றுமுள்ள) பாண்டவசைனிகர்களையும் கொன்று அவர்களால் பூமிமூடப்பட்டதா? ஸஞ்சய! படுத்திருந்தவர்களும்கொல்லப்பட்டவர்களும் ரத்தத்தினால் நனைக்கப்பட்டவர்களுமானபாஞ்சாலர்களால் பூமியானது மூடப்பட்டதா? அதனை எனக்குச் சொல்வாயாக. வீரர்களான திருஷ்டத்யும்னன் சிகண்டி இருவரும் பாஞ்சாலர்களோடு கொல்லப்பட்டுப் பூமியில்படுத்தார்களா? ஸஞ்சய! அவ்விருவராலும் என்னகாரியம் செய்யப்பட்டது? அதனை எனக்குச் சொல்வாயாக" என்று வினவ, ஸஞ்சயன் சொல்லலானான்.

"மஹாத்மாவான அந்தத்துரோணபுத்திரர் பாசறையைக்குறித்துச் சென்றவுடனே, கிருபரும் கிருதவர்மாவும் த்ரோணபுத்திரரையே பின்தொடர்ந்தார்கள். அரசரே! அஸ்வத்தாமாவோ முயற்சியுள்ளவர்களான அந்த இரண்டு மஹாரதர்களையுங்கண்டு ஸந்தோஷமுள்ளவராக மெதுவாக இந்தவசனத்தைக்கூறலானார். 'முயற்சியுள்ளவர்களான நீங்கள் இருவருமே எல்லாக்ஷத்திரியர்களையும் நாசஞ்செய்வதில் போதுமானவர்கள். மிகுந்திருப்பவர்களும் பெரும்பாலும் உறங்கிக்கொண்டிருக்கின்றவர்களுமான இந்தயுத்தவீரர்களைக்கொல்வதில் ஸந்தேகமேது? நான் பாசறையில் பிரவேசிக்கப் போகிறேன். காலன் போல் ஸஞ்சரிக்கப்போகிறேன்; ஒருமனிதனாவது உயிரோடு உங்கள் இருவரிடமிருந்தும் விடுபடாதபடியானகாரியத்தை நீங்கள்செய்ய வேண்டுமென்பது என்னுடைய நிச்சயமானவிருப்பம்' என்றார். அஸ்வத்தாமா இவ்விதம்சொல்லி, தமது பயத்தைவிட்டு பார்த்தர்களின் பெரியபாசறையில் வேறுவழியாக ஆக்ரமித்துப்பிரவேசித்தார். மிக்க புஜபலமுள்ளவரும் (அந்தப்பாசறையினுடைய) அமைப்புக்களை அறிந்தவருமான அந்தத்துரோணபுத்திரர் மிக்ககோபங்கொண்டு தேஜஸினால் நன்குஜ்வலிக்கின்றவராகி உள்ளேபுகுந்து, பிறகு, இரவில் நன்றாக நித்திரைசெய்துகொண்டிருக்கிற எல்லாஜனங்களையும் சுற்றிப்பார்த்தார். திருஷ்டத்யும்னனுடைய இருப்பிடத்தை மெதுவாகநெருங்கினார். 'அவர்களோ யுத்தத்தில் பெரியகாரியத்தைச்செய்து மிகக்களைத்தவர்களாகவும் கவலையற்றவர்களாகவும் தங்கள் படைவீரர்களால் சூழப்பட்டவர்களாகவும் நன்கு உறங்கிக்கொண்டிருந்தார்கள். பாரதரே! பிறகு, த்ரௌணியானவர் திருஷ்டத்யும்னனுடைய அந்தவீட்டில்நுழைந்து சயனத்தில்தூங்குகிற அவனை ஸமீபத்தில்கண்டார். வேந்தரே! வெண்பட்டினால்வெண்மையாகஇருக்கிறதும் பெரியதும்

சிறந்தமேல்விரிப்பினால் மூடப்பட்டுள்ளதும் சிறந்தபுஷ்பமாலைகளோடுகூடியதும் வாஸனைப்புகைகளாலும் சூர்ணங்களாலும் நன்மணம் உண்டுபண்ணப்பட்டதுமானபடுக்கையில் படுத்திருப்பவனும் மஹாபலமுள்ளவனும் நம்பிக்கையுள்ளவனும் ஓரிடத்திலிருந்தும் பயமில்லாதவனும் தூங்கிக்கொண்டிருப்பவனுமான திருஷ்டத்யும்னனைக் காலால் உதைத்தார். யுத்தத்தில்கெட்டமதங்கொண்டவனும் அளவிடமுடியாத பலமுள்ளவனுமான அந்தத்திருஷ்டத்யும்னன் காலாலுதைத்ததினால் தூக்கம்விழித்து எழுந்திருந்து, (உதைத்தவர்) மகாரதரான துரோணபுத்திரரென்று அறிந்தான். மஹாபலசாலியான அஸ்வத்தாமா சயனத்தினின்று எழுந்திருக்கின்ற பாஞ்சால்யனை இருகைகளாலும் மயிர்களிற்பிடித்துப் பூமியில்தேய்த்தார். பாரதரே! அந்தத்ரௌணியினால் பலத்தினால் தேய்க்கப்பட்டவனும் (சத்துருவினால்)சூழப்பட்டவனும் நித்திரையினால்விவேகத்தைஇழந்தவனுமான அந்தத்திருஷ்டத்யும்னன் அப்பொழுது ஒன்றும்செய்வதற்குச் சக்தியற்றவனானான். பிறகு,குரூரபுத்தியுள்ளவரும் அதிககோபமுள்ளவருமான துரோணபுத்திரர் பாஞ்சாலராஜகுமாரனை விரைவாகப்பூமியில் தேய்த்துப் பரபரப்புடன் வில்லிலுள்ள நாண்கயிற்றைஅவிழ்த்து அவனுடையகழுத்தில் அந்தநாண்கயிற்றைக்கட்டி விரைவுள்ளவராகவும் கோபமீறினவராகவும் மனத்தைக்குரூரமாகச்செய்துகொண்டு அப்பொழுது அவனைக் கொன்றார். மன்னவரே! துரோணபுத்திரர் காலினால் அவனைக் கழுத்திலும் மார்பிலும் கால்களிலும் ஏறிமிதித்துக்கொண்டு, அலறுகின்றவனும் துடிக்கின்றவனுமான அந்தத்திருஷ்டத்யும்னனை ஆட்டைக்கொல்வதுபோலக் கொன்றார். பலசாலியான த்ரௌணியினால் வேகத்துடன் பலத்தினால் தடுக்கப்படுகின்றவனும் பலசாலியுமான அந்தப்பாஞ்சாலராஜகுமாரன் நகங்களால் த்ரௌணியைக்கீறிக்கொண்டு விளக்கமாயில்லாமல் ஒருவசனத்தை உரைக்கலானான். 'ஆசார்யபுத்திர! சஸ்திரத்தினால் என்னைக்கொன்றுவிடு; தாமஸம் செய்யாதே. மனிதர்களுள்சிறந்தவனே! உன்னால் புண்ணியசாலிகளுடையலோகங்களை அடைவேனாக' என்றான். சத்துருக்களைத்தவிக்கச்செய்பவரும் பலசாலியுமான த்ரௌணியால் நன்றாக ஆக்கிரமிக்கப்பட்டவனும் பாஞ்சாலராஜகுமாரனுமான திருஷ்டத்யும்னன் இவ்விதவசனத்தைச்சொல்லி ஓய்ந்தான். அஸ்வத்தாமா அவனுடைய விளக்கமில்லாத அந்தவாக்கைக்கேட்டு,'குலத்தைக்கெடுத்த பாவி! ஆசார்யர்களைக்கொல்லுகின்றவர்களுக்கு நல்லஉலகங்கள்கிடையா. கெட்டபுத்தியுள்ளவனே! ஆதலால், சஸ்திரத்தினால் நீ நாச

மடையத்தக்கவனல்லை. குரூரனாகவும் வரம்புகடந்தவனாகவுமிருந்த உன்னால் என்னுடையபிதா கொல்லப்பட்டார். ஆதலால், கொடிய செய்கையைச்செய்தவனாகிய நீயும் குரூரனை என்னால் கொல்லப்படத் தக்கவன்' என்றார். இவ்விதம்சொல்லிக்கொண்டு கோபத்துடன் ஸிம்மமானது மதயானையைக்கொல்வதுபோல அதிகுரூரமான காலுதைகளால் அந்தவீரனை மர்மஸ்தானங்களில் உதைத்தார். மஹாராஜரே! வீட்டில்கொல்லப்படுகின்ற அந்தவீரனுடைய சப்தத்தினால் ஸ்திரீகளும் அவனுடைய காவற்காரர்களும் விழித்துக்கொண்டார்கள். அவர்கள் (திருஷ்டத்யும்னனைக்) கொல்லுகின்றவரும் மனுஷ்யபலத்தைமீறிய பலத்தையுடையவருமான அந்தத்துரௌணியைக்கண்டு பூதமென்று எண்ணிப் பயத்தினால் பேசாமலிருந்துவிட்டார்கள். அந்தப்பாஞ்சாலராஜனை அந்தஉபாயத்தினால்யமலோகத்துக்கனுப்பி, அதிக தேஜஸுடன் அழகான காட்சியுள்ள ரதத்தை யடைந்து, அதில்ஏறினார். அரசரே! பலசாலியான அந்த அஸ்வத்தாமா திருஷ்டத்யும்னனுடைய இருப்பிடத்தினின்று வெளியில்வந்து திசைகளை நாற்பக்கங்களிலும் ஒலிக்கச்செய்துகொண்டு சத்துருக்களைக்கொல்ல எண்ணி ரதத்துடன் (மற்றவருடைய) பாசறையைநோக்கிச் சென்றார்.

பிறகு, மஹாரதரான அந்தத் துரோணபுத்திரர் புறப்பட்டுப் போனவுடன், அப்பொழுது ஒன்றுசேர்ந்திருக்கிற காவற்காரரெல்லாருடனும் ஸ்திரீகள் உரக்க அலறினார்கள். பாரதரே! அரசனை திருஷ்டத்யும்னன் கொல்லப்பட்டதைக்கண்டு; அவனைச்சார்ந்த அரசர்களனைவரும் மிக்க சோகமுள்ளவர்களாக உரக்க அலறினார்கள். அந்தஸ்திரீகளுடைய அந்தச் சப்தத்தினால் ஸமீபத்திலிருந்த க்ஷத்திரியசிரேஷ்டர்கள் பரபரப்புள்ளவர்களாக யுத்தஸன்னாஹம்செய்தார்கள்; 'இதுஎன்ன' என்றும் சொன்னார்கள். அரசரே! அந்த ஸ்திரீகளோ பாரத்வாஜரான அஸ்வத்தாமாவைப்பார்த்து மிகப்பயந்தவர்களாகி, 'சீக்கிரம் ஓடுங்கள். ராக்ஷஸனோ மனிதனோ இவனை யாரென்று நாம் அறியோம். பாஞ்சாலராஜரைக் கொன்றுவிட்டு ரதத்தில் ஏறிக்கொண்டிருக்கிறான்' என்று துன்பக்குரலுடன் சொன்னார்கள். பிறகு, அந்தச் சிறந்தயுத்தவீரர்கள் அந்த அஸ்வத்தாமாவை விரைவாகச் சூழ்ந்துகொண்டார்கள். அவர் வருகின்றஅவர்களனைவரையும் ருத்திராஸ்திரத்தினால் நாசம்செய்தார். அவர் திருஷ்டத்யும்னனையும் அவனுடைய அந்த வீரர்களையும் கொன்று பக்கத்தில் சயனத்தில் உறங்கிக்கொண்டிருந்த உத்தமௌஜஸையும் பார்த்தார். அவனையும் காலால் கழுத்திலும் மார்பிலும் பராக்கிரமேத்

தினால் மிதித்து, விசேஷமாக அலறுகின்றவனும் சத்துருக்களை அடக்குகிறவனுமான அவனை அவ்விதமாகவே கொன்றார். விக்கிரமமுள்ளவனான அந்த யுதாமன்யுவும் அந்த அஸ்வத்தாமாவை ராக்ஷஸனென்றெண்ணிக் கதையை எடுத்துக்கொண்டு வேகத்துடன் மார்பில் அடித்தான். துரோணபுத்திரர் யுத்தத்தில் கதாயுதத்தினால் அடிக்கப்பட்டும் அசையவில்லை. த்ரௌணியானவர் வேகத்துடன் எதிர்த்தோடி அவனைப்பூமியில் தள்ளினார். துடிக்கின்ற இந்த வீரனையும் திருஷ்டத்யும்னனைக் கொன்றபடியே ஆட்டைக் கொல்வது போலக் கொன்றார். அந்தவீரர் அவ்வாறு அவனைக் கொன்றபிறகு, மற்றவர்களைக்குறித்தும் ஓடினார். ராஜேந்திரரே! கோபமுள்ளவரான அஸ்வத்தாமா ஆங்காங்கு தூங்கிக்கொண்டிருந்த மஹாரதர்களான பாஞ்சால வீரர்களை அருகிற்சென்று வலிந்து கொன்றார். த்ரௌணியானவர் துடிக்கின்றவர்களும் நடுங்குகின்றவர்களுமான அந்த வீரர்களை யாகத்தில் *சமிதா பசுக்களைக் கொல்வதுபோலக் கொன்றார். பிறகு, கத்திச்சண்டையில் ஸமர்த்தரான த்ரௌணியானவர், கத்தியையெடுத்து வெவ்வேறான யுத்தமார்க்கங்களில்ஸஞ்சரித்துக்கொண்டு மற்றவர்களையும் தனித்தனியாகக் கொன்றார். அவ்வாறே, †குல்மத்தில் படுத்திருப்பவர்களும் குல்மமத்தியிலிருப்பவர்களும் களைத்தவர்களும் ஆயுதங்களை வைத்துவிட்டவர்களுமான எல்லாவீரர்களையும் கத்தியினாலேயே வெட்டி நாசஞ்செய்தார். ரக்தத்தினால் நனைக்கப்பட்ட எல்லா அங்கங்களோடுங் கூடினவரும் காலனால் உண்டுபண்ணப்பட்ட அந்தகன்போன்றவருமான அந்தத் த்ரௌணியானவர் உத்தமமான கத்தியினால் போர்வீரர்களையும் குதிரைகளையும் யானைகளையும் வெட்டினார். அவர், வெட்டப்பட்டிருக்கிற சரீரத்தையுடையவர்களாகத் துள்ளுகின்ற அவர்களுடைய சரீரங்களினின்று தெறிக்கின்ற ரத்தத்துளிகளாலும் கத்தியை மேலே தூக்குவதினாலும்கீழாகச்சுழற்றுவதினாலும் மூன்றுவிதமாக ரக்தத்தினால் நனைக்கப்பட்டவரானார். ரக்தத்தினால் சிவந்த நிறமுள்ளவரும் ஜ்வலிக்கின்ற கத்தியையுடையவரும் போர்புரிகின்றவருமான அவருடைய வடிவமானது அமானுஷ வடிவம்போல் அதிக பயங்கரமாக விளங்கியது. கௌரவரே! விழித்துக்கொண்டவர்களும் சத்தத்தினால் மயங்கினார்கள். பார்க்கின்ற அவர்கள் அந்த இடத்தில் துரோணபுத்திரரைப் பார்த்து அதிக மனவருத்தத்தை அடைந்தார்கள். அந்த க்ஷத்திரியர்கள் சத்துருக்களை நாசஞ்செய்கின்றஅந்தத்ரௌணியினுடைய ரூபத்தைக்

---

* யாகபசுவைக் கொல்பவன். † பாசறைப்பாதுகாப்புச்சேனை.

கண்டு அவரை ராக்ஷஸனென்று எண்ணிக் கண்களை மூடிக்கொண்டார்கள். கோரரூபியான அந்த அஸ்வத்தாமா அப்பொழுது பாசறையில் காலன்போல ஸஞ்சரித்தார். த்ரௌபதியின் புதல்வர்களையும் மிகுந்திருக்கின்ற ஸோமகர்களையும் கண்டார். அரசரே! அந்தச் சத்தத்தினால் பயந்த மகாரதர்களான த்ரௌபதீபுத்திரர்கள் திருஷ்டத்யும்னன் கொல்லப்பட்டதைக் கேட்டுப் பயமில்லாதவர்களாகக் கையில் வில்லை எடுத்து அஸ்வத்தாமாவின்மீது பாணஸமூகங்களை இறைத்தார்கள். பிறகு, அந்தச் சப்தத்தினால் நன்றாக விழித்துக்கொண்ட பிரபத்ரகர்களும் சிகண்டியும் துரோணபுத்திரர்மீது பாணங்களைப் பிரயோகித்துத் துன்பஞ்செய்தார்கள். அந்தப் பாரத்வாஜர் சரவர்ஷங்களை வர்ஷிக்கின்ற அந்த மஹாரதர்களைக் கண்டு அவர்களைக் கொல்ல எண்ணங்கொண்டு உரக்க ஸிம்மநாதம்செய்தார். பிறகு, அதிக கோபமுள்ளவரான துரௌணியானவர் பிதாவினுடைய வதத்தை நினைத்து ரதமத்தியினின்று இறங்கி விரைவுள்ளவராக அவர்களுக்கு எதிரில் ஓடினார். அதிக பலமுள்ளவரான த்ரௌணி யுத்தத்தில் ஆயிரம் சந்திரப்பிரதிமைகளால் நிர்மலமாயிருக்கின்ற கேடகத்தையும் திவ்யமானதும் ஸ்வர்ணத்தினாலலங்கரிக்கப்பட்டதும் பளபளப்புள்ளதுமான கத்தியையும் கையில் எடுத்துக்கொண்டு த்ரௌபதீ புத்திரர்களை எதிர்த்து ஓடிக் கத்தியினால் அவர்களை வெட்ட ஆரம்பித்தார். வேந்தரே! பிறகு, புருஷஸ்ரேஷ்டரான அந்த அஸ்வத்தாமா மஹாயுத்தத்தில் பிரதிவிந்தியனை வயிற்றில் வெட்டினார். அவன் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்தான். பிரதாபசாலியான ஸுதஸோமன் பிராஸாயுதத்தினால் துரௌணியை அடித்து மறுபடியும் கத்தியை எடுத்துக்கொண்டு அவருக்கு அருகில் ஓடிவந்தான். நரஸ்ரேஷ்டரே! (அஸ்வத்தாமா) ஸுதஸோமனுடைய கத்தியுடன் கூடின அந்தக் கையை அறுத்து மீண்டும் விலாப்பக்கத்தில்அடித்தார். அவன் மார்பு பிளக்கப்பட்டுக் கீழே விழுந்தான். வீர்யசாலியும் நகுல புத்திரனுமான சதானீகன் இருகைகளாலும் ரதசக்ரத்தைத் தூக்கி வேகத்துடன் அவரை மார்பில் அடித்தான். அந்தப் பிராம்மணரோ சக்கரத்தைவிட்ட சதானீகனை அடித்தார். அவன் தளர்ச்சியுற்றுப் பூமியை அடைந்தான். பிறகு, அவர் அவனுடைய தலையை வெட்டினார். சுருதகர்மாவோ எவ்விதத்தினாலும் நெருங்கமுடியாத கோரமான பரிகத்தை எடுத்து உரக்கச் சிரித்துக்கொண்டு முயன்று வேகத்தோடு துரோணபுத்திரரை அடித்தான். அவரோ அந்த ஸ்ருதகர்மாவை

உத்தமமான கத்தியினால் முகத்தில் வெட்டினார். வெட்டப்பட்ட அந்த ப்ருதகர்மா தலையை இழந்து விகாரமுள்ள முகத்துடன்கூடியவனாகப் பூமியில் விழுந்தான். அந்தச் சத்தத்தினால் வீரனான சுருதகீர்த்தி விழித்துக்கொண்டான்; அஸ்வத்தாமாவை வந்தணுகிச் சரமாரிகளைப் பொழிந்தான். மஹாராஜரே! அவனால்பாணங்களால்மூடப்பட்டிருக்கிற மகாரதரான துரோணபுத்திரர் முட்களால் நிறைந்த முள்ளம்பன்றிபோலக் காணப்பட்டார். அந்தத் துரௌணியானவர், அவனுடைய சரமாரிகளையும் கேடகத்தினால் தடுத்துப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற குண்டலங்களுடன்கூடின தலையை உடலினின்று கவர்ந்தார். பிறகு, பீஷ்மரைக்கொன்றவனும் வீரனுமான சிகண்டியையும் எல்லாப் பிரபத்ரகர்களையும் பலத்தினால் எல்லா ஆயுதங்களாலும் அடித்தார். சிகண்டியும் த்ரௌணியின் இரண்டு புருவங்களுக்கும் இடையில் சிலீமுகத்தினால் அடித்தான். குரோதத்தினால் மூடப்பட்டவரும் மஹாபலசாலியுமான அந்தத் துரோணபுத்திரரோ சிகண்டியைநெருங்கிக் கத்தியினால் அவனை இரண்டாகத்துண்டாக்கினார். குரோதத்தினால் மூடப்பட்டவரும் சத்துருக்களைத்தவிக்கும்படிசெய்கின்றவரும் வேகமுள்ளவருமான அஸ்வத்தாமா, பிறகு, சிகண்டியைக்கொன்று எல்லாப்பிரபத்ரகர்களுடைய கூட்டங்களையுங்குறித்து எதிர்த்தோடினார். விராடன், துருபதன், அவனுடைய புத்திரர்கள், பௌத்திரர்கள், நண்பர்கள் இவர்களுடையஎந்தச்சேனை மிகுந்திருந்ததோ அதைநோக்கி த்ரௌணி விரைவாகஓடினார். மஹாபலசாலியான அவர் அந்தஇடத்தில் (அதைக்)கண்டு கோரமான வதத்தைச்செய்தார். கத்திப்போர்வழிகளில் ஸமர்த்தரான துரௌணியானவர் மற்றவர்களையும் மற்றவர்களையும் எதிர்த்து ஓடிஓடிக் கத்தியினால் வெட்டினார். அரசரே! பெரியவரே! அந்தப்பிரதானயுத்தவீரர்கள், கறுத்த நிறமுள்ளவளும் சிவந்தமுகத்தையும் கண்களையுமுடையவளும் சிவந்தமாலையையும் சந்தனத்தையுந்தரித்தவளும் சிவந்தவஸ்திரத்தைஉடுத்தவளும் கோரஸ்வரூபியும் பாசத்தைக் கையில்கொண்டவளும் குடும்பினியாகஇருப்பவளும் சிரிக்கின்றவள்போல் நிற்பவளும் கோரமான பாசங்களால் மனிதர்களையும் குதிரைகளையும் யானைகளையும் கட்டிக்கொண்டு புறப்பட்டுப்போகின்றவளும் பாசத்தினால் கட்டப்பட்ட தலைமயிரில்லாத பற்பல ப்ரேதங்களைக் கொண்டுபோகின்றவளும் அவ்வாறே எப்பொழுதும் ஆயுதங்களைக்கீழேவைத்தவர்களாகவும் தூங்குகின்றவர்களாகவுமிருக்கும் மகாரதர்களைக்கொண்டுபோகின்றவளுமானகாளராத்ரியையும் கொல்லுகின்ற துரோண

புத்திரரையும் மற்றராத்திரிகளில் நித்தியம் கனவில் கண்டார்கள். குருபாண்டவஸேனைகள் இரண்டுக்கும் சண்டைதொடங்கியதினம் முதலே (ஸ்வப்னத்தில்) அந்தக்கன்னிகையையும் துரோணபுத்திரரையும் கண்டார்கள். எல்லாப்பிராணிகளையும் பயப்படும்படிசெய்துகொண்டு பயங்கரமானசப்தங்களை வெளியிடுகின்ற துரோணபுத்திரர் முந்தியே தெய்வத்தினலடிக்கப்பட்ட அந்தப்போர்வீரர்களைப் பிறகு வீழ்த்தினர். தெய்வத்தினல் பீடிக்கப்பட்டவர்களான அந்தவீரர்கள் முன்கண்டிருந்தஅந்தஸ்வப்பனக்காட்சியைநினைத்து,'இதுதான் அது' என்று எண்ணினார்கள். பிறகு, அந்தச்சப்தத்தினல் பாண்டவர்களுடைய பாசறையிலிருந்தவில்லாளிகள் நூறுநூருகவும் ஆயிரமாயிரமாகவும்விழித்துக்கொண்டார்கள். அவர் காலத்தினுலுண்டுபண்ணப்பட்ட அந்தகன்போல, ஒருவனுடைய இருகால்களையும் மற்று ஒருவனுடைய இடையையும் வெட்டினர். சிலரை விலாப்பக்கங்களில் பிளந்தார். பிரபுவே ! அதிகஉக்கிரமாகப் பொடிபண்ணப்பட்டவர்களும் அலறுகின்றவர்களும் அதிகமாகத்துள்ளுகின்றவர்களும் யானைகளாலும் குதிரைகளாலும் நொறுக்கப்பட்டவர்களுமானமற்றவர்களால் பூமியானது நிரம்பியதாயிற்று. 'இதுஎன்ன? இவன் யார்? என்னசப்தம்? என்ன? என்னசெய்யப்பட்டது?' என்றுஅலறுகின்ற பாஞ்சாலர்களுக்கு அஸ்வத்தாமா அவ்வண்ணம் அந்தகனுக ஏற்பட்டார். அடிப்பவர்களுள்சிறந்தவரான துரௌணியானவர் சஸ்திரங்களும் ஸஞ்ஞையும் இல்லாதவர்களும் உள்ளவர்களுமான பாண்டவவீரர்களையும் ஸ்ருஞ்சயர்களையும் ம்ருத்யுலோகத்துக்கு அனுப்பினர். பிறகு, அவருடைய சஸ்திரத்தினின்று விசேஷமாகப் பயந்தவர்களும் நித்திரையினுல் ஒன்றும்தெரியாதவர்களும் பிரஜ்ஞையை இழந்தவர்களுமான மனிதர்கள் பயத்தினுல் எதிரில்ஓடிவந்து ஆங்காங்கு விழுந்தார்கள். அவர்கள் தொடைநடுக்கமுள்ளவர்களாகவும் மூர்ச்சையினுல் பராக்கிரமமழிக்கப்பட்டவர்களாகவும் அதிகமாகச் சத்தமிடுகின்றவர்களாகவும் மிக்கபயமுற்றவர்களாகவும் பரஸ்பரம் பார்த்துக்கொண்டார்கள். பிறகு, பயங்கரமான தோற்றத்துடன் கூடிய த்ரௌணியானவர் வில்லைக்கையிற்கொண்டு மீண்டும் ரதத்திலேறிப் பாணங்களால் மற்றவர்களையும் யமலோகத்துக்கு அனுப்பினர். மறுபடியும் தூரத்தினின்று எதிர்த்துவருகின்றவர்களான புருஷசிரேஷ்டர்களையும் நேரில்வருகின்ற மற்றச்சூரர்களையும் காளராத்திரியினிடம் நிவேதனம்செய்தார். அவ்வாறே, அவர் தேர்செல்லுவதனுல் அதிகமாகநாசம்செய்துகொண்டு பிரகாசித்தார். பிறகு, பற்

பலபாணவர்ஷங்களைச் சத்துருக்களின்மீது வர்ஷித்தார். மீண்டும், அந்தத் துரௌணியானவர் அத்யந்தம் விசித்திரமாயுள்ளதும் நூறுசந்திரப் பிரதிமையுள்ளதுமான கேடகத்தோடும் ஆகாசநிறமுள்ள அந்தக் கத்தியோடும் அவ்வண்ணம் ஸஞ்சரித்தார். ராஜேந்திரரே! யுத்தத்தில் கெட்டமதங்கொண்டவரான அந்தத் துரௌணியானவர், யானை பெரியமடுவைக் கலக்குவதுபோல அவர்களுடைய சிபிரத்தைக் கலக்கினர்.

அரசரே! அந்தச்சப்தத்தினால் மெய்ம்மறந்தவர்களும் நித்திரையினால் பீடிக்கப்பட்டவர்களும் பயத்தினால் பிளக்கப்பட்டவர்களுமான அந்த யுத்தவீரர்கள் எழுந்திருந்து ஆங்காங்கு ஓடினார்கள். சிலர் விகாரமானகுரலுடன் கூச்சலிட்டார்கள். ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத அனேகவசனங்களை உரைத்தார்கள். சஸ்திரங்களையும் வஸ்திரங்களையும் தரிக்கவில்லை. மற்றவர்கள் அவிழ்ந்திருக்கின்ற தலைமயிரையுடையவர்களாக ஒருவரைஒருவர் அறியவில்லை. சிலர் மேலேபாய்ந்து களைத்துவிழுந்தார்கள். அப்பொழுது, அவ்விடத்தில் பிரமித்தார்கள். சிலர்மலத்தைக்கழித்தார்கள். சிலர் மூத்திரத்தைவிட்டார்கள். ராஜேந்திரரே! வேறுகுதிரைகளும் யானைகளும் கட்டுக்களை அறுத்துக்கொண்டும் அதிகமாகக்குழப்பமடையும்படிசெய்துகொண்டும்ஒரேஸமயத்தில் நாற்பக்கங்களிலும்சுற்றின. அதில்சிலமனிதர்கள் பயந்தவர்களாகிப் பூமியில் பதுங்கினார்கள். அவ்வண்ணமே வீழ்ந்திருக்கின்ற அவர்களை யானைகளும் குதிரைகளும் பொடிசெய்தன. புருஷஶ்ரேஷ்டரே! அது அவ்வண்ணம் இருக்கும்போது ராக்ஷஸர்கள் உத்ஸாஹமுள்ளவர்களாகவும் ஸந்தோஷமுள்ளவர்களாகவும் உரக்கக்கர்ஜித்தார்கள். அரசரே! களிப்படைந்த பூதக்கூட்டங்களால் உண்டுபண்ணப்பட்ட மிக்கபெரிதான அந்தச்சப்தமானது எல்லாத்திசைகளையும் ஆகாயத்தையும் நிரப்பின. மன்னரே! அவர்களுடையதீனஸ்வரத்தைக்கேட்டு அதிகமாகப் பயந்துகொண்டிருக்கிற யானைகளும் குதிரைகளும் கட்டுக்களை அறுத்துக்கொண்டும் பாசறையில்ஜனங்களைத்துகைத்துக்கொண்டும் நான்குபக்கத்திலும்ஓடின. சிபிரத்தில் நாற்புறங்களிலும் ஓடுகின்ற அந்த யானைகளாலும் குதிரைகளாலும் கால்களால் தூற்றிவிடப்பட்டபுழுதியானது, இரவில் அந்தச் சிபிரத்தில் அவர்களுக்கு இரண்டுமடங்கு இருளை உண்டு பண்ணியது. அந்த இருள் உண்டானவுடனே, நாற்புறங்களிலும் ஜனங்கள் மதிமயக்கம்கொண்டார்கள். தந்தைகள் பிள்ளைகளையும் ஸகோதரர்கள் ஸகோதரர்களையும் அறியவில்லை. பாரதரே!

யானையானைகளைத்தாண்டிச்சென்றது. வீரர்களில்லாதகுதிரைகள் குதிரைகளைத் தாக்கின; துகைத்தன; பொடிசெய்தன. அவைகள்ஒன்றோடொன்றுமோதிக்கொண்டும் துகைத்துக்கொண்டும் கீழேவிழுந்தன. அவ்வண்ணமே, மற்றவைகளைக் கீழேவிழும்படிசெய்தன; அப்பொழுது மற்றவைகளைக் கீழேவிழும்படிசெய்து பொடிசெய்தன. அந்தச்சிபிரத்தில் இருளால்மூடப்பட்ட ஜனங்கள் தூக்கமுள்ளவர்களாகவும்புத்தியைஇழந்தவர்களாகவும் காலனாலேயே தூண்டப்பட்டவர்களாகித் தம்மைச்சேர்ந்தவர்களையே கொன்றார்கள். வாயில்காப்பவர்களும் குல்மரக்ஷகர்களும் வாயில்களையும் அவ்வாறே குல்மங்களையும் விட்டுவிட்டு மனநிலைதவறினவர்களாகவும் பயந்தவர்களாகவும் இயன்றவரையில் ஓடினார்கள். பிரபுவே! ஓடுகின்ற அந்த வீரர்கள் தெய்வத்தினால் கெடுக்கப்பட்டமனமுள்ளவர்களாக, 'தந்தையே! மகனே!' என்று அலறிக்கொண்டு ஒருவரை ஒருவர் அறியவில்லை. பிறகு, ஜனங்கள் தங்கள் பந்துக்களை இழந்து திசைகளில் ஓடுகின்ற அந்த வீரர்களுடைய கோத்ரங்களாலும் நாமதேயங்களாலும் ஒருவரையொருவர் அலறிஅழைத்தார்கள்.மற்றவர்கள் 'ஆ! ஆ!' என்றுஅலறிக்கொண்டு பூமியில்படுத்தார்கள். அந்தத்ரோணபுத்ரர் போர்நடுவில் அவர்களைத் தெரிந்து அடித்து நாசம் செய்தார். அந்தச்சிபிரத்தில் அடிக்கடி துன்பம் செய்யப்படுகின்ற மற்ற க்ஷத்திரியர்கள் மனநிலை தவறினவர்களாகவும் பயத்தால் பீடிக்கப்பட்டவர்களாகவும் சிபிரத்தினின்று வெளியில்புறப்பட்டார்கள். பயந்து உயிரைவிரும்பிச் சிபிரத்தினின்று வெளிப்பட்டவர்களான அந்தவீரர்களைக் கிருதவர்மாவும் கிருபரும் வாயிற்படியில்கொன்றார்கள். பூட்டுத்தளர்ந்த கவசமுள்ளவர்களும் அவிழ்ந்ததலைமயிர்களையுடையவர்களும்அஞ்சலிசெய்பவர்களும் பூமியில் துடிப்பவர்களும் பயந்தவர்களுமான அவர்களுள் ஒருவரையாவது விடவில்லை. சிபிரத்தினின்று வெளிப்புறப்பட்ட ஒருமனிதனாவது அவ்விருவரிடத்தினின்றும் விடுபடவில்லை. மஹாராஜரே! அந்தக்கிருபரும் கெட்டபுத்தியுள்ளவனான கிருதவர்மாவும் மறுபடியும் துரோணபுத்திரருக்குப் பிரியத்தைச் செய்யஎண்ணிப் பாசறையில் மூன்றுஇடங்களில் நெருப்பைவைத்தார்கள். மஹாராஜரே! பிறகு, பிரகாசமானபாசறையில் பிதாவை ஆநந்திக்கும்படி செய்பவரான அஸ்வத்தாமா கத்தியையுடையவராக நல்லகைத்தேர்ச்சியுள்ளவர்போல ஸஞ்சரித்தார். உத்தமபிராம்மணர்களுள்சிறந்தவரான அஸ்வத்தாமா எதிரில் வருகின்ற சிலவீரர்களையும் ஓடுகின்றமற்றவர்களையும் கத்தியினால் உயிரை இழக்கும்படி செய்தார். வீர்யசாலியும்

கோபமுள்ளவருமான அந்தத் துரோணபுத்திரர் சில யுத்தவீரர்களைக் கத்தியினால் எள்ளுக்கட்டையைவெட்டுவதுபோல் நடுவில் வெட்டிச் சிதறிவிழும்படி செய்தார். பரதர்களுள் சிறந்தவரே! உரக்கச்சப்திக்கின்றவைகளும் அதிகம் முயலுகின்றவைகளும் கீழேவிழுந்திருக்கின்றவைகளுமான மனிதர்களாலும் குதிரைகளாலும் சிறந்த யானைகளாலும் சிபிரபூமியானது நிறைக்கப்பட்டது. ஆயிரமாயிரமாக மனிதர்கள்கொல்லப்பட்டுக்கீழேவிழவே, அனேகம் தலையில்லாமுண்டங்கள்எழுந்தன; எழுந்து கீழேயும் விழுந்தன. த்ரௌணியானவர், ஆயுதங்களுடன்கூடியவைகளும் தோள்வளையுள்ளவைகளுமான கைகளையும் யானையின் துதிக்கைகளுக்கொப்பானதொடைகளையும் தலைகளையும் கைகளையும் கால்களையும்அறுத்தார். மஹாத்மாவான அந்தத்துரோண புத்திரர் சிலரைப்பின்புறம்வெட்டப்பட்டவர்களாகவும் விலாப்பக்கம் வெட்டப்பட்டவர்களாகவும் தலையறுக்கப்பட்டவர்களாகவும்சிலரைத் திரும்பி ஓடுகிறவர்களாகவும் செய்தார்; வேறு சிலமனிதர்களை இடுப்பில்வெட்டினார்; சிலரைக் காதில்வெட்டினார்; சிலரைத் தோளில் வெட்டினார்; மற்றவர்களுடையதலையைச் சரீரத்தில்திணித்தார்.

அவர் இவ்வண்ணம் பற்பலசஸ்திரங்களால் அதிகபலசாலிகளை ஸம்ஹாரம்செய்யும் ஸமயத்தில்,இருளால்கோரமானஇரவானதுபயங்கரமான காட்சியுடன்விளங்கியது. பூமியானது குற்றுயிராயுள்ள மனிதர்களாலும் ஆயிரமாயிரமாகக்கொல்லப்பட்டிருக்கின்றமற்றவைகளாலும் அனேககுதிரைகளாலும்யானைகளாலும் பயங்கரமானகாட்சியுள்ளதாகியது. யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் வியாபிக்கப்பட்டதும் ரதங்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் பயங்கரமாயிருப்பதுமான யுத்தபூமியில் கோபம்மிக்க துரோணபுத்திரரால்வெட்டப்பட்ட பிராணிகள் வீழ்ந்தன. சிலர் பிராதாக்களையும் சிலர் பிதாக்களையும் மற்றவர்கள் புத்திரர்களையும் அலறிஅழைத்தார்கள். சிலர், 'தூங்கிக்கொண்டிருந்தநம்விஷயத்தில் குரூரமானசெய்கைகளுள்ள ராக்ஷஸர்களால்செய்யப்பட்ட இந்தக்கார்யம் கோபம்கொண்டதார்த்தராஷ்டிரர்களாலும் யுத்தத்தில் செய்யப்பட்டதில்லை. பாண்டவர்கள் அருகிலில்லாமையால் உங்களுக்கு இப்படிப்பட்டஆபத்து உண்டுபண்ணப்பட்டது' என்றுசொன்னார்கள். 'ஜனார்த்தனரை ஸாரதியாகக்கொண்ட குந்தீபுத்திரன் அஸுரர்களாலும் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் வெல்லக்கூடியவனல்லன்.குந்தீபுத்திரனை தனஞ்சயன் பிராம்மணர்களிடத்தில் பிரீதியுள்ளவன்; ஸத்தியமான வாக்குள்ளவன்; அடக்கமுள்ளவன்; எல்லாப்பிராணிகளிடங்களிலும்

தனையபாராட்டுகிறவன்; உறங்குகிறவனையும் அஜாக்கிரதையாயிருப்பவனையும் சஸ்திரங்களைக்கீழேவைத்தவனையும் அஞ்சலிசெய்தவனையும் ஓடுகின்றவனையும் அவிழ்ந்ததலைமயிரையுடையவனையும் கொல்லமாட்டான். 'க்ரூரமானசெய்கைகளுள்ள ராக்ஷஸர்களால் அப்படிப்பட்ட இந்தக்கோரமானகாரியம் நமக்குச்செய்யப்பட்டது' என்று அடிக்கடி பிரலாபித்துக்கொண்டு அனேக ஜனங்கள் படுத்தார்கள். பிறகு, அலறுகின்ற மனிதர்கள் விளங்காமற்கதறுகின்ற மற்றஜந்துக்கள் இவர்களின் நெருங்கிய அந்தப் பேரொலியானது ஒருமுகூர்த்தகாலத்தில் ஓய்ந்தது. மன்னரே! ரத்தத்தினால் நன்றாகநனைக்கப்பட்டபூமியில் கோரமாயும்நெருக்கமாயும் தோன்றியிருந்த அந்தப்புழுதியானது க்ஷணத்தினுள் மறைந்தது. க்ரோதமுள்ளவரான அந்த அஸ்வத்தாமா அசைவுற்றவர்களும் அதிக பயமடைந்தவர்களும் உத்ஸாஹத்தை இழந்தவர்களுமான ஆயிரக்கணக்கானமனிதர்களைப் பசுபதி பசுக்களைத் தள்ளுவதுபோலக் கீழே தள்ளினார். த்ரோணபுத்திரர், உயிரோடு ஒருவரைஒருவர்கட்டிக்கொண்டு படுத்திருப்பவர்களும் மற்றும் நன்றாகப்பதுங்கிக்கொண்டிருப்பவர்களும் யுத்தம்செய்கின்றவர்களுமான எல்லாவீரர்களையும் நாசம்செய்தார். அந்தவீரர்கள் நெருப்பினால் எரிக்கப்படுகின்றவர்களும் அந்தத் த்ரௌணியினால் கொல்லப்படுகின்றவர்களும் ஆனார்கள். ஒருவரோடொருவர் போர்புரிகின்றவீரர்களை அப்பொழுது த்ரௌணியானவர் யமலோகத்துக்கு அனுப்பினார். ராஜேந்திரரே! த்ரோணபுத்திரர் அந்தஇரவின் நடுவில் பாண்டவர்களுடையபெரும்படையை யமலோகத்துக்கனுப்பினார். மனிதர்களுக்கும் யானைகளுக்கும் குதிரைகளுக்கும் நாசத்தை உண்டுபண்ணுகிறதும் மிக்கபயங்கரமாயிருக்கின்றதுமான அந்தராத்திரியானது இரவில் ஸஞ்சரிக்கின்றபிராணிகளுக்கு ஸந்தோஷத்தை விருத்திசெய்கின்றதாகியது. அந்தஇடத்தில் ராக்ஷஸர்கள் காணப்பட்டார்கள். நரமாம்ஸங்களைக் கடித்துத் தின்னுகின்றவைகளும் ரத்தங்களைக்குடிக்கின்றவைகளும் கோரப்பற்களுள்ளவைகளும் மஞ்சள்நிறமுள்ளவைகளும் ரௌத்ரமானரூபத்துடன்கூடியவைகளும் மலைபோன்ற தந்தமுள்ளவைகளும் புழுதியடர்ந்தவைகளும் சடையுள்ளவைகளும் பயங்கரமானமுகமுள்ளவைகளும் ஐந்துகால்களையுடையவைகளும் பருத்தவயிற்றையுடையவைகளும் பின்புறத்தில்விரல்களையுடையவைகளும் க்ரூரஸ்வபாவமுள்ளவைகளும் விகாரமானரூபமுள்ளவைகளும்பயங்கரமானசத்தமுள்ளவைகளும் யானைமுகமுள்ளவைகளும்குட்டைவடிவமுள்ளவைகளும்கறுத்தநிறமுள்ளவைகளும்

மிகப்பயங்கரமாகஇருப்பவைகளும் புத்திரர்களுடனும் மனைவிகளுடனும்கூடியவைகளும் மிக்ககொடுந்தன்மையுள்ளவைகளும் பார்க்க முடியாதவைகளும் சிறிதும்தயையற்றவைகளும் பற்பலவிதமாயிருப்பவைகளுமாகப் பிசாசங்களும் காணப்பட்டன. அந்தஇடத்தில் ராக்ஷஸர்களுடைய பற்பலரூபங்கள் காணப்பட்டன. இறைச்சிதின்னும் மற்றவைகள் கூட்டம்கூட்டமாக ரக்தத்தைக்குடித்துக் களிப்படைந்தவைகளாகக் கூத்தாடின. 'இது சிறந்தது; இது பரிசுத்தமானது; இது ருசியுள்ளது' என்றும்உரைத்தன. ராக்ஷஸர்கள் கொழுப்பு, மஜ்ஜை, எலும்பு, ரக்தம், மாம்ஸம்இவைகளால் நன்கு திருப்திசெய்விக்கப்பட்டார்கள். மாம்ஸத்தினால் ஜீவிக்கின்றமற்றராக்ஷஸர்கள் மாம்ஸங்களைக்கடித்துத்தின்றனர். பருத்தவயிறுள்ளவர்களும் பற்பலவாயுள்ளவர்களும் அவ்வாறே ரௌத்ராகாரமுள்ளவர்களும் மாம்ஸங்களைச்சாப்பிடுகின்றவர்களுமான வேறுசிலராக்ஷஸர்கள் ஊனீர்களைக் குடித்துவிட்டு நான்குபக்கங்களிலும்ஓடினார்கள். அந்தச்சிபிரத்தில் கோரரூபமுள்ளவர்களும் பருத்தவர்களும் குரூரமானசெய்கையுள்ளவர்களுமான ராக்ஷஸர்கள் பதினாயிரக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் அர்ப்புதக்கணக்காகவும் இருந்தார்கள். ஜநாதிபரே! பெரிதான அந்தயுத்தத்தில் ஸந்தோஷமுள்ளவைகளும் மிக்க திருப்தியடைந்தவைகளுமான அனேகபூதங்கள் ஒன்றுசேர்ந்தவைகளாயின. நன்றாக உறங்கினவர்களும் ஜாக்கிரதை இல்லாதவர்களுமான ஸோமகர்களைச் சேர்ந்த ஜனங்களுக்கு அழிவை உண்டுபண்ணுகின்ற அந்தராத்திரியானது இவ்விதமாக மிக்க பயங்கரமாயிற்று. நம்முடையஜனங்களுக்கு அழிவைஉண்டுபண்ணின அப்படிப்பட்ட சூரர்களும் கொல்லப்பட்டமையால் காலத்தினுடைய மகிமை தாண்டமுடியாதது; இதில் ஸம்சயமில்லை" என்று சொன்னான்.

திருதராஷ்டிரன், "என் புத்திரனுடைய வெற்றியில் ஊக்கமுள்ளவரும் மஹாரதருமான அஶ்வத்தாமா இப்படிப்பட்ட மிகவும் பெரிதான இந்தக் கார்யத்தை யாதுகாரணத்தினால் முந்தியே செய்யவில்லை? மஹாத்மாவான அந்தத் துரோணபுத்திரர் யாது காரணத்தினால் க்ஷத்திரியர்கள் கொல்லப்பட்ட பிறகு, இந்தக் கார்யத்தைச் செய்தார்? அதனை நீ எனக்குச் சொல்லக்கடவாய்" என்றுவினவ, ஸஞ்சயன் சொல்லலானான். "குருநந்தனரே! அந்த த்ரௌணியானவர் அந்தப்பாண்டவர்களிடத்திலுள்ள, பயத்தினால் (இக்காரியத்தைச்) செய்யவில்லை; இது நிச்சயம். பார்த்தர்கள், புத்திமானான கேசவர், ஸாத்யகி இவர்கள் அருகிலில்லாமையாலன்றோ இந்தக் காரியம்

துரோணபுத்திரரால் செய்யப்பட்டது? தேவராஜனை இந்திரனு யிருந்தாலும் அவர்களுடைய முன்னிலையில் எவன் அவர்களைக் கொல்வான்? அரசரே! பிரபுவே! தூங்கிக்கொண்டிருந்த ஜனங் களிடம் இந்தக்காரியம் இவ்விதமாக நடந்தது. அந்த அஸ்வத்தாமா இவ்விதமாகப் பாண்டவர்களுடைய ஜனங்களுக்குப் பெரிய நாசத்தை உண்டுபண்ணிவிட்டு விடியற்காலையில் பாசறையினின்று திரும்பிவர விரும்பினுர். பிரபுவே! மனுஷ்யாத்தத்தினல் நன்கு நனைக்கப் பட்ட துரோணபுத்திரருடைய கத்திப்பிடியானது அவருடைய கை யோடு சேர்ந்து ஒன்றுபட்டதுபோலாயிற்று. அந்தத்துரௌணி யானவர் அக்னியானது யுகாந்தகாலத்தில் எல்லாப் பிராணிகளையும் சாம்பலாகச்செய்து ஓய்வதுபோலச் சத்துருக்களை மிச்சமில்லாமல் செய்து விடியற்காலத்தில் ஓய்ந்தார். பிரபுவே! துரோணபுத்திரர் பிரதிஜ்ஞை செய்தவண்ணம் அந்தக்கார்யத்தைச்செய்து ஒருவரா லும் செல்லமுடியாத வழியை அடைந்து சென்று பிதாவின் விஷயத் தில் மனக்கவலையற்றவரானுர். புருஷச்ரேஷ்டரான அஸ்வத்தாமா, நன்ருக நித்திரைசெய்துகொண்டிருந்த ஜனங்களுள்ள பாசறையில் இரவில் நுழைந்ததுபோலவே (அங்கிருந்தவர்களைக்) கொன்று சப்த மின்றி வெளியில் வந்துவிட்டார். பிரபுவே! வீர்யமுள்ள அஸ்வத் தாமா அந்தச் சிபிரத்தினின்று வெளியில்வந்து கிருபர் கிருதவர்மா இவ்விருவர்களோடும் சேர்ந்து ஸந்தோஷமுள்ளவராக அவ்விருவரை யும் மகிழ்வித்துக்கொண்டு அந்த எல்லாச் செய்கையையும் சொன் னுர். அப்பொழுது, பிரியத்தைச் செய்கின்றவர்களான அவ்விரு வரும், 'ஆயிரம் ஆயிரமாகப் பாஞ்சாலர்களும் ஸ்ருஞ்சயர்களும் வெட்டப்பட்டார்கள்' என்கிற பிரியவசனத்தை அவரிடத்தில் சொன்னுர்கள். மஹாரதர்களான அம்மூவரும் பிரீதியுடன் உரக்க ஆரவாரம்செய்தார்கள்; அவ்வண்ணமே, கைகளையும் கொட்டினுர் கள். ஒருவரோடொருவர் சேர்ந்து, 'பாக்யம், பாக்யம்' என்று பேசிக்கொண்டார்கள். பிறகு, அவ்விருவர்களாலும் நன்கு கொண் டாடப்பட்ட அஸ்வத்தாமா அவ்விருவரையும் கட்டியணைத்தார். ஸந்தோஷத்தினுலே அதிக மஹிமைபொருந்தின உத்தமமான இந்த வாக்கியத்தை உரைக்கலானுர். 'என்னல் எல்லாப்பாஞ்சாலர்களும் எல்லா த்ரௌபதீபுத்ரர்களும் ஸோமகர்களும் மிகுந்திருந்த எல்லா மாத்ஸ்யர்களும் கொல்லப்பட்டார்கள். இப்பொழுது நாம் கிருத கிருத்யர்களாகுேம். (அரசனிருக்கும்) இடத்திற்கே காலதாமத மின்றிச் செல்வோம். நம்முடைய அரசன் உயிருடனிருப்பானுகில் அவனுக்குப் பிரியத்தைச்சொல்வோம்' என்று கூறினர்.

---

## ஒன்பதாவது அத்யாயம்.

## ஸெளப்திக பர்வம். (தொடர்ச்சி.)

(அஸ்வத்தாமா முதலியோர் துரியோதனனிடம்வந்து துக்கித்ததும், அஸ்வத்தாமா தாம் உறங்கினவர்களைக் கொன்றதைத் துரியோதனனுக்குச் சொல்லியதும், துரியோதனன் உயிர் விட்டதும், அஸ்வத்தாமாமுதலியோர் நகரஞ்சென்றதும், ஸஞ்சயனுக்குத் திவ்யஞானம் போய் விட்டதும்.)

அந்த அஸ்வத்தாமாமுதலானமூவரும், எல்லாப்பாஞ்சாலர்களையும் திரௌபதீபுத்திரர்களனைவரையும் கொன்று துர்யோதனன் அடிக்கப்பட்டவிடம் சென்றார்கள். சென்று, குற்றுயிராயிருக்கும் அரசனைக்கண்டார்கள். பிறகு, ரதங்களினின்று இறங்கி உம்முடைய புத்திரனைச் சூழ்ந்துகொண்டார்கள். ராஜேந்திரரே! தொடைகள் முறிந்தவனும் துன்பப்படும்பிராணனுடன்கூடியவனும் பிரஜ்ஞையை இழந்தவனும் வாயினின்று இரத்தத்தைக்கக்குகின்றவனுமான அந்தத் துரியோதனனை யுத்தபூமியில் கண்டார்கள். கோரமான காட்சியுள்ள அனேக துஷ்டமிருகங்களாலும் தின்னப்போகிற ஓநாய்க் கூட்டங்களாலும் நாற்பக்கத்திலும் ஸமீபத்தில் சூழப்பட்டவனும் கடித்துத்தின்னவிரும்பும் அந்தக்கொடிய மிருகங்களைக் கஷ்டத்தினால் தடுப்பவனும் * (பூமியில்) புரண்டுகொண்டிருப்பவனும் மிக்க வேதனையை அனுபவிக்கின்றவனும் இரத்தத்தினால் நனைக்கப்பட்டுப் பூமியில் அவ்வாறு படுத்திருப்பவனுமான அந்தத்துரியோதனனைக் கண்டு, மாண்டவர்கள்போக மிகுந்திருக்கின்ற அஸ்வத்தாமா, கிருபர், ஸாத்வதனான கிருதவர்மா இந்த மூன்றுவீரர்களும் சோகத்தினால் வருத்தமுற்றுப் புலம்பினார்கள். ரத்தத்தினால் எல்லாப்பக்கத்திலும் பூசப்பட்டவர்களும் பெருமூச்சு விடுகின்றவர்களுமான அந்தமூன்று மஹாரதர்களாலும் சூழப்பட்ட அந்த அரசன் மூன்று அக்னிகளால் யாகவேதி விளங்குவதுபோல விளங்கினான். பிறகு, அம்மூவரும் அவ்விதநிலைமையை அடைவதற்குத் தகாதவனும் படுத்திருப்பவனுமான அந்த அரசனைப் பார்த்து ஸஹிக்கமுடியாத துக்கத்தினால் ரோதனம் செய்தார்கள்.

பிறகு, கிருபர் யுத்தபூமியில் படுத்திருக்கிற அந்தஅரசனுடைய வாயினின்று (பெருகும்) ரக்தத்தைக் கைகளால் துடைத்து மிகப்

---

* வேறுபாடம்.

புலம்பலானார். 'பதினோர் அக்ஷௌஹிணிகளுக்கு நாதனான இந்தத்துர்யோதனன் கொல்லப்பட்டும் ரக்தத்தினால் நனைக்கப்பட்டும் படுத்திருக்கிறான். தெய்வத்துக்கு அதிகப்பொறுப்பு இல்லையே! பிரியமான கதாயுதத்தையுடையவனும் பொன்போற் பிரகாசிக்கின்றவனுமான மஹாராஜனுடைய' ஸ்வர்ணத்தினால் அலங்கரிக்கப்பட்டுள்ளதும் ஸமீபத்தில் விழுந்திருப்பதுமான இந்தக் கதையைப்பார். இந்தக்கதையானது ஒவ்வொருயுத்தத்திலும் இந்தச்சூரனை விடுகிறதில்லை. ஸ்வர்க்கத்தைக்குறித்துச் சென்றாலும் புகழுள்ளவனை இந்தஅரசனை விடுவதாயில்லை. அரண்மனையில் பிரீதியுள்ளமனைவியைப்போல் இந்தவீரனோடுகூடப் படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கிறதும் ஸ்வர்ணத்தினாலலங்கரிக்கப்பட்டதுமான இந்தக்கதாயுதத்தைப் பார். சத்துருக்களைத் நாசிக்கச்செய்பவனும் முடிசூடினமன்னர்களுக்கு முந்திச்செல்பவனுமான இந்தஅரசன், கொல்லப்பட்டுப் புழுதிகளைக் கௌவிக்கொண்டிருக்கிறான். காலவேறுபாட்டைப்பார்த்தாயோ? எவனால் யுத்தத்தில்கொல்லப்பட்ட க்ஷத்திரியஶ்ரேஷ்டர்கள் பூமியில் படுக்கிறார்களோ அப்படிப்பட்ட இந்தக்குருராஜன் பகைவர்களால்கொல்லப்பட்டுப் பூமியில் படுத்திருக்கிறான். நூற்றுக்கணக்கான அரசர்கூட்டங்கள்' பயத்தினால் எவனைவணங்குகின்றனவோ அவன் புலால்தின்னும் பிராணிகளால் சூழப்பட்டவனாக வீரசயனத்தில் படுத்திருக்கிறான். எந்த அரசனை அரசர்கள் தனத்திற்காக முன்பு உபாஸித்தார்களோ அவனை இப்பொழுது மாம்ஸத்தில்ஆசையுள்ளராக்ஷஸர்கள் உபாஸிக்கின்றார்கள்' என்றார்.

பிறகு,படுத்திருப்பவனும்கௌரவர்களுள்சிறந்தவனும் பரதவம்சத்திலுதித்தவர்களுள் மிக்க மேன்மைபெற்றவனுமான அந்தத் துர்யோதனனை அஶ்வத்தாமா நன்றாகக் கட்டிக்கொண்டு தீனமாக அழுதார். 'ராஜஶ்ரேஷ்டனே! உன்னை எல்லா வில்லாளிகளுள்ளும் சிறந்தவனென்றும் யுத்தத்தில் குபேரனுக்கொப்பானவனென்றும் பலராமருக்குச் சிஷ்யனென்றும் சொல்லுகிறார்கள். தோஷமற்றவனே!, மனிதர்களைக்காப்பவனே! சமையல் செய்கிறவனும் பாபபுத்தியுள்ளவனுமான பீமஸேனன் பலசாலியும் எப்பொழுதும் ஸமர்த்தனுமான உனக்குக் கெடுதியை விளைவிக்கக்கூடிய ஸமயத்தை எவ்வாறு கண்டான்? மகாராஜனே! யுத்தத்தில் பீமஸேனனால் நீயே கொல்லப்பட்டிருக்கின்றதைப் பார்க்கிறோமாதலால், இவ்வுலகில் காலம் நிச்சயமாக மிக்கபலமுள்ளது. அல்பனும் பாபியும் மந்தனுமான விருகோதரன் எல்லாத்தர்மங்களையும் அறிந்தவுன்னைக் கபடத்

தால் எவ்வாறு கொன்றான்? நிச்சயமாகக் காலம் எவ்விதத்தாலும் தாண்டமுடியாதது. யுத்தத்தில் பராக்கிரமத்தால்அழைத்து த்வந்த்வ யுத்தத்தில் பீமஸேனனால் கதாயுதத்தால் முறைதவறாக உன்னுடையஇருதொடைகளும்நொறுக்கப்பட்டன. அதர்மத்தால்யுத்தத்தில் கொல்லப்பட்டிருக்கின்ற உன்னுடையதலையைக் காலால் உதைக்கும் பொழுது,உபேக்ஷையாயிருந்த அல்பனானயுதிஷ்டிரனை நிந்திக்கவேண்டும். பிராணிகளுள்ளவரையில் யுத்தவீரர்கள் யுத்தங்களில்நிச்சயமாக விருகோதரனை நிந்திக்கப்போகின்றனர். கபடத்தாலன்றோநீ வீழ்த்தப் பட்டாய்? அரசனே! யதுநந்தனரும் வீர்யமுள்ளவருமான பலராமர், 'கதையில் துர்யோதனனுக்குச்சமானன் இல்லை' என்று உன்னைப் பற்றி எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருந்தார். வேந்தே! பாரத! பிரபுவே! விருஷ்ணிகுலத்திலுதித்த பலராமர், 'கதாயுத்தத்தில் என்னுடையசிஷ்யன் அந்தக்குருகுலத்தில்உதித்த துர்யோதனன்'என்று ஸபைகளில் உன்னைப் புகழ்கிறானன்றோ? பரமரிஷிகள் யுத்தத்தில் எதிர்த்துநின்று கொல்லப்பட்ட க்ஷத்திரியனுக்குச் சிறந்ததென்று சொல்லுகிறகதியை நீ அடைந்தவனாகிறாய். துர்யோதனா! புருஷ ஶ்ரேஷ்டனே! நான் உன்னைப்பற்றித் துக்கிக்கவில்லை. புத்திரர்களைப் பறிகொடுத்த உன்னுடைய தாய்தந்தைகளைப்பற்றியே வியஸனப்படுகிறேன். வீரனே! நாதனான உன்னால் போஷிக்கப்பட்ட அவ்விருவரும் அநாதர்களாகச் செய்யப்பட்டார்கள். அவ்விருவரும் பிக்ஷுகர்களாக இப்பூமியில்துக்கித்துக்கொண்டு ஸஞ்சரிக்கப்போகிறார்கள். தர்மத்தை அறிந்தவர்களாக எண்ணிக்கொண்டிருக்கின்றவர்களும் கொல்லப்படுகின்றஉன்னை உபேக்ஷித்தவர்களுமான அந்த விருஷ்ணிகுலத்தில் உதித்த கிருஷ்ணனையும் துர்புத்தியுள்ள அர்ஜுனனையும் நிந்திக்க வேண்டும். மனிதர்களுக்குத்தலைவனே! அந்த எல்லாப்பாண்டவர்களும் வெட்கமில்லாதவர்களாக, 'நம்மால் இவ்வாறு துர்யோதனன் கொல்லப்பட்டான்?' என்று எதைச்சொல்லப்போகிறார்கள்? காந்தாரி நந்தனா! புருஷஶ்ரேஷ்டா! நீ தர்மத்தால் பகைவர்களைஎதிர்த்துச்சென்று யுத்தத்தில் கொல்லப்பட்டாயாதலால் நீ பாக்கியசாலியாயிருக்கிறாய். புத்திரர்களை இழந்தவளும் ஞாதிகளும் பந்துக்களும் கொல்லப்பட்டவளுமான காந்தாரியும் அவமதிக்கமுடியாதவனும் கண்ணில்லாதவனுமான திருதராஷ்டிரனும் எந்த நிலைமையை அடையப்போகிறார்களோ? அரசனான உன்னை முன்னிட்டுக்கொண்டு ஸ்வர்க்கத்தை அடையாமலிருந்துவிட்ட க்ருதவர்மா, நான்,மகாரதரானகிருபர் ஆகிய நாங்கள் நிந்திக்கத்தக்கவர்கள். எல்லா அபீஷ்

டுங்களையும் கொடுப்பவனும் காப்பாற்றுகிறவனும் பிரஜைகளுக்கு நன்மையைச்செய்கின்றவனுமான உன்னை நாங்கள் பின்தொடராமலிருத்தலால் ஈராதமர்களானஎங்களை நிந்திக்கவேண்டும். ஆண்மையிற்சிறந்தவனே! உன்னுடையவீர்யத்தாலே, க்ருபர், நான், என்பிதா ஆகிய எங்களுடையவீடுகள் வேலைக்காரர்களாலும் ரத்தினங்களாலும் நிறைக்கப்பட்டன. உன்னுடைய தயையினால்மித்திரர்களுடனும் பந்துக்களுடனும் கூடிய எங்களால் மிகுதியான தக்ஷிணைகளுடன் கூடிய முக்கியமான அனேகயாகங்கள்செய்யப்பட்டன. நீ எல்லா அரசர்களையும் முன்னிட்டுக்கொண்டுசென்ற இப்படிப்பட்டவழியில்பாவிகளான நாங்கள் எவ்விதம் பிரவிர்த்திப்போம்? அரசனே! உத்தமகதியைக்குறித்துச்செல்லுகின்ற உன்னை நாங்கள் மூவரும்மாத்திரம் அனுஸரிக்காமலிருப்பதனால், நாங்கள் தாபத்தை அடையப்போகிறோம். ஆதலால், நீ செய்த நல்லகார்யத்தை நினைக்கின்றவர்களும் பிரயோஜனங்களை இழந்தவர்களும் ஸ்வர்க்கத்தை இழந்தவர்களுமாகிறோம். உன்னை நாங்கள் அனுஸரித்துச்செல்லாமலிருக்கும்படி செய்தவினை ஏதாயிருக்கலாம்? கௌரவர்களுள் சிறந்தவனே! நிச்சயமாக இந்தப்பூமியில் துக்கத்துடன் ஸஞ்சரிக்கப்போகிறோம். அரசே! உன்னால் விடுபட்டிருக்கிற எங்களுக்கு ஸுகம்ஏது? மஹாராஜனே! (ஸ்வர்க்கத்தை) அடைந்தவுடனே, மஹாரதர்களிடம் சென்று (அவர்களை) என்னுடைய வசனத்தினால் பிராயமுறைப்படியும், தகுதிமுறைப்படியும் பூஜிப்பாயாக., நராதிபனே! எல்லா வில்லாளிகளுக்கும் த்வஜம்போன்ற ஆசார்யரைப்பூஜைசெய்து, என்னால் இன்று த்ருஷ்டத்யும்னன் கொல்லப்பட்டானென்பதைச் சொல்வாயாக. சிறந்த மஹாரதனும் அரசனுமான பாஹ்லீகனையும் ஸிந்துராஜனையும் ஸோமதத்தனையும் பூரிச்ரவஸையும் கட்டிக்கொள். அவ்வாறே, ஸ்வர்க்கத்தில் முந்தியேயிருக்கின்ற வேறு சிறந்த மன்னர்களையும் கட்டிக்கொண்டு நாங்கள் சொன்னதாக க்ஷேமம் விசாரிப்பாயாக' என்றார். தொடைமுறிந்தவனும் பிரஜ்ஞையையிழந்தவனும் குற்றுயிராயிருப்பவனுமான அரசனைப் பார்த்து அச்வத்தாமா இவ்வாறு சொல்லி மறுபடியும் உரைக்கலானார். 'துரியோதன! உயிரோடிருக்கிறாயானால் காதுகளுக்கின்பமான வாக்கியத்தைக்கேள். பாண்டவர்களில் ஏழுபேர் மிகுந்தார்கள். தார்த்தராஷ்டிரர்களுடைய கக்ஷியில் நாங்கள் மூன்றுபேர்கள் மிகுந்தோம். அவர்கள்: ஐந்துபிராதாக்களும், வாஸுதேவனும், ஸாத்யகியும்; அவ்வாறே நானும், கிருதவர்மாவும்,சாரத்வதரான கிருபருமே. பாரத!

த்ரௌபதிபுத்திரர்களனைவரும் திருஷ்டத்யும்னனுடையபிள்ளைகளும் எல்லாப்பாஞ்சாலர்களும் கொல்லப்பட்டார்கள். மிகுதியுள்ள மாத்ஸ்யர்களும் கொல்லப்பட்டார்கள். செய்ததற்குப்பிரதிசெய்ததைப் பார். பாண்டவர்கள் புத்ரர்கள் கொல்லப்பட்டவராயினரன்றோ? தூங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில் மனிதர்களுடனும் வாகனங்களுடனும் கூடின அந்தப்பாண்டவர்களுடைய பாசறையானது நாசம்செய்யப்பட்டது. அரசே! இரவில் பாசறையில் நுழைந்து பாபகர்மமுள்ள அந்தத்திருஷ்டத்யும்னன் பசு கொல்லப்படுவது போல என்னால் கொல்லப்பட்டான்' என்றார்.

துர்யோதனனோ, மனத்துக்குப்பிரியமான அந்த வார்த்தையைக் கேட்டு மீண்டும் பிரஜ்ஞையை அடைந்து இந்தவசனத்தை உரைக்கலானான். 'கிருபருடனும் கிருதவர்மாவுடனுங்கூடினஉம்மால் எனக்கு இப்பொழுது செய்யப்பட்டதுபோன்ற காரியம், பீஷ்மராலும் கர்ணனாலும் உம்முடைய பிதாவினாலும் எனக்குச் செய்யப்படவில்லை. அல்பனான அந்த ஸேனாபதியும் சிகண்டியுடன் கொல்லப்பட்டான். அதனால், நான் என்னை இன்று இந்திரனுக்கு ஸமானனாக நினைக்கிறேன். க்ஷேமத்தை அடையுங்கள். உங்களுக்கு மங்களம். ஸ்வர்க்கத்தில் நமக்கு மறுபடியும் சேர்க்கை' என்றான்.

உதாரமான மனமுள்ளவனும் குருராஜனும் வீரனுமான உம்முடைய புத்திரன் இவ்வாறு சொல்லிவிட்டு நண்பர்களுக்குத் துக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டு உயிர் துறந்தான்; புண்யமானஸ்வர்க்கத்தை அடைந்தான். சரீரமானது பூமியில் விழுந்தது. அரசரே! இவ்வாறு உம்முடையபுத்திரனான துர்யோதனன் நாசமடைந்தான். சூரனானஅவன் யுத்தத்தில் முந்திச் சென்று பிறகு பகைவர்களால் கொல்லப்பட்டான். அந்த மூன்றுவீரர்களும் கட்டிக்கொள்ளப்பட்டார்கள். அவ்வாறே, அவர்களும் அரசனைக்கட்டிக் கொண்டு மறுபடியும் மறுபடியும் பார்த்துக்கொண்டே தம்ரதங்களில் ஏறினார்கள். துரோணபுத்திரருடைய இவ்வித தீனமான வாக்கைக்கேட்டுச் சோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களாக விடியுற்காலத்தில் நகரத்தைக்குறித்து விரைவாகச் சென்றார்கள். வேந்தரே! உம்முடைய துராலோசனையினால் குருபாண்டவசேனைகள் இரண்டிற்கும் இவ்வண்ணம் கோரமும் பயங்கரமும் துன்பத்தைச்செய்வதுமான இந்தக்ஷயம் நேர்ந்தது. தோஷமற்றவரே! உம்முடையபுத்திரன் ஸ்வர்க்கத்தை அடைந்தவுடனே, சோகத்தினால் பீடிக்கப்பட்ட எனக்கு ரிஷியினால்கொடுக்கப்பட்டிருந்த அந்த திவ்யதிருஷ்டியா

னது இப்பொழுது நாசமடைந்தது" என்றுகூறினான். அப்பொழுது, அந்தஅரசன், இவ்வாறான ஞாதிகள்புத்திரர்கள் இவர்களின் வதத்தைக் கேட்டுத் தீர்க்கமாயும் உஷ்ணமாயும் மூச்சுவிட்டுக்கொண்டு, பிறகு, மனக்கவலையுற்றவனானான்.

ஸௌப்திகபர்வம் முற்றிற்று.

## பத்தாவது அத்யாயம்.

## ஐஷீகபர்வம்.

(தெய்வபலத்தினால் தப்பிப்பிழைத்த திருஷ்டத்யும்னனின்ஸாரதி யுதிஷ்டிரருக்கு இரவில் பாசறையில்நடந்தவற்றைத்தெரிவித்ததும், யுதிஷ்டிரர் துரௌபதியை அழைத்துவரத்தக்க நகுலனை அனுப்பிப் பாசறைக்குவந்து தம்மவர்கள் மாண்டுகிடப்பதைப் பார்த்துப் புலம்பியதும்.)

அந்த இரவுகழிந்தவுடன், திருஷ்டத்யும்னனுடைய ஸாரதியானவன் சென்று, உறங்கிக்கொண்டிருக்குந்தருணத்தில் செய்யப்பட்ட வதத்தைப் பாண்டவர்களுக்கு உரைத்தான். அவன், 'அரசரே! இரவில் தங்களுடையசிபிரத்தில் பயமற்றவர்களாகவும் ஜாக்கிரதையில்லாதவர்களாகவும் நித்திரைசெய்துகொண்டிருந்த திரௌபதிபுத்திரர்களும் துருபதராஜருடைய புத்திரர்களும் கொல்லப்பட்டார்கள். கொலைகாரனான கிருபனாலும் போஜவம்சத்திலுதித்த கிருதவர்மாவினாலும் பாவியான அச்வத்தாமாவினாலும் உங்களுடைய பாசறை இரவில் நாசம்செய்யப்பட்டது! ஈட்டிகளாலும் சக்திகளாலும் கோடாலிகளாலும் ஆயிரக்கணக்கான மனிதர்களையும் யானைகளையும் குதிரைகளையும் வெட்டினவர்களான இந்தவீரர்களால் பாசறை மிச்சமில்லாததாகச்செய்யப்பட்டது. பார்த்தரே! கூச்சலிடுகின்ற பற்பல பக்ஷிகளாலும் பழங்களுடைய பாரங்களாலும் தணிந்திருக்கின்றதும் கோடாலிகளால் வெட்டப்படுகின்றதுமான பெரியகாட்டினுடைய சப்தம்போல உமதுசேனையினுடைய மிகவும்பெரிதான சப்தம் கேட்கப்பட்டது. வேந்தரே! அந்தச்சைனியத்தினின்று மிருந்தவன் நானொருவனே. தர்மாத்மாவே! பரபரப்புள்ளவனான கிருதவர்மாவினிடத்தினின்று அதிகப்பிரயாஸத்தினால் விடப்பட்டேன்' என்று கூறினான். தர்மாத்மாவும் குந்திபுத்திரருமான யுதிஷ்டிரர் அமங்களமான அந்தவாக்கியத்தைக்கேட்டுப் புத்திரசோகத்தினால் தைர்ய

நிலையை இழந்து பூமியில்விழுந்தார். விழுகின்ற அந்த யுதிஷ்டிரரை ஸாத்யகியானவன் விரைவாகச்சென்று பிடித்துக்கொண்டான். பீமஸேனனும் அர்ஜுனனும் மாத்ரீகுமாரர்களான நகுலஸஹதேவர்களும் பிடித்துக்கொண்டார்கள். பிரஜ்ஞையை அடைந்தவரான யுதிஷ்டிரர் சத்துருக்களை ஜயித்துப். பின்பு (தாம்) ஜயிக்கப்பட்டவராகச் சோகத்தினால் தடுமாற்றமுற்ற வாக்குடன் தீனன்போலப் புலம்பினார். அர்த்தங்கள் கர்மாக்கள் தெய்வம் இவற்றின்கதியானது அறிய முடியாதது. ஜயிக்கப்படுகிறவர்கள் ஜயிப்பதனாலும் ஜயிக்கின்றவர்களானநாமும் ஜயிக்கப்பட்டதனாலும் அர்த்தங்களுடைய கதியானது ஞானக்கண்களாலும் அறியமுடியாதது. பிராதாக்களையும் தோழர்களையும் பித்ருக்களையும் புத்திரர்களையும் ஸுஹ்ருத்துக்களுடைய கூட்டங்களையும்கொன்று பந்துக்களும் மந்திரிகளும் பேரன்மார்களும் ஆகிய எல்லோரையும்ஜயித்து நாம் ஜயிக்கப்பட்டோம். அநர்த்தம் அர்த்தம்போன்றதாயிருக்கிறது. * அனர்த்தம் அர்த்தமாகக் காணப்படுகிறது. இந்தஜயம் அபஜயரூபமாயிருக்கிறது. ஆதலால், ஜயம் அபஜயமே. கெட்டபுத்தியையுடைய எந்தமனிதன் ஜயித்துப் பிறகு ஆபத்தைஅடைந்தவனாகித் தவிக்கிறானோ அவன்சத்துருக்களால்நன்றாக ஜயிக்கப்பட்டவன்போலானதனால் எவ்வாறு வெற்றியையெண்ணுவான்? எவர்களுக்கு வெற்றிநிமித்தம் ஜயிக்கப்பட்டவர்களும் ஜாக்ரதையுள்ளவர்களுமான சத்ருக்களால் ஸுஹ்ருத்துக்கள் கொல்லப்பட்டமையால் பாவம்நேருமோ அவர்கள் ஜயத்தால்விளங்குகின்றவராயினும் தோற்றவர்களே. யுத்தத்தில் கர்ணிகளையும் நாளீகங்களையும் கோரப்பற்களாகக்கொண்டதும் கத்தியை நாவாகவுடையதும் வில்லாகிற திறக்கப்பட்டவாயினால் பயங்கரமாயிருப்பதும் நாணொலியும் தலத்வனியுமாகிற கர்ஜனத்துடன்கூடியதும் குரோதமுள்ளதும் யுத்தங்களில் ஓடாமலிருக்கிறதுமான கர்ணனென்கிற புருஷஸிம்மத்தினிடத்தினின்றுவிடுபட்ட இந்தச்சூரர்கள்அஜாக்கிரதையினால் கொல்லப்பட்டார்கள். ரதங்களாகிறமடுக்களுள்ளதும் பாணவர்ஷங்களாகிற அலைகளுள்ளதும் ரத்தினங்களால் நான்குபக்கத்திலும் நிறைக்கப்பட்டதும் வாகனங்கள் யுத்தவீரர்கள் இவர்களுடைய கூட்டத்துடன் கூடியதும் சக்திகளும் ரிஷ்டிகளுமாகிறமீன்களோடும் துவஜங்களும் யானைகளுமாகிற முதலைகளோடும்கூடியதும் விற்களாகிற நீர்ச்சுழல்களும்பெரியபாணங்களாகிற நுரைகளுமுள்ளதும் யுத்தமாகிறசந்திரோதயத்தினால் வேகத்துடன் கரைபுரண்டுவருகின்றதும் நாணொலிகளா

---

வேறுபாடம்.

னும் தலத்வனிகளாலும் சக்கரங்களின் நேமிகளாலுண்டுபண்ணப்படு கிற *சத்தங்களாலும் முழக்கமுள்ளதுமான துரோணஸமுத்திரத்தை எவர்கள் நானாவித சாஸ்திரங்களாகிற ஓடங்களால் தாண்டினார்களோ அந்தராஜபுத்திரர்கள் அஜாக்கிரதையினால் கொல்லப்பட்டார்கள். இந்த ஜீவலோகத்தில் மனிதர்களுக்கு அஜாக்கிரதையைவிட மேலான வதம் வேறில்லை. அவதானமில்லாத மனிதனை நான்குபக்கங்களிலும் கார்ய ஸித்திகள் கைவிட்டுவிடுகின்றன. அநர்த்தங்களும் (அவனிடம்) பிரவேசிக்கின்றன. உத்தமமான த்வஜங்களுடைய நுனியாகிற உயர்ந்த புகைக்கொடியுள்ளதும் பாணங்களாகிற ஜ்வாலைகளுடன் கூடியதும், *ஜ்வலிக்கின்றபெரிய பதாகைகளுடன்கூடியதும், பெரிய வில், நாண்கயிறு, விரலுறை, சக்கரங்களின் ஓரம், இவைகளால் உண்டு பண்ணப்பட்ட சத்தத்துடன்கூடியதும் கவசங்களையும் பற்பல சஸ் திரங்களையும் ஹோமதிரவ்யங்களாகக் கொண்டதும் பெரிய சேனை யாகிற உலர்ந்த காட்டில் பற்றிக்கொண்டிருப்பதுமான பீஷ்மராகிற பெரிய காட்டுத்தீயை மஹாயுத்தத்தில் எவர்கள் பற்பல சஸ்திரவே கங்களால் தாண்டினார்களோ அந்த ராஜபுத்திரர்கள் அஜாக்கிரதை யினால் கொல்லப்பட்டார்கள். அஜாக்கிரதையுள்ள மனிதனால் தன மோ ஐசுவர்யமோ விசாலமான கீர்த்தியோ அடைவதற்கு ஸாத்தியப் படா. அவதானத்தினால் எல்லாச் சத்துருக்களையும் கொன்று ஸௌக மாக விருத்தி அடைந்துகொண்டிருக்கிற மஹேந்திரனைப் பார். அஜாக்கிரதையினால் சேஷமில்லாமல் கொல்லப்பட்டவர்களும் இந் திரனுக்கு ஒப்பானவர்களுமான ராஜபுத்திரர்களையும் பௌத்திரர்களை யும் பார். செல்வப்பெருக்குள்ள வியாபாரிகள் ஸமுத்திரத்தைத் தாண்டிச் சிறியநதியில் மூழ்கினாற்போலத் துன்பத்தை அடைந்தார் கள். பொறுமையுள்ளவர்களால் கொல்லப்பட்ட அரசர்கள் ஸம்சய மில்லாமல் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார்கள். பதிவிரதையான அந்தத்திரௌபதியானவள் துக்கஸாகரத்தை எவ்வாறு ஸஹிக்கப் போகிறாளென்று அவளைப்பற்றியே நான் வியஸனிக்கிறேன். பிரா தாக்களும் புத்திரர்களும் பிராயம்சென்றவனும் பாஞ்சாலராஜனு மான பிதாவும் கொல்லப்பட்டார்களென்பதைக்கேட்டு அந்தக் கிருஷ்ணையானவள் நிச்சயமாகப் பிரஜ்ஞையை இழந்து பூமியில் விழுந்து துக்கத்தினால் இளைத்த சரீரத்துடன் வாட்டமடையப் போகிறாள். ஸௌகங்களுக்குத் தகுதியுள்ள திரௌபதியானவள் அவர்களின் சோகத்தாலாகிய துயரத்தை ஸஹிக்கமுடியாமல் தீவ்

பதாகைகளே ஜ்வாலைகள்.

விதமாவளோ? ஞாதிவதத்தினால் நன்றாக வாட்டப்பட்டவளான அந்தப்பாஞ்சாலி நெருப்பினால் நன்றாக எரிக்கப்படுகிறவள்போல அதிகமாக அலறப்போகிறாள்' என்றார்.

துன்பமுற்ற அந்தக்குருராஜரான யுதிஷ்டிரர் இவ்வாறு புலம்பிக்கொண்டு நகுலனைப்பார்த்து, 'நகுல! போ. பாக்கியங்குறைந்தவளான இந்த ராஜபுத்திரியை மாத்ருவர்க்கங்களுடன்கூட இங்கே அழைத்துவா' என்றுசொன்னார். மாத்ரீபுத்திரனான நகுலனும், தர்மத்தைப்பிரதானமாகக்கொண்ட அரசரான யுதிஷ்டிரருடையஅந்த வாக்கியத்தைத் தர்மத்தினால் ஏற்றுக்கொண்டு எந்தஇடத்தில் பாஞ்சாலராஜனுடைய மனைவிகள் இருக்கிறார்களோ தேவியினுடைய அந்த ஆலயத்திற்கு ரதத்தோடு விரைவாகச் சென்றான். அஜமீடனுடைய வம்சத்திலுதித்தவரான யுதிஷ்டிரர் சோகத்தினால் பீடிக்கப்பட்டவராக மாத்ரீபுத்திரனை அனுப்பிவிட்டு அந்த ஸுஹ்ருத்துக்களோடு உரக்க அலறிக்கொண்டு பூதகணங்களால் சூழப்பட்டதான* புத்திரர்களுடைய யுத்தபூமியைக் குறித்துச் சென்றார். அந்தத் தர்மநந்தனர் அமங்களகரமாயுள்ளதும் உக்கிரரூபத்துடன் கூடியதுமான அந்தப் பாசறையில் பிரவேசித்து பூமியில்படுத்திருப்பவர்களும் ரக்தத்தினால் நனைந்த சரீரமுள்ளவர்களும் பிளக்கப்பட்டிருக்கிற தேகமுள்ளவர்களும் நன்றாக அடிக்கப்பட்ட தலையையுடையவர்களுமான புத்திரர்களையும் ஸுஹ்ருத்துக்களையும் நண்பர்களையும் கண்டார். தார்மிகர்களுள் சிறந்தவரும் கௌரவர்களுள் சிறந்தவருமான அந்த யுதிஷ்டிரர், அவர்களைக்கண்டு மிக்க துன்பத்தை அடைந்தவராகி உரக்க அலறினார். பரிவாரங்களுடன்கூடப் பிரஜ்ஞையற்றவராகப் பூமியில் விழுந்தார்'' என்று கூறினான்.

---

## பதினோராவது அத்யாயம்.
### ஐஷீகபர்வம். (தொடர்ச்சி.)

(நகுலன் திரௌபதியை யுதிஷ்டிரரிடம் அழைத்துவந்ததும், அவள் துரோணபுத்திரனுடைய தலையிலுள்ள மணியைக் கொண்டு வரவேண்டியதும், பீமன் நகுலனை ஸாரதியாகக் கொண்ட தேருடன் துரோணபுத்திரனுடைய வதத்தின்பொருட்டுப் புறப்பட்டதும்.)

ஜனமேஜயரே! அந்தயுதிஷ்டிரர்,யுத்தத்தில் அவ்வாறு கொல்லப்பட்டிருக்கிற புத்திரர்களையும் பௌத்திரர்களையும் துணைவர்களை

* 'ஸைன்ய' என்பது மூலம். பீஷ்மபர்வம். 98-ம் பக்கத்திலும் சாந்தி பர்வம் 385-ம் பக்கத்திலும் குறிப்புக்களில் காண்க.

ரும் கண்டு அதிகதுக்கத்தினால் கவரப்பட்டமனத்தையுடையவரா னார்: பிறகு, புத்திரர்களையும் பௌத்திரர்களையும் அந்தப்பிராதாக் களையும் நண்பர்களையும் நினைக்கிறவரான அந்தமஹாத்மாவுக்குப் பெரிதான சோகம்தோன்றியது. அப்பொழுது, கண்ணீர் நிறைந்த கண்களுள்ளவரும் நடுக்கமுற்றவரும் பிரஜ்ஞையையிழந்தவருமான அந்தயுதிஷ்டிரரை மிக்கதுயரமுற்றவர்களான நட்பினர்கள் தேறுத லடையச்செய்தார்கள். அளவுகடந்த பராக்கிரமமுள்ளவர்களான அந்தப்புத்திரர்களனைவருக்கும் விதிப்படி ப்ரேதகார்யங்களைச்செய்து அதிகதுக்கத்தை அடைந்தவரானார். அந்தமுகூர்த்தத்தில் நகுலன் பொன்மாலைகளணிந்த வேகமுள்ளகுதிரைகளுடன் மிக்கதுக்கத்தி னால் பீடிக்கப்பட்டிருக்கிற திரௌபதியுடன் வந்தான். உபப் லாவ்யத்தைஅடைந்திருந்த அந்தக்கிருஷ்ணையோ அப்பொழுது மிகவும் அப்பிரியமான எல்லாப்புத்திரர்களுடைய விநாசத்தையுங் கேட்டுத் துன்பமுற்ற இந்திரியங்களுடன் கூடியவளானாள். அவள், காற்றினால் நாற்புறத்திலும் அலைக்கப்பட்டு நடுக்கமுற்ற வாழைபோல அரசரையணுகிச் சோகத்தினால் பீடிக்கப்பட்டவளாகப் பூமியில் விழுந்தாள். ரோதனம்செய்பவளும் மலர்ந்ததாமரை இதழ்போன்ற கண்களையுடையவளுமான அந்தத்திரௌபதியினுடைய சோகத்தி னால் வாட்டமுற்றிருக்கிறமுகமானது மேகத்தினால் மூடப்பட்ட சந் திரன்போலப் பிரகாசிக்கவில்லை. பிறகு, விழுந்திருக்கிற அவளைப் பார்த்துப் பரபரப்புள்ளவனும் ஸத்யவிக்கிரமனுமான பீமன்எழுந்து இருகைகளாலும் எடுத்தான். அந்தப்பீமஸேனனால் ஸமாதானம் செய் யப்பட்டவளும் கோபமுள்ளவளுமான அந்தப்பாஞ்சாலி அழுது கொண்டு பாண்டவர்களுள் ஜ்யேஷ்டரான யுதிஷ்டிரரைப்பார்த்து இந்தவசனத்தை உரைத்தாள்.

'அரசரே! புத்திரர்களை க்ஷத்திரியதர்மத்தினால் யமனுக்குக் கொடுத்து இந்த அகண்டபூமண்டலத்தைப் பாக்கியத்தால்அடைந்து அநுபவிக்கப்போகிறீர். பாக்கியத்தினால் எல்லாப்பூமியையுமடைந்து எல்லா அஸ்திரங்களிலும் ஸமர்த்தனும் மதயானைபோல் நடப்பவனு மான ஸுபத்ராபுத்ரனை நீர் நினைக்கப்போகிறதில்லை. சூரர்களான புத்திரர்கள் க்ஷத்திரதர்மத்தினால் நாசம்பண்ணப்பட்டார்களென் பதைக்கேட்டு ராஜ்யத்தில் நிலைபெற்றவராகவும் என்னுடன் விளை யாடுகின்றவராகவுமிருக்கிற நீர் (அவர்களை) நினைக்கப்போகிறதில்லை. பாவத்தொழிலுள்ள துரோணபுத்திரனால்செய்யப்பட்டதன்றாகத் தூங் கிக்கொண்டிருந்தவர்களுடையவதத்தைக்கேட்டு நெருப்பானது தனக்

இடமான (கட்டையை) எரிப்பதுபோல அதிகமானசோகம் என்னை எரிக்கிறது.பாண்டவர்களே! பாவத்தைச்செய்தவனும்கெட்டஎண்ண முள்ளவனும் பந்துக்களுடன்கூடினவனுமான அந்தத்துரோணபுத்தி ரனுடையஉயிரானது யுத்தத்தில் வல்லமையை வெளியிட்டு இப்பொழுது கவரப்படாமற்போனாலும் த்ரௌணியானவன் பாபகர்மத்தினுடையபலனை அடையாமற்போவானானாலும் இந்தஇடத்திலேயே ப்ராயோபவேசம்செய்வேன். அதை நன்கு அறிந்துகொள்ளுங்கள்' என்றாள்.பிறகு, புகழுள்ளவளும் யஜ்ஞஸேனனுடைய குமாரியுமான கிருஷ்ணையானவள் பாண்டுவின் புதல்வரும் தர்மராஜருமான யுதிஷ்டிரரைப்பார்த்து இவ்வண்ணம் உரைத்துவிட்டு உட்கார்ந்தாள். தர்மாத்மாவும் அரசரும் பாண்டவருமான அந்தயுதிஷ்டிரர், உட்கார்ந்திருப்பவளும் அழகியகாட்சியையுடையவளும் துருபதகுமாரியும் பிரியமஹிஷியுமான கிருஷ்ணையைப்பார்த்து, 'தர்மங்களை அறிந்தவளே! கல்யாணி! உன்னுடைய அந்தப்புத்திரர்களும் பிராதாக்களும் க்ஷத்திரியதர்மத்தினால் உயிர் துறந்தார்கள்.அவர்களைப்பற்றி நீ துக்கிக்கத்தகுந்தவளல்லை. கல்யாணி! அந்தத் துரோணபுத்திரர்இவ்விடத்தினின்று தூரத்திலிருக்கின்ற செல்லமுடியாத காட்டை அடைந்துவிட்டார். கல்யாணி ! நீ யுத்தத்தில் அவருடையவதத்தை எவ்வாறு நினைப்பாய்?' என்று மறுமொழிகூறினார்.த்ரௌபதி,'துரோணபுத்திரனுடையதலையில் உடன்பிறந்தமணியொன்றிருப்பதாக நான்கேட்டிருக்கிறேன். அந்தப்பாபியை யுத்தத்திற்கொன்று அவனுடையதலையினின்றுஅழுத்து எடுத்துக்கொண்டு வரப்பட்டமணியை நான்பார்த்தால் ஜீவித்திருப்பேன் என்பது என்னுடைய எண்ணம்' என்றாள்.

அழகியகாட்சியுள்ளவளான கிருஷ்ணையானவள் யுதிஷ்டிரராஜரைப்பார்த்து இவ்வாறுசொல்லிவிட்டுக் கோபங்கொண்டவளாகப் பீமஸேனனைக்கையில்தொட்டுக்கொண்டு, 'பீமரே ! நீர் க்ஷத்திரிய தர்மத்தை நினைத்துக்கொண்டு என்னைக்காக்கக்கடவீர். சம்பரனை இந்திரன்கொன்றதுபோலப் பாவத்தொழிலுள்ள அந்தத்துரோண புத்திரனைக்கொல்வீராக. இவ்வுலகில் பராக்கிரமத்தில் உமக்கு ஸமமான மனிதன் ஒருவனாவது இல்லையன்றோ? பெரியதுயரத்தில் அது அவ்வாறென்று எல்லாஉலகங்களிலும் பிரஸித்திபெற்றிருக்கிறது. நீர் வாரணாவதநகரத்தில் பார்த்தர்களுக்கு ஆதாரமானீரன்றோ? அவ்வாறே ஹிடிம்பனைக்கண்டஸமயத்திலும் நீர் (பார்த்தர்களுக்கு) ரக்ஷகரானீர். அவ்வாறே விராடநகரத்தில் கீசகனால் அதிகமாக ஹிம்ஸிக்கப்பட்ட என்னையும் இந்திரன் இந்திராணியைவிடு

டிப்பதுபோலக்கஷ்டத்தினின்று விடுவித்தீர். சத்துருக்களைக்கொல் பவரே! பார்த்தரே! முற்காலத்தில் இந்தப்பெரியகாரியங்களை எவ் வாறு செய்தீரோ அவ்வாறு துரோணபுத்திரனையும் கொன்று ஸுகியாகஇருப்பீராக' என்கிறவாக்கியத்தை உரைத்தாள். அவளு டைய பலவிததுக்கத்தையும் புலம்பலையும்கேட்டு, மகாபலசாலியும் குந்தீபுத்திரனுமான பீமஸேனன் பொறுக்கவில்லை. அவன், அழகிய தும் பர்ணங்களுடனும் நாண்கயிற்றுடனும் கூடியதும் ஆச்சர்யகர மாயிருக்கின்றதுமான தன்வில்லை எடுத்துக்கொண்டு ஸ்வர்ணத்தினால் விசித்திரமானஅங்கங்களுடன்கூடிய பெரிய ரதத்தின்மீது ஏறினான். அவன் நகுலனை ஸாரதியாகஏற்படுத்திக்கொண்டு துரோணபுத்தி ரருடையவதத்தில் நிச்சயமுள்ளவனாகப் பாணத்துடன்கூடினவில்லை நாணொலியுடன்கூடினதாகச் செய்துகொண்டு குதிரைகளை விரை வாக நடத்தினான். புருஷசிரேஷ்டரே! தமது தேஜஸினால் பிரகாசிக் கின்றவைகளும் சீக்கிரமாகச்செல்லுகிற ஸ்வபாவமுள்ளவைகளும் பசுமைநிறமுள்ளவைகளுமான அந்தக்குதிரைகள் (பீமனைச்) சுமந்து கொண்டு விரைவாகச்சென்றன. பாரதரே! தவறுதவனான அந்தப் பீமன் தன்னுடைய பாசறையினின்று ரதத்தின் வழியைப்பிடித்துக் கொண்டு துரோணபுத்திரர்சென்றவழியினால் விரைவாகச்சென்றான்.

---

## பன்னிரண்டாவது அத்யாயம்.

## ஐஷீகபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் அஸ்வத்தாமாவைக் கொல்லச்சென்றதும், மாதவர் அஸ்வத் தாமாவின் கெட்டநடை முதலியவற்றைக்கூறிப் பீமனைக்காக்க வேண்டுமென்று யுதிஷ்டிரருக்குச் சொல்லியதும்.)

அடமதிக்கமுடியாத அந்தப்பீமன் புறப்பட்டுப்போன பிறகு, யாதவர்களுள் உத்தமரும் செந்தாமரைமலர்போன்றகண்களையுடைய வருமான ஸ்ரீ கோவிந்தர் குந்தீபுத்திரரான யுதிஷ்டிரரைநோக்கி, 'பாண்டவரே! உம்முடைய பிராதாவான இந்தப்பீமன் புத்திரசோகத் தினால் கவரப்பட்டவனாக யுத்தத்தில் துரோணபுத்திரரைக்கொல்ல எண்ணி ஒருவனாகவே எதிர்த்துஓடுகிறான். பரதர்களுள்சிறந்தவரே! எல்லாப்பிராதாக்களையுங்காட்டிலும் உமக்குப் பீமனிடத்தில் பிரீதி உண்டு. ஆபத்தையடைந்திருக்கிற அவனை இப்பொழுது நீர் ஏன்காப் பாற்றவில்லை. சத்துருபட்டணங்களை ஜயிப்பவரான துரோணர் அப்பொழுது புத்திரருக்கு உபதேசித்ததும் பிரம்மசிரஸ் என்று பிர

விலித்திபெற்றதும் பூமியையும் எரிக்கக்கூடியதுமான அஸ்திரத்தை மஹாத்மாவும் மஹாபாக்கியசாலியும் எல்லாவில்லாளிகளுக்கும் துவஜமாயிருப்பவருமான ஆசார்யர் பிரீதியுள்ளவராகத் தனஞ்சயனுக்குக் கொடுத்தார். பொறுமையுள்ளவரான புத்திரரும் தனிமையில் துரோணரிடம் அந்த அஸ்திரத்தையாசித்தார். பிறகு, அதிகஸந்தோஷமில்லாதமனத்துடன்கூடியவராகவே புத்திரருக்குச் சொன்னர். துராத்மாவான புத்திரருடைய சபலமானது அறியப்பட்டதாகியது. பிறகு, எல்லாத்தர்மங்களையுமறிந்த அந்த ஆசார்யர் புத்திரரைப் பார்த்து, 'ஐயனே! யுத்தத்தில் மிக்கஆபத்தை அடைந்திருந்தாலும் நீ இந்த அஸ்திரத்தை முக்கியமாக மனிதர்களிடம் பிரயோகிக்கலாகாது' என்று கட்டளையிட்டார். புருஷசிரேஷ்டரே! ஆசார்யரான துரோணர் புத்திரரைப்பார்த்து இவ்வண்ணமுரைத்து மீண்டும் அவரைநோக்கி, 'நீ ஒருபொழுதும் நல்லோர்களுடையவழியில் இருக்கமாட்டாய்' என்று உரைத்தார். துஷ்டாத்மாவான அந்த அஸ்வத்தாமா அப்பொழுது பிதாவினுடைய அந்தவசனமானது அப்பிரியமானது என்றறிந்து மங்களகரமான எல்லாவிஷயங்களிலும் ஆசையற்றவராகச் சோகத்தினால் பூமியை நாற்புறத்திலும் சுற்றினர். குருசிரேஷ்டரே! பாரதரே! பிறகு, அப்பொழுது நீர் வனத்திலிருக்கும் ஸமயத்தில் துவாரகையை அடைந்து விருஷ்ணிகளால் அதிகமாகப் பூஜிக்கப்பட்டவராக வாஸம்செய்தார். ஒருஸமயத்தில் ஸமுத்திரத்திரோரத்தில் துவாரகையின் ஸமீபத்தில் வஸித்துக்கொண்டிருந்த அந்த அஸ்வத்தாமா ஒருவருமில்லாமல் தனித்திருக்கின்றஎன்னை வந்தடைந்து சிரித்துக்கொண்டுவசனிக்கலானர். 'கிருஷ்ணரே! தாசார்ஹரே! அளவில்லாதவிக்கிரமத்துடன்கூடினவரும் பரதவம்சஸ்தர்களுக்காசார்யருமான என்பிதா உக்கிரமான தவத்தைச்செய்து அகஸ்தியரிடத்தினின்றுபெற்றதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பட்டதுமான 'பிரம்மசிரஸ்' என்கிற அஸ்திரமானது என்னுடைய பிதாவினிடத்திற்போலவே இப்பொழுது என்னிடத்திலுமிருக்கிறது. யாதவர்களுள் உத்தமரே! என்னிடத்தினின்று அந்தத்திவ்யாஸ்திரத்தை நீரும் பெற்றுக்கொண்டு எனக்கும் யுத்தத்தில் சத்துருக்களைக் கொல்லுந்திறமைபொருந்திய சக்ரரூபமான அஸ்திரத்தைக்கொடும்' என்றுவேண்டினர். அரசரே! பரதர்களுள் சிறந்தவரே! அஞ்சலிசெய்துகொண்டு பிரயத்தினத்துடன் அஸ்திரத்தை என்னிடத்திலிருந்து யாசிக்கின்றவரான அந்தத்ரௌணிக்குப் பிரீதியையடைந்த நானும் பின்வருமாறு கூறினேன். 'ஒன்றுசேர்ந்திருக்கின்ற

ேவர்களும் தானவர்களும் கந்தர்வர்களும் மனிதர்களும் பதகங்களும் உரகங்களும் என்னுடையவீர்யத்தின் நூற்றில் ஓர் அம்சத்தோடும் ஒப்பாகார். இதோ வில்; இதோசக்தி; இதோ சக்கரம்; இதோ கதை. என்னிடத்தினின்று நீர்விரும்புகின்ற அஸ்திரங்களையெல்லாம் உமக்குக்கொடுக்கிறேன். யுத்தத்தில் எதை எடுப்பதற்கும் பிரயோகிப்பதற்கும் சக்தியுள்ளவராகிறீரோ அதைஎனக்குக்கொடுக்கவேண்டுமென்று உம்மால் விரும்பப்பட்ட அஸ்திரமின்றியே பெற்றுக்கொள்ளும்' என்றேன். மஹாபாக்கியமுள்ள அவர் என்னோடு பொறுமைகொண்டு அழகிய நடுத்துவாரத்துடன் கூடியதும் ஆயிரம்ஆர்களுள்ளதும் வஜ்ரமிழைத்த நடுவுள்ளதும் இரும்புமயமாயிருப்பதுமான சக்ரத்தை என்னிடத்தினின்று விரும்பினார். 'சக்ரத்தைப்பெற்றுக்கொள்ளும்' என்று என்னால் உரைக்கப்பட்ட அந்தத்ரௌணியானவர் உடனே விரைவாகஎழுந்து இடக்கையினால்சக்ரத்தைஎடுக்கலானார். இந்தச்சக்ரத்தை இருக்கிறஇடத்தினின்று அசைப்பதற்குக்கூடச் சக்தியுள்ளவராகவில்லை. பிறகு, இந்தச்சக்ரத்தை வலக்கையினாலும் பிடிப்பதற்கு ஆரம்பித்தார். அந்தக்கையினாலும் பிடித்தும் முழுமுயற்சியினாலும் இந்தச்சக்ரத்தை அசையச்செய்யவில்லை. பாரதரே! பிறகு, அந்தத்துரோணபுத்திரர் முழுவலிமையாலும் இந்தச்சக்ரத்தைத் தூக்குவதற்கோ அசைப்பதற்கோ சக்தியற்றவரானபொழுது அதிகமனவருத்தமுற்றவராக முயற்சிசெய்து களைப்படைந்து திரும்பிவிட்டார். அந்த அபிப்பிராயத்தினின்று மனந்திரும்பினவரும் புத்தியில்லாதவரும் மிக்கமனவருத்தமுற்றவருமான அஸ்வத்தாமாவை நான் அழைத்துப் (பின்வருமாறு) சொன்னேன். 'பிராம்மணரே! தேவர்களுள்ளும் மனிதர்களுள்ளும் சிறந்தஸ்துதியவாதியென்று பிரசித்திபெற்றிருக்கிறவனும், காண்டீவத்தை விலலாகக்கொண்டவனும், வெள்ளைக்குதிரையுள்ளவனும், சிறந்தவானரத்தைக் கொடியாகக்கொண்டவனும், ஜயசீலனும்தேவதேவேசரும் கறுத்தகண்டத்தையுடையவரும் உமையவளுக்குப் பதியுமான ஸாக்ஷாத்சங்கரரை முற்காலத்தில் த்வந்த்வயுத்தத்தில் மகிழ்வித்தவனும், பூமியில்தன்னைக்காட்டிலும் எனக்குமிக்கஅன்புக்குரியவேறுமனிதனில்லாதவனும், மஹாத்மாவும், எவனுக்கு உயிரும் மற்றாதுவும் கொடுக்கத்தகாததாக எனக்கில்லையோ அப்படிப்பட்ட நண்பனும், சிறந்தசெய்கைகளையுடையவனுமான பார்த்தனும் நீர் என்னைநோக்கிச் சொல்லியவாக்யத்தை இதற்குமுன்சொன்னதில்லை. மூடரே! இமயமலையின் சாரலையடைந்த பன்னிரண்டுவருஷகாலம்

நிறைவேற்றத்தக்க மஹாகோரமான பிரம்மசர்யத்தை நிறைவேற்றி என்னால் தவத்தால் அடையப்பட்டவனும் ஸனத்குமாரனுடைய அம்சமாகவிருப்பவனும் தேஜஸ்வியும் பிரத்யும்னனெனப் பிரசித்திபெற்றவனும் எனக்குஸமமான விரதத்தை அனுஷ்டித்தவளான ருக்மிணியிடத்தில் பிறந்தவனுமான புத்ரனுங்கூட திவ்யமானதும் யுத்தத்தில் நிகரில்லாததுமான இந்தமஹாசக்ரத்தை வேண்டவில்லை. அப்படிப்பட்ட இந்தச்சக்ரம் உம்மால் வேண்டப்பட்டது. உம்மால் சொல்லப்பட்ட இந்தச்சக்ரவிஷயமான பிரார்த்தனைவசனமானது அதிகபலமுள்ளவரான பலராமராலும் கதனாலும் ஸாம்பனாலும் ஒருபொழுதும் இதற்குமுன் உரைக்கப்பட்டதில்லை. துவாரகையில்வஸிக்கின்ற மற்றவர்களாலும் மஹாரதர்களானவிருஷ்ணிகளாலும் அந்தகர்களாலும் அல்பமான இந்தவாக்கியம் முன்பு சொல்லப்பட்டதில்லை. அப்படிப்பட்ட இது உம்மால் வேண்டப்பட்டது. ரதிகர்களுள்சிறந்தவரே! ஐயா! நீர் பாரதர்களுடைய ஆசார்யபுத்திரர். எல்லாயாதவர்களாலும் நன்குமதிக்கப்பட்டவர். சக்கரத்தினால் எவனைஎதிர்த்து யுத்தம் செய்யவிரும்புகிறீர்?' என்றேன். இவ்வண்ணம் என்னால்சொல்லப்பட்ட துரோணபுத்திரர் என்னைப்பார்த்து, 'மாதவரே! உமக்குப் பூஜைசெய்து உம்மோடுகூடப் போர்புரியப்போகிறேன். விபுவே! நான் ஜயிக்கப்படத்தகாதவனாகக்கடவேன்' என்கிறஎண்ணத்தினால் தேவர்களாலும் அஸுரர்களாலும்பூஜிக்கப்பட்ட உம்முடையசக்ரம் என்னால்வேண்டப்பட்டது. உம்மிடத்தில் இதைஸத்யமாகச்சொல்லுகிறேன். கேசவரே! கோவிந்தரே! அப்படிப்பட்டநான் துர்லபமான அந்தச்சக்ரத்தை அடையாமலே திரும்பிப்போகப்போகிறேன். என்னை மங்களத்தைஅடையும்படி ஆசீர்வதியும். பூமியில் ஒப்பற்றசக்ரத்தையுடையவரும், போஜர்களுள் உத்தமருமான உம்மால் இந்தப் *பயங்கரமானசக்கரமானது தரிக்கப்பட்டிருக்கிறது. வேறுஒருவன் இதைஅடைந்திருக்கவில்லை'என்று இந்தவசனத்தை மறுமொழியாக உரைத்தார். துரோணபுத்திரர் என்னைநோக்கி இவ்வளவுமட்டிலும் உரைத்து, தேரிழுக்குந்திறமையுள்ள குதிரைகளையும் தனங்களையும் பற்பல ரத்தினங்களையும் பெற்றுக்கொண்டு உரியகாலத்தில்சென்றார். அவர் கோபமுள்ளவர்; கெட்டஎண்ணமுள்ளவர்; சபலர்; க்ரூரர் பிரம்மசிரஸ் என்கிற அஸ்திரத்தையும் அறிந்திருக்கிறார். அவரிடத்தினின்று பீமனைப்பாதுகாக்கவேண்டும்' என்று கூறினார்.

---

* வேறுபாடம்.

## பதின்மூன்ருவது அத்தியாயம்.
### ஐஷீக பர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர்முதலானவர்கள் பாகீரதீதீரத்தில் வியாஸருடைய ஸமீபத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த அஸ்வத்தாமாவைப்பார்த்ததும், அவர் பாண்டவர்கள் அழிவதற்காகப் பிரம்மசிரஸ் என்கிற அஸ்திரத்தைப் பிரயோகித்ததும்.)

எல்லாயாதவர்களுக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறவரான ஸ்ரீவாஸுதேவர், குருசிரேஷ்டரான யுதிஷ்டிரரைப்பார்த்து இவ்வாறுசொல்லிவிட்டுச் சிறந்த எல்லாஆயுதங்களோடும்கூடியதும் தங்கமாலைகளுள்ள காம்போஜதேசத்திற்பிறந்த சிறந்தகுதிரைகள்கட்டியதும் உதயஸூர்யனுக்கொப்பாயிருக்கின்றதும் எல்லாரத்தினங்களாலும்அலங்கரிக்கப்பட்டுள்ளதும்உத்தமமுமான ரதத்திலேறினர். சைப்யம் ஸுக்ரீவமென்கிற (இரண்டுகுதிரைகள்) வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் நுகத்தைத்தாங்கின. மேகபுஷ்பமும் வலாஹகமும் அவற்றின்பின்பக்கத்தைத் தாங்குகின்றவைகளாயின. அந்தரதத்தில் விஸ்வகர்மாவினால் செய்யப்பட்டதும் திவ்யமானதும் ரத்தினங்களாலும் தாதுக்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமான கொடிமரமானது உயரத்தூக்கி நிறுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. அந்தக்கொடிமரத்தில் வைனதேயர் மண்டலாகாரமானகாந்தியுடனும் கிரணங்களுடனும் இருந்தார். ஸத்யஸந்தரான அந்தமாதவருடையகருடத்வஜமானது காணப்பட்டது. பிறகு, எல்லாவில்லாளிகளுக்கும் தலைவரான ஹ்ருஷீகேசர் அந்தரதத்திலேறினர். ரதத்தில்வீற்றிருக்கிறவரும் சார்ங்கத்தை வில்லாகக்கொண்டவருமான தாசார்ஹருக்கு இருபுறத்திலுமிருக்கிற மஹாத்மாக்களான அவ்விருவர்களும் இந்திரனுக்கு இருபுறத்திலும் அஸ்வினீதேவர்கள் விளங்குவதுபோல் விளங்கினர்கள். தாசார்ஹர், இருவரையும் உலகத்தோரால் பூஜிக்கப்பட்ட ரதத்தில் ஏற்றிவைத்துக்கொண்டுவேகமுள்ளசிறந்தகுதிரைகளைக்கொரடாவினால் ஓட்டினர். அந்தக்குதிரைகள் பாண்டுபுத்திரர்களான யுதிஷ்டிரார்ஜுனர்களாலும் யாதவர்களுள்உத்தமரான ஸ்ரீவாஸுதேவராலும் வீற்றிருக்கப்பட்ட உத்தமமானரதத்தை இழுத்துக்கொண்டு விரைவாக மேலேஎழும்பின. சார்ங்கத்தை வில்லாகக்கொண்ட ஸ்ரீவாஸுதேவரை வஹிக்கின்றனவைகளும் விரைவாகச்செல்லுந்தன்மையுள்ளவைகளுமான குதிரைகளுடைய பெரியசப்தமானது பறக்கின்றபக்ஷிகளுடையசப்தம்போலத்தோன்றியது. பரதர்களுள்சிறந்தவரே! ஸமர்

த்தர்களான அந்தவீரர்கள் நல்லவேகமுள்ளவர்களாக ஒருக்ஷணத்தில் மஹாபாகுபலமுள்ளவனும் மகாவில்லாளியுமானபீமஸேனனைத் தொடர்ந்தார்கள். மஹாரதர்கள், குரோதத்தினால்ஜ்வலிக்கின்றவனும் சத்துருவைஸம்ஹரிப்பதில் முயற்சியுள்ளவனுமான பீமஸேனனை அணுகியும் அவனைத்தடுப்பதற்குச்சக்தியற்றவர்களானார்கள். துராத்மாவும் புத்திரர்களைக்கொன்றவருமான அந்த த்ரௌணியானவர், இருப்பதாகக்கேட்ட இடமான பாகீரதிதீரத்துக்கு, காந்தியுள்ளவர்களும் திடமானவில்லையுடையவர்களுமான அவர்களுக்குமுன் அந்தச் சூரனான பீமன் மிக்கவேகமுள்ளகுதிரைகளால் சென்றான். அவன், ஜலஸமீபத்தில் ரிஷிகளோடுவீற்றிருப்பவரும் மஹாத்மாவும் புகழுள்ளவருமானகிருஷ்ணத்வைபாயனரையும் அவர்அருகில்வீற்றிருப்பவரும்குரூரமானசெய்கையையுடையவரும் நெய்யினால் நனைக்கப்பட்டவரும் குசத்தினால் செய்யப்பட்டவஸ்திரத்தை உடுத்தவரும் புழுதிபடிந்த மேனியையுடையவருமான அந்தத்ரௌணியையும் கண்டான். மிக்க கைவன்மையுள்ளவனும் குந்தீபுத்திரனுமான பீமஸேனன் பாணங்களுடன்கூடினவில்லை எடுத்துக்கொண்டு அந்த அஸ்வத்தாமாவை நோக்கி எதிர்த்தோடினான்; 'நில், நில்' என்றும்சொன்னான். பயங்கரமானசெய்கையையுடையவனும் நன்குபிடிக்கப்பட்ட வில்லுடன் கூடினவனுமான அந்தப்பீமஸேனனையும் இவனுக்குப்பின்புறத்தில் ஜனார்த்தனருடையரதத்தில் வீற்றிருக்கின்ற ப்ராதாக்களான யுதிஷ்டிரார்ஜுனர்களையும் பார்த்து த்ரோணபுத்ரர் மனத்தில் துன்பமுற்றவரானார். அச்சமயத்துக்குத்தகுந்ததாக இதனையும் எண்ணினார். மனத்தில் தைர்யமுள்ள அந்தத்ரோணபுத்திரர் திவ்யமான அந்த உத்தமாஸ்திரத்தை நினைத்தார். இடக்கையினால் சீழ்கீர்க்கையும் எடுத்தார். அந்தத்ரோணபுத்ரர் அந்த ஆபத்தையடைந்ததால் திவ்யாஸ்திரத்தை ப்ரயோகித்தார். ராஜஸ்ரேஷ்டரே! பிரதாபசாலியான த்ரோணபுத்ரர் திவ்யாயுதங்களைத் தரித்து நிற்கின்ற அந்தச்சூரர்களைப் பொறுதலாராக ரோஷத்தினால், 'பாண்டவர்களே இல்லாமல் போவதின்பொருட்டு' என்கிறசொல்லை உக்கிரமாகவெளியிட்டு இவ்வாறுசொல்லி எல்லாவுலகங்களுக்கும் அதிகமான மோகமுண்டாவதின்பொருட்டு அந்த அஸ்திரத்தை விடுத்தார். பிறகு, அந்தச்சீழ்கீர்க்கில் காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பான நெருப்பானது மூவுலகங்களையும் எரிக்கப்போவதுபோலத் தோன்றியது.

## பதினொன்காவது அத்யாயம்.

## ஐஷீகபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் கோவிந்தரின் கட்டளையால் அஸ்வத்தாமாவின் அஸ்திரத்துக்கு ப்ரதிஅஸ்திரம் விட்டது.)

மிக்க புஜபலமமைந்த வாஸுதேவர் குறிப்பினாலேயே அந்த த்ரோணபுத்திரருடைய அபிப்பிராயத்தை ஆதிமுதல்அறிந்து அர்ஜுனனைப்பார்த்து, 'அர்ஜுன! அர்ஜுன! பாண்டவ! துரோணரால் உபதேசிக்கப்பட்டதும் உன்உள்ளத்தில் இருக்கின்றதுமான திவ்யாஸ்திரத்துக்கு இப்பொழுது இந்தக்காலம் வாய்த்துவிட்டது. பாரத! யுத்தத்தில் ப்ராதாக்களையும் உன்னையும், காப்பாற்றிக்கொள்வதின்பொருட்டு நீயும் அஸ்வத்தாமாவின் அஸ்திரத்தைத் தடுக்கிற சக்தியுள்ள இந்தஅஸ்திரத்தை ப்ரயோகம்செய்' என்று சொன்னார். பிறகு, சத்ருவீரர்களைக் கொல்பவனான பாண்டவன், கேசவர் இவ்வாறு சொல்லக்கேட்டு, அம்பையும் வில்லையுங் கையில் எடுத்துக்கொண்டு தேரினின்று விரைவாகக் கீழே இறங்கினான். பகைவரை வாட்டுபவனான அர்ஜுனன் முதலில் ஆசார்யபுத்ரருக்கும் பிறகு தனக்கும் எல்லாப்ராதாக்களுக்கும் க்ஷேமமுண்டாகவேண்டுமென்று உரைத்துத் தேவதைகளுக்கும் எல்லா ஆசார்யர்களுக்கும் நமஸ்காரம்செய்து அஸ்திரம் அஸ்திரத்தாலே தணியவேண்டுமென்று மங்களத்தைத் தியானம்செய்து பிரயோகித்தான். பிறகு, காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனால் விரைவாக விடப்பட்ட அந்த அஸ்திரமானது மகாஜ்வாலையுடன் யுகாந்தகாலத்து நெருப்புக்கொப்பாக ஜ்வலித்தது. அவ்வாறே, தீக்ஷ்ணமான தேஜஸுள்ள த்ரோணபுத்திரருடைய அந்த அஸ்திரமும் மிக்கஜ்வாலையுள்ளதும் தேஜோமண்டலத்தால் சூழப்பட்டதுமாக நன்கு ஜ்வலித்தது. ஆயிரம் ஆயிரமாக அனேக இடிகளும் விழுந்தன. எரிநக்ஷத்திரங்களும் விழுந்தன. எல்லாப்பிராணிகளுக்கும் அதிகமான பயம் உண்டாயிற்று. ஆகாயம் சப்தத்துடன்கூடியதும் மிக்க ஜ்வாலாஸமூகங்களால் நிரம்பியதுமாயிற்று. மலைகளுடனும் காடுகளுடனும் மரங்களுடனுங்கூடின பூமிமுழுவதும் நடுங்கியது. பிறகு, அவ்விருவரும் அஸ்திரதேஜஸினால் உலகங்களைப் பயமடையச் செய்துகொண்டு நின்றார்கள். அப்பொழுது அந்தஇடத்தில் நாரதரும் ஸர்வதர்மஸ்வரூபியும் பரதர்களுக்குப்பிதாமஹருமான வியாஸருமாகிய இந்தஇரண்டு

மஹரிஷிகளும் ஒன்றுசேர்ந்து, வீரர்களான அஸ்வத்தாமா தனஞ்சயன் இருவரையும் தணிப்பதற்காகத் தரிசனம்கொடுத்தார்கள். எல்லாத் தர்மங்களையுமறிந்தவர்களும் எல்லாப்பிராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்வதில்விருப்பமுள்ளவர்களுமான அந்த இரண்டுமஹரிஷிகளும் உத்தமதேஜஸோடுகூடியவர்களாகி ஜ்வலிக்கிற அந்த இரண்டு அஸ்திரங்களுடைய மத்தியில் நின்றார்கள். அவமதிக்கத்தகாதவர்களும்கீர்த்தியுள்ளவர்களும் ரிஷிகளுள் சிறந்தவர்களுமான அவ்விருவரும் அந்த இடத்தில் அந்த அஸ்திரங்களுடைய நடுவை அடைந்து ஜ்வலிக்கின்ற இரண்டுநெருப்புக்கள்போல நின்றார்கள். பிராணிகளால் அவமதிக்கத்தகாதவர்களும் தேவர்களாலும் தானவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர்களுமான அவ்விருவரும் உலகங்களுக்கு ஹிதத்தைச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தினால் அஸ்திரதேஜஸைத் தணிப்பதற்காக நின்றார்கள். ரிஷிகள், மஹாஸ்திரங்களை அறிந்தவர்களும் முன்னிருந்தவர்களும் காலம்சென்றவர்களுமான மஹாரதர்களால் எவ்விதத்தினாலும் இந்த அஸ்திரமானது மனிதர்களிடம் பிரயோகிக்கப்படவில்லை. வீரர்களே! இதென்ன ஸாஹஸம்? மிக்கநாசத்தைஉண்டுபண்ணிவிட்டீர்கள்' என்று கூறினர்.

---

## பதினைந்தாவது அத்யாயம்.

## ஐஷீக பர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் வ்யாஸநாரதர்களுடைய விருப்பப்படி தான்விட்ட அஸ்திரத்தைத்திருப்பியதும், மாதவர், உத்தராகர்ப்பத்தில் ஐஷீகாஸ்திரத்தைப்போட்டாலும் மரித்தசிசுவைத் தாம் பிழைப்பிப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்ததும், அஸ்திரத்தைத்திருப்பமுடியலாத அஸ்வத்தாமா வ்யாஸரையும் மாதவரையும் அநாதரணைசெய்து அதனைக் கர்ப்பங்களில் விட்டதும்.)

காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனும் மஹாரதனுமான தனஞ்சயன், அக்னிக்குச்சமமானதேஜஸுள்ள அந்த ரிஷிசிரேஷ்டர்களைக்கண்டவுடனே, ஸமயத்துக்குத்தக்கதைஆலோசித்து விரைவுள்ளவனாகத் திவ்யமான பாணத்தைத்திருப்பியழைத்தான். சிறந்தவனான அர்ஜுனன் அப்பொழுது அஞ்சலிசெய்துகொண்டு அந்த ரிஷிகளைப்பார்த்து, அஸ்திரம் அஸ்திரத்தினால் தணிக்கப்படலாமென்று என்னால் அஸ்திரம் பிரயோகிக்கப்பட்டது. இந்த உத்தமமான அஸ்

திரமானது உபஸம்ஹாரம் செய்யப்படுமோகில் பாவத்தொழிலுள்ள த்ரோணபுத்திரர் எங்களனைவரையும் அஸ்திரதேஜஸினால் மிச்ச மின்றிக்கொளுத்துவரென்பது நிச்சயம். இச்சமயத்தில் எங்களுக்கும் உலகங்களுக்கும் எல்லாவிதத்திலும் நன்மையைத்தேவர்களுக்கு ஸமானர்களானநீங்கள் நன்கு ஆலோசிப்பீர்களாக'என்கிறவசனத்தை உரைத்தான். தனஞ்சயன் இவ்வாறுசொல்லி மறுபடியுமே அஸ் திரத்தை உபஸம்ஹாரம்செய்தான். யுத்தத்தில்அதனுடையஸம்ஹார மானது தேவர்களாலும் செய்யமுடியாதது. யுத்தத்தில்பிரயோகிக்கப் பட்டஅந்த உத்தமாஸ்திரத்தைத்திருப்பியழைத்தலில் பாண்டவனைத் தவிர மற்றவன் ஸாக்ஷாத் இந்திரனாகஇருந்தாலும் வல்லமையுள்ள வனாகான். பிரம்மதேஜஸினின்று உண்டானதும் பரிபக்வமில்லாத புத்தியையுடையவனால் பிரயோகிக்கப்பட்டிருப்பதுமான அந்த அஸ் திரமானது பிரம்மசர்யவிரதமில்லாவிடில் திருப்பியழைத்தற்கு இய லாததன்றோ? பிரம்மசர்யவிரதத்தைஅநுஷ்டியாத எந்த மனிதன் பிரயோகித்து மீண்டும் உபஸம்ஹாரம்செய்கிறானோ மித்திரபந்துவர்க் கங்களுடன்கூடினஅவனுடையதலையை அந்தஅஸ்திரமானது அறுக் கிறது. அர்ஜுனன் பிரம்மசாரியும் விரதமுடையவனும் அடைய முடியாத அந்த அஸ்திரத்தை அடைந்தவனுமாயிருந்தும் அதிக வியஸனத்தினால்பீடிக்கப்பட்டகாலத்திலும்பிரயோகிக்கவில்லை. பாண் டவனை அவன் ஸத்யத்தையும் விரதத்தையும்தரித்தவன்; சூரன்; பிரம்மசாரி; ஆசார்யருக்குவசப்பட்டவன். அதனால், அவன் மறுபடி யும் அஸ்திரத்தை உபஸம்ஹாரம்செய்தான். பிறகு, அந்தத்துரோண புத்திரரும் மத்தியில் நிற்கின்ற அந்தரிஷிகளிருவரையும் நன்கு பார்த்து மறுபடியும் வல்லமையினால் கோரமான அஸ்திரத்தைத் திருப்பியழைக்கச் சக்தியுள்ளவராகவில்லை. அரசரே! யுத்தத்தில் சிறந்தஅஸ்திரத்தைத் திருப்பியழைக்கஇயலாதவரான துரோணபுத் திரர் மனத்தில் தளர்ச்சியுற்றுவியாஸமகரிஷியைப்பார்த்து, 'ரிஷியே! மிக்கதுன்பத்தினால் பீடிக்கப்பட்டவனும் உயிரைக்காக்கவிரும்பின வனுமான என்னால் இந்தஅஸ்திரமானது பீமஸேனனிடத்திலிருந்து உண்டானபயத்தினால் பிரயோகிக்கப்பட்டது. பகவானே! துர்யோ தனனைக்கொல்ல எண்ணங்கொண்டவனும் பொய்யொழுக்கமுள்ள வனுமான இந்தப்பீமஸேனனால் யுத்தத்தில் அதர்மமும் செய்யப்பட் டது. பிராம்மணரே! அதனால் கோபங்கொண்ட என்னால் இந்த அஸ்திரம் விடப்பட்டது. மீண்டும் அதனைத்திருப்பியழைத்தற்கு நான் இந்தச்சமயத்தில் சக்தியற்றவனாயிருக்கிறேன். முனிவரே!

அக்னியினுடைய தேஜஸை அபிமந்த்ரணஞ்செய்து பாண்டவர்களுடைய விநாசத்தின்பொருட்டு நெருங்கமுடியாத இந்தத்திவ்யாஸ்திரமானது என்னால் பிரயோகிக்கப்பட்டதன்றோ? பாண்டவர்களுடைய விநாசத்துக்காகவே ஸங்கல்பித்துப் பிரயோகிக்கப்பட்ட அப்படிப்பட்ட இந்தஅஸ்திரமானது. இப்பொழுது பாண்டுபுத்ரர்களனைவரையும் உயிர்வாழ்க்கையினின்று நழுவச்செய்யப்போகின்றது. ப்ராம்மணரே! கோபத்துக்குவசப்பட்ட மனத்தினால் பாண்டவர்களுடையநாசத்தை விரும்பி யுத்தத்தில் அஸ்திரத்தைப் பிரயோகிக்கின்றனன்றால் இந்தப்பாபம் செய்யப்பட்டது' என்றுகூறினார்.

வியாஸர், 'அப்பா! கற்றறிந்தவனும் குந்தியின் புதல்வனுமான தனஞ்சயன் பிரம்மசிரஸ்என்கிற அஸ்திரத்தை தனக்கு ஹிம்ஸையில்லாமையைக் குறித்துப் பிரயோகித்தானேயல்லாமல் யுத்தத்தில் உன்மீது கோபத்தால் பிரயோகிக்கவில்லை. யுத்தத்தில் உன்னுடைய அஸ்திரத்தை அஸ்திரத்தினாலே தணிக்க எண்ணங்கொண்டவனான அர்ஜுனனால் இந்தஅஸ்திரம் பிரயோகிக்கப்பட்டது. மீண்டும் உபஸம்ஹாரமும்செய்யப்பட்டது. மிக்கபுஜபலமுள்ள தனஞ்சயன் உன்பிதாவின் உபதேசத்தினால் இந்தப் பிரம்மாஸ்திரத்தைப் பெற்றும் க்ஷத்திரியதர்மத்தினின்று அசையவில்லை. இப்படிப்பட்டதைர்யமுள்ளவனும் ஸாதுவும் எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவனும் பிராதாக்களுடனும் பந்துக்களுடனும் கூடியவனும் ஸத்புருஷனுமான இந்த அர்ஜுனனுடையவதத்தைநீயன்செய்யவிரும்புகிறாய்? எந்தஇடத்தில் பிரம்மசிரஸ்என்கிற அஸ்திரமானது உத்தமாஸ்திரத்தால் நாசம்பண்ணப்படுகிறதோ அந்தத்தேசத்தில் மேகமானது பன்னிரண்டுவருஷகாலம் மழைபெய்யாது. இதனைஉத்தேசித்து மிக்க தோள்வலியமைந்த பாண்டவன் சக்தியுள்ளவனாயிருந்தும் பிரஜைகளுக்கு நன்மைசெய்யும் விருப்பத்தினாலே அந்தஅஸ்திரத்தை நாசம்செய்யவில்லை. மஹாபாகுபலமுள்ளவனே! பாண்டவர்களும் நீயும் ராஜ்யமும் நமக்கு எப்பொழுதும் ரக்ஷிக்கத்தக்கவர்களே. ஆதலால், நீ இந்தத்திவ்யாஸ்திரத்தை உபஸம்ஹாரம்செய். உன்னுடையகோபமானது நாசமடையட்டும். பார்த்தர்கள் விபத்துநீங்கினவர்களாகட்டும். ராஜரிஷியான பாண்டவன் அதர்மத்தினால் வெல்வதற்குவிரும்பவில்லை. உன்தலையிலிருக்கிறமணியை இப்பொழுது கொடுத்துவிடு. இதைப்பெற்றுக்கொண்டு பாண்டவர்கள் உனக்கு உயிரைத் திருப்பிக் கொடுப்பார்கள்' என்றுசொன்னார். அச்வத்தாமா, 'பாண்டவர்களால் அடையப்பட்டிருக்கும் ரத்னங்களையும் கௌரவர்களால் அடையப்பட்டிருக்கும்

வேறு ரத்தினங்களையும்விட என்னுடையஇந்தமணியானது இவ்வுல கில் மேன்மைபெற்றிருக்கின்றது. எந்தமணியைத்தரிப்பவனுக்குச் சஸ்திரங்களாலும் வியாதிகளாலும் பசியினாலும் உண்டாகும்பயம் இல்லையோ, தேவர்களிடத்தினின்றாவது அஸுரர்களிடத்தினின்றா வது நாகர்களிடத்தினின்றாவது எவ்விதத்தினாலும் பயம்இல்லையோ ராக்ஷஸகணங்களிடத்தினின்று உண்டாகக்கூடியபயமும் அவ்வாறே திருடர் பயமும்இல்லையோ அப்படிப்பட்டவீர்யமுள்ள இந்தமணியா னது எவ்விதத்தினாலும் என்னால் இழக்கத்தக்கதன்று. பகவானை தேவரீர் என்னைநோக்கிச் சொல்லுகிறதை நான் உடனே செய்வேன். இதோ மணி ; இதோ நான். இஷீகையோ பாண்டுபுத்திரர்களுடைய கர்ப்பங்களிலும் அவ்வாறே உத்தரையினுடைய கர்ப்பத்திலும் விழப் போகிறது' என்றுமொழிந்தார். அந்தச்சமயத்தில் மிக்கமனவருத்த முள்ளவரான வியாஸர் துரோணபுத்திரரைப்பார்த்து, 'இவ்வாறு செய். வேறுவிஷயத்தில் எவ்விதத்தினாலும் புத்திசெலுத்தாதே. பாண்டவர்களுடைய கர்ப்பங்களில் இந்தஅஸ்திரத்தை விட்டுவிட்டு ஒழிவடைவாயாக' என்றுகூறினார். பாண்டவர்களுக்கு நன்மையைச் செய்வதில் முயற்சியுள்ளவரான ஸ்ரீஹ்ருஷீகேசர், 'இனிமேல்உண்டாகப் போகின்ற ஒருகர்ப்பத்தைத்தவிரப் பாண்டவர்களுடைய மற்றக்கர்ப் பங்களில் அஸ்திரம் போடப்படலாம். நான் இந்தப்பாண்டவர்களுக்குப் பிண்டதானங்களைச் செய்கின்றவனும் கீர்த்தியை விருத்திபண்ணு கின்றவனும் ராஜரிஷியும் பரிசுத்தமானகார்யங்களைச் செய்பவனும் அனேகயாகங்களால் தேவர்களைப்பூஜைசெய்பவனுமான இந்தப்புத் திரனைக்கொடுக்கிறேன். இவ்வண்ணம்செய்வீர். எவ்விதத்தினாலும் உம்முடையபுத்தியானது வேறாகச்செய்யத்தக்கதன்று' * என்றார்.

இவ்வாறு சொல்லுகின்றவரும் எல்லா லோகத்வதர்களுள்ளும் உத்தமருமான கோவிந்தரைப்பார்த்துத் துரோணபுத்திரர் அதிக குரோதமுள்ளவராக இவ்விதமாக மறுமொழிகூறலானார். 'கேசவரே! நீர் பக்ஷபாதத்தினால் இப்படிச்சொல்வது ஆகாது. புண்டரீகாக்ஷ ரே! உம்முடையவசனத்தினால் என்னுடையவாக்கியமானது மாறாக ஏற்பட்டுவிட்டது. கிருஷ்ணா! எதை நீர் காப்பாற்றவிரும்புகிறீரோ அந்தவிராடபுத்திரியானஉத்தரையினுடைய கர்ப்பத்தில் என்னால்பிர யோகிக்கப்பட்ட இந்தஅஸ்திரமானது விழப்போகிறது' என்றார். வாஸுதேவர், 'உத்தமாஸ்திரத்தினுடைய வீழ்ச்சியானது ஸபலமாக இப்பொழுது ஆகப்போகிறது. இஷீகையைப்பிரயோகம் செய்வீர்.

---

* அதிகபாடத்தில் அரைஸ்லோகம் விடப்பட்டது.

அபிமன்யுவினுடைய கர்ப்பத்திலிருக்கிற சிசுவானது மரிக்கட்டும். மரித்துப்பிறந்த இந்தச்சிசுவை நான் உயிருள்ளதாகச் செய்வேன். மரித்துப்பிறந்த அந்தச்சிசுவோ தீர்க்கமான ஆயுளை அடையப் போகிறது' என்றார். இவ்வாறு கூறக்கேட்ட துரோணபுத்திரர் புன்சிரிப்புடன் வாஸுதேவரைப் பார்த்து, 'கோவிந்தரே! அஸ்திரத்தினால் எரிக்கப்பட்ட கர்ப்பத்தை நீர் பிழைக்கச்செய்வதானால் அவ்வாறே செய்யும்' என மறுமொழி கூறினார். பிறகு, துரோண புத்திரர் யுத்தத்தில் எடுக்கப்பட்ட உத்தமமான அஸ்திரத்தை வியாஸரை அநாதரம் செய்து கர்ப்பங்களில் விட்டுவிட்டார்.

---

## பதினாறாவது அத்யாயம்.

## ஐஷீகபர்வம். (தொடர்ச்சி.)

(கோவிந்தர் தம்சொல்லைமீறி அஸ்திரத்தைப் பிரயோகித்த அஸ்வத்தாமாவைச் சபித்ததும், வியாஸர் அதை அநுமோதித்ததும், பீமன் அஸ்வத்தாமாவின் தலையிலிருந்த மணியை த்ரௌபதிக்குக் கொடுத்ததும், அவள் விருப்பப்படி அதனை யுதிஷ்டிரர் தலையில் அணிந்ததும்.)

வாஸுதேவர், பாவத்தொழிலுள்ளவரான அஸ்வத்தாமாவினால் அந்தஅஸ்திரமானது (உத்தரையின் கர்ப்பத்தில்) இழுத்து விடப்பட்டதென்பதை அறிந்து ஸந்தோஷத்துடன் அப்பொழுது த்ரௌணியைப் பார்த்து இந்தவாக்கியத்தை உரைக்கலானார். 'உபப்லாவ்ய நகரத்திலிருப்பவளும் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனுடைய மருகியும் விராடனுடைய புத்ரியுமான உத்தரையைப்பார்த்து முற்காலத்தில் ஸத்யவாதியான பிராம்மணர், 'கௌரவர்களனைவரும் க்ஷீணித்தபிறகு, உனக்குப் புத்திரன் உண்டாகப் போகிறான். இதனால், கர்ப்பத்திலிருக்கிற இந்தச்சிசுவுக்குப் *பரிக்ஷித் என்கிற பெயர் உண்டாகப்போகிறது' என்று கூறினார். அந்த ஸாதுவினுடைய அப்படிப்பட்ட இந்த வசனமானது ஸத்யமாகப் போகிறது. மீண்டும், இவர்களுடைய வம்சத்தை உண்டுபண்ணுகிற பரிக்ஷித் என்கிற புத்திரன் உண்டாகப்போகிறான். உம்மையோ கற்றறிந்தவர்களனைவரும் இழிவான 'மனிதரென்றும் பாவி என்றும் அடிக்கடி பாவத்தொழிலைச் செய்பவரென்றும் குழந்தை

---

* ஆதிபர்வம், 215-ம் பக்கம் காண்க.

களுடைய உயிரைப்போக்குகிறவனென்றும் கருதுகிறார்கள். ஆத லால், நீர் இந்தப்பாவச்செய்கையினுடைய பலனை அடைவீராக. மூவாயிரம் வருஷகாலம் இந்தப்பூமியில் ஸஞ்சரிக்கப்போகிறீர். நீர் ஓரிடத்திலும் ஒருகாலும் ஒருவரோடும் ஒருவித ஸல்லாபத்தை யும் அடையாதவராகவும் ஸஹாயமற்றவராகவும் ஜனங்களில்லாத தேசங்களில் ஸஞ்சரிக்கப்போகிறீர். அல்பரே! உமக்கு ஜனங்க ளுடையமத்தியில் வாஸம்ஏற்படாது. பாவத்தில் புத்தியுள்ளவரே! நீர் சீழினாலும் ரத்தத்தினாலும் துர்நாற்றமுள்ளவராகவும் பிரவேசிக்க முடியாத அரண்யத்தை இருப்பிடமாகக்கொண்டவராகவும் இருந்து கொண்டு ஒருவராக நெடுங்காலம் பூமியில் ஸஞ்சரிக்கப்போகிறீர். சூரனான பரிக்ஷித்தோ நீண்ட ஆயுளை அடைந்து சிறந்த விரதத்தை யும்கைக்கொண்டு சரத்வானுடைய குமாரரான கிருபரிடத்தினின்று எல்லா அஸ்திரங்களையும் அடையப்போகிறான். தர்மாத்மாவான பரிக்ஷித்தானவன் உத்தமாஸ்திரங்களை அறிந்து க்ஷத்திரியதர்மத்திற் குரிய விரதத்தில் நிலைபெற்று அறுபது வருஷகாலம் பூமியைப் பரிபாலனம் செய்யப்போகிறான். மிக்ககெட்டபுத்தியுள்ளவரே! இதற்குமேல் மிக்க புஜபலமுள்ள பரிக்ஷித்என்கிற அரசன் நீர் பார்த் துக்கொண்டிருக்கும்பொழுதே குருராஜனாகப்போகிறான். நராதம ரே! சஸ்திராக்னிதேஜஸினால் எரிக்கப்பட்டிருக்கிற அவனை நான் பிழைப்பு மூட்டப்போகிறேன். என்னுடைய தவம் ஸத்யம் இவற் றின் வீரியத்தைப்பாரும்' என்றார். வியாஸர், 'எம்மை அனாதரித்து நீ பயங்கரமான கார்யம் செய்தமையாலும் பிராம்மணனாக இருந்தும் அநியாயத்தில் நிலைபெற்ற உனக்கு இந்தச்செய்கை ஏற்பட்டமையா லும் தேவகீநந்தனர் சொல்லிய உத்தமமான வசனமானது உனக்கு உலகம் உள்ளவரையில் ஸம்பவிக்கப்போகிறது. அல்பமான செய் கையுள்ளவனே! போ' என்று சொன்னார். அச்வத்தாமா, 'பிராம் மணரே! இவ்வுலகிலுள்ள மனிதர்களுள் (நானும் ஒருவனாக) உம் மோடுகூடவே இருப்பேன். தேவரீரும் ஸத்யவாக்குள்ளவராகலாம். இந்தப் புருஷோத்தமரும் ஸத்யவாக்குள்ளவராகட்டும்' என்றார். பிறகு, துரோணபுத்திரர் மஹாத்மாக்களான பாண்டவர்களுக்கு மணியைக்கொடுத்துவிட்டு மனவருத்தமடைந்து அவர்கள் அனை வரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கானகம் சென்றார். பாண்டவர்களும் கேசவரோடுகூடியவர்களாக, வியாஸர் நாரதர் பர்வதர் என்னும் அந்தரிஷிகளை அபிவாதனம் செய்து துரோண புத்திரருடைய உடன்பிறந்ததான மணியை எடுத்துக்கொண்டு

ப்ராயோபவேசத்துடனிருப்பவளும் மனஉறுதியையுடையவளுமான திரௌபதியைநோக்கி விரைவுடன் ஓடினார்கள். பிறகு, புருஷஸிரேஷ்டர்களான அந்தப்பாண்டவர்கள் வாஸுதேவரோடுகூடக் காற்றுப்போன்றவேகமுள்ள நல்லகுதிரைகளால் மீண்டுமே பாசறையைநோக்கிச்சென்றார்கள். அதிகமனவருத்தமுற்றவர்களான மஹாரதர்கள் விரைபவர்களாக ரதங்களினின்று இறங்கி அஸ்வத்தாமாவைவென்றதனால் ஸந்தோஷமுள்ளவளும் துயரப்படுகிறவளுமான திரௌபதியைக் கண்டார்கள். அவர்கள் கேசவருடன்கூடியவர்களாக, ஆனந்தத்தை இழந்தவளும் துக்கத்தையும் சோகத்தையுமுடையவளுமான அந்தத்திரௌபதியை அணுகி நாற்புறங்களிலும் சூழ்ந்துநின்றார்கள்.

பிறகு, அரசரால்அநுமதிகொடுக்கப்பட்ட மஹாபலசாலியான பீமஸேனன், அந்தத் திவ்யரத்தினத்தைக்கொடுத்து இந்தவசனத்தையும் உரைக்கலானான். 'கல்யாணி! இந்தமணி உனக்காகக் கொண்டுவரப்பட்டது. உன்னுடைய புத்திரர்களைக் கொன்றவன் ஜயிக்கப்பட்டான். எழுந்திரு. சோகத்தைவிலக்கி, க்ஷத்திரிய தர்மத்தை நினைத்துக்கொள். கறுத்தகண்களையுடையவளே! பயந்தவளே! ஸமாதானத்தின்பொருட்டு வாஸுதேவர் புறப்பட்ட தருணத்தில் மதுஸூதனரான அவரிடத்தில், 'கோவிந்தரே! அரசர் ஸமாதானத்தை விரும்புவராகில் எனக்குப்பர்த்தாக்களும் இல்லை; புத்திரர்களும் இல்லை; ப்ராதாக்களும்இல்லை; நீரும் இல்லை' என்னும் வாக்கியங்களை நீ சொன்னாய். புருஷோத்தமரைப் பார்த்து நீ சொல்லியவைகளும் க்ஷத்திரிய தர்மங்களுக்கு அநுகூலமாயிருப்பவைகளுமான அந்த வாக்கியங்களை நீ நினைத்துப்பார்க்கவேண்டும். ராஜ்யத்துக்கு விரோதியும் பாவியுமான துர்யோதனன் கொல்லப்பட்டான். துடிக்கின்ற துச்சாஸனனுடைய ரக்தமும் என்னால் பானம்பண்ணப்பட்டது. பகையினுடையகடன் தீர்ந்துவிட்டது. சொல்ல எண்ணங்கொண்டவர்களுடைய நிந்தைக்கு நாம் பாத்திரமாக வில்லை. துரோணபுத்திரன் ஜயிக்கப்பட்டுப் பிராம்மண்யத்தினாலும் கௌரவத்தினாலும் விடப்பட்டான். தேவி! இவனுடையகீர்த்தி விழுந்துவிட்டது. சரீரம்மாத்திரம் மிகுக்கப்பட்டது; மணியையிழக்கும்படியும் செய்யப்பட்டான்; பூமியில் ஆயுதத்தைப்போடும்படியும் செய்யப்பட்டான்' என்றுகூறினான். த்ரௌபதி, 'கடனில்லாமையைமாத்திரம் அடைந்தேன். குருபுத்திரர் எனக்குக் குரு. தோஷமற்ற அவர் இந்த மணியை முடியில் வைத்துக்கொள்வதற்குத் தகுந்தவர்' என்றாள். பிறகு, அரசர் அந்தமணியை வாங்கி த்ரௌபதியினுடைய வசனத்தி

னாலும் குருஅனுபவித்துவந்ததென்பதனாலுமே அப்பொழுது முடியிலேயே வைத்துக்கொண்டார். பிறகு, பிரபுவான அந்தஅரசர் திவ்யமான உத்தமரத்தினத்தைத் தலையில் தரித்துக்கொண்டு சந்திரனுடன்கூடினமலைபோல் அப்பொழுது விளங்கினார். பிறகு, புத்திரசோகத்தால் பீடிக்கப்பட்டவளும் மனவுறுதியுள்ளவளுமான த்ரௌபதியானவள் எழுந்திருந்தாள். மிக்கபுஜபலமுள்ள தர்மராஜரும் மாதவரைப் (பின்வருமாறு) வினவினார்.

---

## பதினேழாவது அத்யாயம்.

## ஐஷீகபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்ரர் ஒருவரானஅஸ்வத்தாமா பலரைக்கொல்ல வல்லவரானதைப்பற்றி மாதவரைக்கேட்க, அவர் சிவனருளே காரணமென்றுசொல்லி அவர்மஹிமையையும் கூறியது.)

தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது அந்தமூன்றுரதிகர்களாலே எல்லாப்போர்வீரர்களும் கொல்லப்பட்ட விஷயத்தில், யுதிஷ்டிரராஜர் துக்கித்துக்கொண்டு வாஸுதேவரைப்பார்த்து, 'கோவிந்தரே! பாவியும் அல்பரும் வஞ்சகபுத்தியுள்ளவருமான த்ரோணபுத்திரரால் மகாரதர்களான என்னுடையபுத்திரர்களெல்லாரும் எவ்வாறுகொல்லப்பட்டார்கள்? அவ்வாறே, அஸ்திரங்களில் தேர்ச்சியுள்ளவர்களும் விக்கிரமசாலிகளும் யுத்தங்களில் ஓடாதவர்களுமான துருபதனுடையகுமாரர்களும் த்ரோணபுத்திரரால் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? சிறந்தவில்லாளியானத்ரோணர் யுத்தத்தில் எவனுக்குமுகங்கொடுக்க (=எதிர்க்க) இல்லையோ ரதிகர்களுள்சிறந்த அந்தத்ருஷ்டத்யும்னனை அந்தத்ரோணபுத்திரர் எவ்வாறுகொன்றார்? புருஷர்களுள்சிறந்தவரே! குருபுத்திரர் ஒருவராயிருந்துகொண்டு யுத்தத்தில் நம்மைச்சேர்ந்தவர்களனைவரையும்கொன்றாராகையால் அவ்விரத் திறமையுள்ளஎன்னசெய்கை அவரால்செய்யப்பட்டது?' என்று வினவினார். ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

'அந்தஅஸ்வத்தாமா தேவதேவர்களின் ஈஸ்வரனுக்கும் ஈஸ்வரரும்குறைவற்றவருமானமஹாதேவரைச்சரணமடைந்தார்;இது நிச்சயம். அதனால், துரௌணியானவர்ஒருவராயிருந்துகொண்டு அனேகர்களைக்கொன்றார். மஹாதேவர் பிரஸன்னராவாராகில் மரணமில்லாமையையும் அளிப்பார்.இந்திரனையும் நாசம்செய்யத்தக்க வீர்யத்தையும் அவர் அளிப்பார்.பாரதர்களுள் சிறந்தவரே! நான் உள்ளபடிமஹாதேவ

ரை அறிகிறேன். புராதனமாகவும் பற்பலவிதமாகவுமுள்ள இவருடையசெய்கைகளையும்அறிகிறேன். பாரதரே! இவர்பூதங்களுக்கு ஆதியாகவும் மத்தியமாகவும் அந்தமாகவுமிருக்கிறானன்றோ? இவ்வுலக மனைத்தும் இவருடையசெய்கையினாலேயே நடைபெற்றுவருகிறது. பிரபுவான பிதாமஹர் இவ்வண்ணம் பூதங்களைஸ்ருஷ்டிக்க எண்ணங் கொண்டு முதலில் இவரைப்பார்த்து, 'காலவிளம்பமின்றிப் பூதங்களை ஸ்ருஷ்டிசெய்'என்றுசொன்னார். அப்பொழுது தீர்க்கதர்சியும் மிக்க தவமுள்ளவரும்பசுமையான தலைமயிரையுடையவருமான பிரபுவானவர், 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு ஜலத்தில் மூழ்கிக் கொண்டு நெடுங்காலம் தவம்புரிந்தார். பிறகு, பிதாமஹர் நெடுங்காலம் இவரைஎதிர்பார்த்துஸர்வபூதங்களையும்ஸ்ருஷ்டிக்கின்றவரான வேறு ஒருவரை மனத்தினால்உண்டுபண்ணினார்., அவர் ஜலத்தில் தூங்கிக் கொண்டிருக்கிற பிராதாவான கிரிசரைப்பார்த்து, 'எனக்கு முந்திப் பிறந்தவன் வேறுஒருவன் இல்லாமலிருந்தால் நான் பிரஜைகளை உண்டு பண்ணுகிறேன்' என்றுசொன்னார். பிதாவானபிதாமஹர் அவரைப்பார்த்து 'உன்னைக்காட்டிலும் வேறு ஓர் ஆண்பிள்ளை மூத்தவனில்லை. இந்தஸ்தாணு ஜலத்தில் முழுகிவிட்டான். மனவமைதியுடன்கூடியவனாகப் பிரஜைகளைஸ்ருஷ்டிசெய்வாயாக' என்றார். எந்தப்பூதங்களால் நான்குவகையான இந்தப்பிராணிக்கூட்டமனைத்தையும் படைத்தாரோ அந்த ஏழுபூதங்களைத் தக்ஷப்பிரஜாபதியானவர் விரைவாகஸ்ருஷ்டித்தார். அரசரே! அந்தப்ரஜைகளனைத்தும்ஸ்ருஷ்டிக்கப்பட்டமாத்திரத்திலேயே பசியுள்ளவைகளாகி ஸ்ருஷ்டிகர்த்தரான தக்ஷரைப்பக்ஷிக்க எண்ணங்கொண்டு அப்பொழுது விரைவாக ஓடின. பக்ஷிக்கப்படுகின்ற அந்தத்தக்ஷர் பாதுகாவலை விரும்பினவராக,'பகவானனதேவரீர் இந்தப்பிரஜைகளிடமிருந்து என்னைக்காப்பாற்ற வேண்டும்.இந்தப்பிரஜைகளுக்குஜீவனம்ஏற்படுத்தவேண்டும்' என்றுபிதாமஹருக்கருகில் ஓடிவந்தார்.பிறகு, அந்தப்பிரஜைகளுக்கு அன்னத்தையும் ஓஷதிகளையும் ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் மிக்கவலிமையுள்ளபிராணிகளுக்கு வலிமைகுறைந்தபிராணிகளையும் கொடுத்தார். உணவைஉட்கப்பெற்ற அந்தப்பிரஜைகளோமகிழ்ச்சி அடைந்து வந்தபடிசென்றன.வேந்தரே! பிறகு,பிரஜைகள் தம் ஜாதிகளில் பிரீதியுள்ளவைகளாக விருத்தி அடைந்தன. பிராணிக்கூட்டம் விருத்தி அடைந்து தேவாஸுரர்களும் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கவே, அப்பொழுது, மூத்தவரான அந்தஸ்தாணுவானவர் ஜலத்தினின்று எழுந்திருந்தார்; இந்தப்பிரஜைகளையும் கண்டார். ஸ்ருஷ்

நீக்கப்பட்டவைகளும் தம்தேஜஸினால் விருத்தியடைந்திருப்பவைகளுமான பற்பலரூபமுள்ளபிரஜைகளைக்கண்டு அதிககோபங்கொண்டார். தம்முடையலிங்கத்தையும் பூமியில்விழும்படிசெய்தார். அவ்வாறு வீழ்த்தப்பட்ட அந்தலிங்கமானது பூமியில் அப்படியே நேரில் நின்றது. அழிவற்றவரான பிரம்மதேவர் நல்லவசனங்களால் போகத்தைத்தணிக்கின்றவராக அந்தஸ்தாணுவைப்பார்த்து,'சர்வரே! ஜலத்தில் நெடுங்காலமாக இருந்த உம்மால் என்னகாரியம் செய்யப்பட்டது? என்னகாரணத்திற்காக இந்தலிங்கமானது அறுக்கப்பட்டுப் பூமியில் நாட்டப்பட்டது?' என்று வினவினர். லோககுருவான அந்த ஸ்தாணுவானவர் அவ்வாறு கோபமுள்ளவராக குருவான நான்முகரைப்பார்த்து,'வேறொருவனால் இந்தப்பிரஜைகள் படைக்கப்பட்டன. இந்தலிங்கத்தினால் என்னசெய்யப்போகிறேன்? பிதாமஹரே! பிரஜைகளின்பொருட்டு என்னுடையதவத்தினால் அன்னம் அடையப்பட்டது. ஓஷதிகள் இவ்வண்ணம் எப்பொழுதும் உண்டாகி விருத்தியடைவதோடு பிரஜைகளுமாகப்போகின்றன' என்றுமறுமொழி கூறினர். மிக்கதவமுடையவரான அந்தச்சங்கரர் க்ரோதத்துடன் இவ்வண்ணம் உரைத்து மனவமைதியில்லாதவராகித் தவம்புரிவதின்பொருட்டு முஞ்சவான்என்கிற மலைச்சாரலை அடைந்தார்.

---

## பதினெட்டாவது அத்யாயம்.

### ஐஷீகபர்வம். (தொடர்ச்சி.)

(சங்கரருடையகோபத்தாலும் அருளாலும் 'தேவர்களுக்கு யஜ்ஞங்கள் அழிந்ததும், உண்டானதும், அந்தஈச்வரரே அச்வத்தாமாவின் மூலமாக யுதிஷ்டிரரின் புத்ரன்முதலியோரைக் கொன்றதும்.)

பிறகு, தேவயுகம்சென்றபிறகு, தேவர்கள் யாகத்துக்குரிய வேதத்தைஆதாரமாகக்கொண்டுவிதிப்படியாகம்செய்வதற்கு விருப்பமுடையவர்களாக ஸங்கல்பித்தார்கள். பிறகு, அவர்களும் யாகத்துக்குத்தகுதியுள்ளவர்களான தேவதைகளையும் ஸாதனங்களையும் ஹவிஸுகளையும் யஜ்ஞத்துக்குத்தக்கதான திரவியத்தையும் ஸன்னத்தம் செய்தார்கள். நராதிபரே! அந்தத்தேவதைகள் ருத்திரரை உள்ளபடி அறியாமல்தேவரும்ஸ்தாணுவுமானஅவருக்குப் பாகத்தைஏற்படுத்தவில்லை, யாகத்தில் தேவர்களால் பாகமானது ஏற்படுத்தப்படாமலிருக்கவே,தோலாடையுடுத்தவரானஈச்வரர்தவத்தினால்யஜ்ஞத்தைஅடைய

எண்ணங்கொண்டு முதலில் வில்லை உண்டுபண்ணினார். *லோகீயஜ்ஞம், கிரியாயஜ்ஞம், ஸநாதனமான் கிருஹயஜ்ஞம், பஞ்சபூதந்ருயஜ்ஞம் இந்நான்கினால் இந்த உலகமனைத்தும் உண்டாயிற்று. ஜடையுடையவரான மஹாதேவர் லோகயஜ்ஞங்களாலும் ந்ருயஜ்ஞங்களாலும் வில்லைப்படைத்தார். பாரதரே! உண்டுபண்ணப்பட்ட அவருடையவில்லானது அறுபதுமுழ நீளமுள்ளதாகஇருந்தது. அந்தவில்லுக்கு வஷட்காரமானது நாண்கயிறாகஇருந்தது. அந்தவில்லினுடையஉருவத்தில் நான்குயஜ்ஞாங்கங்கள் இருந்தன. பிறகு, கோபமுள்ளமஹாதேவர் அந்தவில்லை எடுத்துக்கொண்டு தேவர்கள் யாகம்செய்தவிடத்திற்கே வந்தார். வில்லைக்கையிலுடையவரும் பிரம்மசாரியும் குறைவற்றவருமான அந்தச்சிவபிரானைக்கண்டு பூதேவியானவள் பயந்தாள்; மலைகளும் நடுங்கின; காற்றும் வீசவில்லை; மூட்டப்பட்ட அக்னியும் ஜ்வலிக்கவில்லை; ஆகாயத்தில் நக்ஷத்திரமண்டலமானது பயமடைந்து அதிகமாகச்சுற்றியது; சூரியனும் பிரகாசிக்கவில்லை; சந்திரன் ஒளியைஇழந்தமண்டலத்தையுடையவனானான்; ஆகாயம்முழுவதும் இருள்சூழ்ந்ததும் மூடப்பட்டதும் ஆகியது. பிறகு, அவமதிக்கப்பட்டதேவர்கள் விஷயங்களை அறியவில்லை. அந்த யஜ்ஞமானது பிரகாசிக்கவில்லை. தேவதைகள் அவ்வாறு பயந்தார்கள். பிறகு, அவர் பயங்கரமான பாணத்தினால் யஜ்ஞத்தை மார்பில்அடித்தார். பிறகு, யஜ்ஞமானது மிருகமாகஆகி அக்னியுடன்கூடி ஓடியது. யுதிஷ்டிரரே! ருத்திரரால் ஆகாயத்தில் பின்தொடரப்படுகின்றதான அந்த யஜ்ஞமிருகமானது அந்தரூபத்துடனேயே ஆகாயத்திலிருந்துகொண்டு விசேஷித்துப்பிரகாசித்தது. பிறகு, யஜ்ஞம்ஓடிவிடவே, தேவர்களுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தேவர்கள் நினைவுதவறவே ஒன்றும் அறியப்படவில்லை. கோபங்கொண்டமுக்கண்ணர், ஸவிதாவினுடைய இருகைகளையும் பகனுடைய இருகண்களையும் பூஷாவினுடைய பற்களையும் வில்லின்நுனியினால் அடித்து நாசம்செய்தார். பிறகு, தேவர்கள் வேகத்துடன் ஓடினார்கள். யஜ்ஞாங்கங்களும் நான்கு பக்கங்களிலும் ஓடின. சிலர் அங்கேயே சுழன்றுகொண்டு உயிரை இழந்தவர்கள்போலானார்கள். அந்த நீலகண்டரோ அவை அனைத்

---

* லோகயஜ்ஞம் (=லோகேஷணை) = எல்லாரும் என்னை நல்லவனாகவே அறியவேண்டுமென்கிற வாஸனாரூபம்; 2. க்ரியாயஜ்ஞம் = கர்ப்பாதானாதிஸம்ஸ்காரம்; 3. க்ருஹயஜ்ஞம் = பத்னியினால் ஸாத்தியமான அக்னிஹோத்ரம் முதலானவை; 4. பஞ்சபூதந்ருயஜ்ஞம் = ஐந்துபூதங்களுடைய குணங்களான சப்தாதிகளால் மனிதர்களுக்கு உண்டாகிற ப்ரீதி.

ந்தையும் ஓட்டிவிட்டும் நகைத்தும் வில்லின் நுனியைப்பிடித்துக் கொண்டு பிறகு தேவர்களைத்தடுத்தார். பிறகு, தேவர்களால் சொல்லப்பட்டவாக்கானது அந்தவில்லினுடையநாண்கயிற்றை அறுத்தது. மன்னரே! பிறகு, பிரகாசிக்கின்ற அந்தவில்லானது விரைவாக நாண் அறுக்கப்பட்டதாகியது. பிறகு, தேவர்கள் வில்லைஇழந்தவரான தேவசிரேஷ்டரை யஜ்ஞத்துடன்கூடச் சரணமடைந்தார்கள். பிரபுவும் அருள்புரிந்தார். பிரபுவே! பிறகு, பிரஸன்னரானபகவான் ஸமுத்திரத்தில் கோபத்தைவிட்டார். அந்தக்கோபமானது நெருப்பாகி எப்பொழுதும் ஜலத்தைவற்றச்செய்கிறது. பாண்டவரே! பகவான் சங்கரர் பகனுக்கு இருகண்களையும் அவ்வாறே ஸவிதாவுக்கு இரு கைகளையும் பூஷாவுக்குப் பற்களையும்கொடுத்து மீண்டும் யஜ்ஞங்களையும் கொடுத்தார். பிறகு, இவை அனைத்தும் மறுபடியுமே நல்ல நிலைமையை அடைந்தன. தேவர்கள் இவருக்கு எல்லாஹவிஸுகளையும் பாகமாகஏற்படுத்தினார்கள். பிரபுவே! அவர் கோபித்தவுடனே உலகனைத்தும் நல்லநிலைமையை இழந்ததாகியது. பாரதரே! அவர் பிரஸன்னராகவே, உலகம் மீண்டும் நல்லநிலைமையை அடைந்தது. அந்தமஹாதேவரால் மஹாரதர்களான உம்முடைய அந்தப்புத்திரர்களனைவரும் மற்ற அநேகசூரர்களும் பாஞ்சாலனுடைய போர்வீரர்களும் கொல்லப்பட்டார்கள். அது மனத்தில் சிந்திக்கத்தக்கதன்று. அது துரோணபுத்திரரால் செய்யப்பட்டதன்று. அது மஹாதேவருடைய அருள். அடுத்துச் செய்யப்படவேண்டியகார்யத்தைச் செய்வீராக'என்று கூறினார்.

ஐஷீகபர்வம் முற்றிற்று.

## ஸௌப்திகபர்வம் முற்றிற்று.